
ஆன்மீக சஞ்சிகை

# சிவ ஒளி

சித்திரை 2020

மாதாந்த மின்னிதழ்



## சுவாமி விபுலாநந்தர் பற்றிய பன்முக ஆய்வுகள்



## இலங்கையின் சைவ, பௌத்த சமூக நல்லுறவின் அடையாளம்

முதலாவது தமிழ் பௌத்த துறவி
வண.பொகவந்தலாவை
ராகுல தேரரை
அடிப்படையாகக் கொண்ட ஆய்வு



## வானவன் மாதேவி ஈச்சரம்

சிவ ஒளி

மாதாந்த மின்னிதழ்

ஏப்ரல் 2020

ஆன்மீக மின்னிதழ்– ஒளி– 4

சிவஒளி ஆலோசனை தென்கயிலை ஆதீனம் குரு முதல்வர் அகத்தியர் அடிகளார்

**தலைமை ஆசிரியர்**

அனைதுலக ஒருங்கிணைப்பாளர்
தென்கயிலை ஆதினம்
தென்கயிலை சிவா (பிரான்ஸ்)

**உதவி ஆசிரியர்**

நாட்டியக் கலைமணி
திருமதி.பவானி குகப்பிரியா (கொழும்பு)

**படைப்புரிமை**



சிவஒளியில் வெளிவரும் கட்டுரைகள் யாவும் படைப்பாளிகளுக்கே உரித்துடையதாகும்.



**வடிவமைப்பு**

மோகன ஷாந்தி



தென்கயிலை ஆதீனம்
இல-36 சிவன் மலை பீலியடி
கன்னியா, திருகோணமலை.
இலங்கை.

**குரு முதல்வர்:**

தவத்திரு அகத்தியர் அடிகளார்
00 94 77 509 8157.

**இளைய பட்டம்:**

திருமூலர் தம்பிரான் அடிகளார்.
00 94 77 173 1728

**தொடர்புகளுக்கு:**

தென்கயிலை சிவா
00 33 6 13 15 93 49
thenkailaisiva@gmail.com


# ஒளியில் ஒளியாகி... உயிரில் உயிராகி

## சிவஒளி பிரகாசம் உங்களில் பரவிச் செல்லட்டும்....

உலக ஒழுங்கு மாற்றம் கண்டு வருகிறது. யுத்த தேசங்களில் வெடிச்சத்தங்களின்றி அவலங்கள் வெறுமையாகிவிட்டது. வான் பரப்பெங்கும் இரைச்சல்களின்றி இருளகன்ற நிலை. பெருந்தெருக்கள் எங்கும் நிம்மதிப் பெருமூச்சு. பிற்பொக்கட் அடிப்பவர்கள் கூடி பெரு முடக்கம். ஒட்டு மொத்தத்தில் அண்டம் முழுவதும் அமைதியாக.... ஐந்தறிவு சீவன்கள் கூடி மனிதனை ஆச்சரியமாகப் பார்க்கும் விழிப்பு நிலை...

இறைவா இந்நிலை நிரந்தரமாக வேண்டும்.

ஆனால் ....

மனிதன் மனது மட்டும்.... ? இறைவனிடம் தான் அறிந்து கொள்ள முடியும்.

ஒரு நாள் இடைவெளிக்குள் ..... கால் கடுக்க ஒரு நீண்ட வரிசையில்.... குழந்தைக்குப் பால் வாங்குவதற்கு அல்ல... உணவுப் பொருட்கள் வாங்குவற்கு அல்ல.... கலாச்சாரப்பட்டினம் என்று சொல்லப்படும் யாழ்ப்பாணத்தில் .... சோமபானத்திற்கான நீண்ட வரிசை அது.

யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைப்பேன் ... மனம் வேதனைப்படுகிறது. யாரை நோவது ? வரிசையில் நின்றவர்களையா? வரிசையில் வரக் காரணமாகவிருந்த, சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தும் மதுச்சாலை உரிமையாளரையா ?

சரி ... மறப்போம்.. மனித நேயம் காப்போம்..

கொரோனா கொடுத்த மரண வலிகளும், கொடுந்துயர்களும் சொல்லில் அடங்காதவை. தொற்று உறுதியான நேரத்தில் இருந்து.... உறவுகள் யாரும் பார்க்க முடியாது. வெறுமை கலந்த தனிமை. நாளை என்ன

● தென்கயிலை சிவா

**படைப்பாளிகள்:**

- தமிழ் நிதி அருணா செல்லத்துரை - (வவுனியா)
- கலாநிதி பாலசுந்தரம் இளையதம்பி - (கனடா)
- கலாநிதி பால சிவகடாட்சம் - (கனடா)
- கலாபூசணம் நா.வை.குமரிவேந்தன் - (கிளிநொச்சி)
- சித்தமருத்துவர் தியாகராஜா சுதர்மன்- (மானிப்பாய்)
- திருமதி பவானி சற்குணசெல்வம் - (நெதர்லாந்து)
- மருத்துவதாதி சிவகுமாரி ஜெயசிம்மன் வினாசித்தம்பி (நெதர்லாந்து)
- சித்தமருத்துவர் எம்.ஏ உசைன் - (சென்னை)
- தென்கயிலை ஞானக்கவி தேசபாரதி இராஜலிங்கம் - (கனடா)
- வைத்தியக் கலாநிதி. சிவஸ்ரீ சன பிரதாபன் தேசிகர் - (இலங்கை)
- பரதசூடாமணி கௌசலா ஆனந்தராஜா - (பிரான்ஸ்)
- சிவபாலன் மயூரன் BA (Hons)
- கலாநிதி திருமதி எஸ்.கேசவன் - (கிழக்கு பல்கலைக்கழகம்)
- எழுத்தாளர் துலாஞ்சன் - உதவிப் பிரதேச செயலாளர் (வெருகல்)
- தியாக மயூரகிரிக் குருக்கள் - (யாழ்ப்பாணம்)
- சைவத்தமிழ் வித்தகர் சந்திரலிங்கம் ரமேஸ் - (மன்னார்)
- வித்தியா கலாபமணி. கிருத்திஸ்ரீ எஸ்.ரமேஸ் (குருனாகல்)
- இளங்கலைமணி சுரேந்திரா நரேந்திரா (கிழக்கு பல்கலைக்கழகம்)
- வரலாற்று ஆசிரியர் எஸ்.கே.எஸ் திருச்செல்வம் (இலங்கை)
- சைவப்புலவர் சித்தாந்தரத்தினம் கந்தையா பத்மானந்தன் (இலங்கை)

நடக்குமோ.. ஏது நடக்குமோ .... அங்கலாய்ப்புகளே ஆர்ப்பரித்து நிற்கும். என்றோ எப்போதோ தீர்மானித்த காரியம் நடைபெற்று விட்டால்... பெற்ற தாயோ

தகப்பனோ கட்டிய கணவனோ மனைவியோ... பிள்ளைகளோ ... பக்கத்தில் இல்லை... எட்ட நின்று எட்டிப்பார்த்து வழியனுப்பும் நிலை. அதுவும், சிலருக்குத்தான் அந்தப் பாக்கியம். இல்லாவிடில் அஸ்தி எடுக்கவும் ஆறுதலாகத்தான் அலுவல் நடக்கும்.

என்ன கொடுமையான வாழ்வு...

இதில் இருந்து மனிதன் எதைக் கற்றுக்கொள்ளப் போகிறான். எதை நோக்கிப் பயணிக்கப் போகிறான். நான் நீ என்றும், என்னுடையது உன்னுடையது என்றும், பல நாடகங்கள் ஆடும் வேடங்கள் கலையுமா....

கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவனை கேட்டால் ... இறைசக்தியை எடுத்துரைப்பான். கண்ணுக்கு முன் கண்ட கடவுளரை காட்சிப்படுத்துவான். வைத்தியசாலையை விட்டு வெளியே வந்த தருணத்திலிருந்து.... அவன் புதிய உலகை தரிசித்திருப்பான்....

கருணையும் கண்ணியமும் மனிதநேயமும் இயற்கையின் பரிவும் இறையின் அன்பும்... இன்னும் வாழ்ந்து கொண்டிருப்பதால் தான் .... நல்ல தருணங்கள் நடந்தேறி வருகின்றன.

இயற்கையும் இறையும் இணைந்த இத்தருணங்கள்... புதிய சிந்தனையையும் பதிய வாழ்வையும் புதிய உலக ஒழுங்கையும் மனிதனை மனிதன் நேசிக்கும் ஒப்பற்ற உணர்வையும், உணரத் தலைப்படுவோம்.

அதி சக்தி வாய்ந்த... அன்பினை வளர்த்திடுவோம்... ஏற்ற இறக்கம் தகர்த்து இரக்கத்தை விதைத்திடுவோம். சமூகத்தைக் கருணை மழையால் நனைத்திடுவோம்...

**மனிதம் காப்போம்.**
**அன்பே சிவமாய்**
**அணிவகுப்போம்**
**வாருங்கள்.**
**அன்பே சிவம்**





# அன்பே சிவமாய்








உலகெங்கும் மனித அவலத்தை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் பாதிப்பால் எல்லோரும் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்க வேண்டிய நிலை. இலங்கைத் திருநாட்டில் இம் மனித அவலத்தால் அன்றாடம் வேலைக்குச் சென்று வாழ்க்கை நடத்தி வந்த சாதாரண மக்கள் மத்தியில் பசி பட்டினி உருவாகும் பரிதாபகரமான அவல நிலை உருவானது. இந்த மனித அவல நிலையில் இருந்து பசிப்பிணி போக்கும் மனித நேய செயற்பாடுகளை தென்கயிலை ஆதீனம் தன்னால் இயன்ற வரையில் செயலாற்றி வருகின்றது. திருகோணமலை மாவட்டத்தில் கடந்த மூன்று வாரங்களாக நிவாரண நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தி வந்த தென்கயிலை ஆதீனமானது மலையகம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் போன்ற இடங்களுக்கும் தனது நிவாரணப் பணிகளை விரிவாக்கம் செய்து வருகின்றது.

இது வரை காலமும் ஏற்படாத சம்பவம் உலகில் ஏற்பட்டுவிட்டு.பூமிப்பந்தின் சுழற்சி நிறுத்தப்பட்டது போல் உலகமெங்கும்



**தென்கயிலை சிவா**
**அனைத்துலக ஒருங்கிணைப்பாளர்**
**தென்கயிலை ஆதீனம்**



இயல்பு நிலை நிறுத்தப்பட்டுவிட்டது. விஞ்ஞானத்தையும், மெஞ்ஞானத்தையும் ,தொழில்நுட்பத்தையும், வல்லரசுகளையம் மீறி உலகில் அனைத்து வகையிலும் முடக்கம்நிகழ்ந்துள்ளது. கோவிட் 19 என்கின்ற வைரஸ்ன் ஆதிக்கம் உலகின் ஒழுங்குகளை திணறிடித்துவிட்டது. உலகம் முழுவதிலும் நகரம் தொடக்கம் குக்கிராமம் வரையிலும் வீட்டுக்குள் முடங்கியிருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை.

இந்த அவலமான, பேரிடர் காலத்தில் இலங்கைத் தீவு எங்கும் நாளாந்த உழைப்பாளிகள் அன்றாட வருமானமற்றவர்கள், முதாளர்கள் என அனைவரும் பசிப்பிணியை எதிர்நோக்கிய அபாயகரமான நிலை உருவானது. இந்த நேரத்தில் அரச,அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறவனங்கள், கோயில்கள்,சமய நிறுவனங்கள் யாவும் தம்மாலான நிதிப் பலத்தைப் பிரயோகித்தும், புலம் பெயர் தமிழர்களின் உதவியோடும் ஒத்தாசையோடும் மனிதநேய நிவாரணப் பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அது போல் தென்கயிலை ஆதீனம் தனது அனைத்து முயற்சிகளையம் மேற்கொண்டு பசிப்பிணி போக்கும் மனிதநேய நிவாரணப்பணிகளை மேற்கொண்டு வருகிறது. ஆதீனத்தின் முதற்குரு.தவத்திரு.அகத்தியர் அடிகளாரும், இளையபட்டம் திருமூலர் தம்பிரான் அவர்களும் மேற்படி மனிதநேய நிவாரண நடவடிக்கைகளை முன்னின்று மேற்கொண்டு வருகின்றனர். தென்கயிலை ஆதீனத்தின் அனைத்துலக ஒருங்கிணைப்பாளர் தென்கயிலை சிவா அவர்களின் முயற்சியால், கனடாவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் வாழ்கின்ற கருணை உள்ளம் கொண்ட தமிழ் உறவுகளிடம் நிதிப்பங்களிப்பினைப் பெற்று திருகோணமலை மாவட்டத்தில் உள்ள குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகளை வழங்கியுள்ளனர்.

திருகோணமலை மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை வழங்கி வந்த தென்கயிலை ஆதீனமானது பல அமைப்புக்களின் ஆதரவோடு மலையகம், மட்டக்களப்பு, யாழ் குடா போன்ற பகுதிகளுக்கும் தனது மனிதநேய நிவாரண நடவடிக்கையை மெல்ல மெல்ல விரிவாக்கம் செய்து வருகிறது. அது போல் தென்கயிலை ஆதீனமும் கீரிமலை மெய்கண்டார் ஆதீனமும் இணைந்து சில நிவாரணக் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளனர். இது தொடர்பாக தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு.தவத்திரு.அகத்தியர் அடிகளார் அவர்கள், கீரிமலை மெய்கண்டார் ஆதீனத்தின் சந்நிதானம் தவத்திரு .உமாபதி சவம் அடிகளாரைத் தொடர்பு கொண்டு கலந்து பேசிய பின்னர் மேற்படி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.. முதற்கட்டமாக மாவிட்டபுரப் பகுதியில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவுடன் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

இது வரையில் தென்கயிலை ஆதீனத்தினால் 900 ற்கும் மேற்பட்ட வருமானமற்ற குடும்பங்களுக்கு மேற்படி பசிப்பிணி போக்கும் மனித நேய நிவாரணப் பொதிகள் வழங்கப்பட்டுள்ளன. இது தவிர மேலதிகமான இடங்களுக்கு நிவாரணப்பணிகள் மேற்கொள்ள வேண்டிய அவல நிலை காணப்படுகிறது. திருகோணமலை மாவட்டத்தை தாண்டி மலையகம் மட்டக்களப்பு யாழப்பாணம் ஆகிய இடங்களுக்கும் தென்கயிலை ஆதீனத்தின் நிவாரணப்பணிகள் விரிவாக்கம் பெறவிருக்கின்றன.

திருகோணமலை தென்கயிலை ஆதீனத்தின் பசிப்பிணி போக்கும் நிவாரணப்பணிகளின் முதற்கட்ட நடவடிக்கை 09 04 2020 வியாழக்கிழமை ஆரம்மானது. வெருகல் முகத்துவாரம், இலங்கைத்துறை மற்றும் செல்லும் வழியில் உள்ளறால் குழி, பட்டித்திடல் ஆகிய இடங்களிலுள்ள 90 பேருக்குண்டான பொதிகளை அன்றைய தினம் நிவாரணமாக வழங்கப்பட்டது. ஆதீனத்தின் முதற்குரு.தவத்திரு. அகத்தியர் அடிகளார், இளையபட்டம் திருமூலர் தம்பிரான் அடிகளாருடன்இ நில அளவை தலைமை அதிகாரி திரு. சிவானந்தம் பிரதேச செயலாளர் திரு.குணநாதன் ஆகியோர் இணைந்து இந்த நிவாரணப் பொருட்களை வழங்கினார்கள்.

தொடர்ந்து நிவாரணப் பணிகள் வெருகல் முகத்துவாரம் இலங்கைத்துறை கன்னியா பீலியடி மாங்காயூற்று கிளிக்குஞ்சு மலை ஆகிய இடங்களுக்கு விரிவுபடுத்தப்பட்டன. தொடர்ச்சியாக சோலையடி காந்திநகர் அன்புவழிபுரம் புல்மோட்டை நிலவெளி ஈசுவரபுரம் சாந்திபுரம் ஆகிய இடங்ளுக்கும் மனித நேய நிவாரணப்பணிகள் வழங்கப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தில் நிவாரணப் பணிகளை வழங்கி வந்த தென்கயிலை ஆதீனமானது பல அமைப்புக்களின் ஆதரவோடு மலையகம் மட்டக்களப்பு யாழ் குடா போன்ற பகுதிகளுக்கும் தனது மனிதநேய நிவாரண நடவடிக்கையை மெல்ல மெல்ல விரிவாக்கம் செய்து வருகிறது.

சன்னிதியானே தஞ்சம் என சந்நிதி ஆலய மடங்களின் தங்கியுள்ள 75 முதியோர்களுக்கு திருமலை தென்கயிலை ஆதீனமும் அகத்தியர் சன்மார்க்க தமிழ் சங்கமும் இணைந்து 18 04 2020 சனிக்கிழமை இரவு உணவு வழங்கப்பட்டது.

தொடர்ந்து மூன்று நாட்களுக்கு இரவுப்போசனம் வழங்கப்பட்டது. சன்னிதியான் ஆச்சிரம இயக்குநர்

கலாநிதி மோகனதாஸ் அவர்கள் ஆரம்பித்து வைக்க ஊடகவியலாளரும் அகத்தியர் தமிழ் சன்மார்க்க சங்க இயக்குனருமான மு.சதாசிவம் மற்றும் ஊடகவியலாளர் சி.த.காண்டீபன் ஆகியோர் வழங்கி வைத்தனர்..

கடந்த 21 04 2020 செவ்வாய்க்கிழமை தென்கயிலை ஆதீனத்தின் பசிப்பிணி போக்கும் மனிதநேய நிவாரண உதவிகள் தெனியாய பகுதியில் வழங்கப்பட்டது.

திரிகோணமலை தென்கயிலை ஆதினம் தெனியாய சைவ முன்னேற்றக் கழகத்துடன் இணைந்து தெனியாய பிரதேசத்தில் வருமானமற்ற நிலையில் உள்ள என்சல்வத்த சீத்தெலிய சிரிமல்தெனிய போன்ற தோட்டங்களை சேர்ந்த 50 குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொதிகளை வழங்கியுள்ளனர்.

அது போல் தென்கயிலை ஆதீனமும் கீரிமலை மெய்கண்டார் ஆதீனமும் இணைந்து சில நிவாரணக் கொடுப்பனவு நடவடிக்கைகளை மேற்கொள்வதாக முடிவெடுக்கப்பட்டது. இது தொடர்பாக தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு.தவத்திரு.அகத்தியர் அடிகளார் அவர்கள்இ கீரிமலை மெய்கண்டார் ஆதீனத்தின் சந்நிதானம் தவத்திரு .உமாபதி சிவம் அடிகளாரைத் தொடர்பு கொண்டு கலந்து பேசிய பின்னர் மேற்படி நிவாரண நடவடிக்கைகளை மேற்கொள்ள முடிவெடுக்கப்பட்டது.

22.04.2020 புதன்கிழமை அன்று தெல்லிப்பளை மாவைகலட்டி கொல்லங்கலட்டி பகுதியில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான போசாக்கு உணவுடன் உலர் உணவுப் பொதிகளும் வழங்கப்பட்டன. மாவை கலட்டியில் உள்ள பொது நோக்கு மண்டபத்தில் கீரிமலை மெய்கண்டார் ஆதீனத்தின் சந்நிதானம் தவத்திரு .உமாபதி சிவம் அடிகளார் தலைமை ஏற்று நடைபெற்ற நிவாரணப் பொதிகள் வழங்கும் இவ் வைபவத்தில் 50 ற்கும் மேற்பட்ட குடும்பத்தினருக்கு நிவாரணம் வழங்கப்பட்டது. இந் நிவாரணக் கொடுப்பனவு நடவடிக்கைகளுக்கு மெய்கண்டார் ஆதீனத்திற்கு உதவியாகசைவமகாசபை உறுப்பினர்கள் செயற்பட்டார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

நிகழ்வின் போது உரையாற்றிய மெய்கண்டார் ஆதீனத்தின் சந்நிதானம் தவத்திரு உமாபதி சிவம் அடிகளார் இந்த மனித அவலம் நிறைந்த காலகட்டத்தில் பொதுமக்களை அவதானமாக இருக்குமாறும்இ அரசினதும் சுகாதார அமைச்சினதும் சட்டங்களை மதித்து நாம் எம்மைக் காப்பாற்றி நடந்தோமானால் விரைவில் எமது தேசத்திலிருந்து கொரோனா என்ற வைரஸ் இனை இல்லாதொழிக்கலாம் எனக் கேட்டுக் கொண்டார். அதே போல் திருகோணமலையில் இருந்தவாறு நிவாரணப்பணிகள் சிறப்பாக நடைபெற தனது வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவிப்பதாக தென்கயிலை ஆதீனத்தின் முதற்குரு. தவத்திரு. அகத்தியர் அடிகளார் தெரிவித்துள்ளார்.

25 04 2020 அன்று சனிக்கிழமை களுத்துறை மாவட்ட த்திலுள்ள அறநெறிப் பாடசலலை ஆசிரியர்களுக்கும் அங்குள்ள குருமார்களுக்கும் தென்கயிலை ஆதீனத்தின் ஏற்பாட்டில் களுத்துறை மாவட்ட அறநெறி ஒன்றியம் நிவாரணப் பொதிகளை வழங்கியது.அதனடிப்படையில் அறநெறி ஒன்றியத்தினால் இனங்காணப்பட்ட ஹாரனைஇ இங்கிரிய, றைகமஇஹல்வதுரை,புளத்சிங்கள, கோவின்ன பகுதிகளை சேர்ந்த ஆசிரியர்களுக்கும் அங்குள்ள குருமார்களுக்கும் 50 ற்கும் மேற்பட்ட உலர் உணவுப் பொருட்கள் வழங்கி வைக்கப்பட்டது.

மேற்படி தென்கயிலை ஆதீனத்தின் மனிதநேய நிவாரணப் பணிகளுக்கு, பிரான்ஸ், பிரித்தானியா,கனடா,நெதரலாந்து போன்ற நாடுகளிலிருந்து நிதியுதவி வழங்கிய கருணை உள்ளங்களுக்கு தென்கயிலை ஆதீனம் தலைவணங்கி பாராட்டுக்களைத் தெரிவித்து, என்றென்றும் சிவனருள் பெற்று வாழ வாழ்த்துகின்றது.



மேலதிகமாக திருகோணமலை மாவட்டத்திற்கும் மட்டக்களப்பு மலையகம் போன்ற பகுதிகளுக்கு இன்னும் நிவாரணப் பணிகள் செய்ய வேண்டிய நிலையில் தென்கயிலை ஆதீனம் இருப்பதாகவும் விரைவில் பல நல்லுள்ளம் படைத்த புலம் பெயர் வாழ் அன்புள்ளங்களின் உதவியுடன் மேற்படி நிவாரண நடவடிக்கைகள் நடைபெறும் என தென்கயிலை ஆதீனம் நம்பிக்கை தெரிவித்துள்ளது .



# ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம்



களுத்துறை மாவட்டம் ஹொரணை நகரிலிருந்து சுமார்8 கிலோ மீட்டர் தூரத்தில் பர்த் என்னும் இடம் இருக்கின்றது அந்த பேர்த் கிராமத்திலே மிகவும் சிறப்பு வாய்ந்த ஒரு அழகிய கோவில் அமைந்திருக்கின்றது.ஸ்ரீ முத்துமாரி அம்மனை மூலவராகக் கொண்டு இந்த ஆலயம் அமைந்து இருக்கின்றது .

முகப்பிலேயே வழி பிள்ளையார் காட்சியளிக்கின்றார்.அவரை கடந்து செல்லுகையில் மகா கணபதி ஆலயம் அமைந்துள்ளது.ஆலயத்தில் பிரதான தூண்களில் அஷ்டலக்ஷ்மி தேவியரின் திரு உருவங்கள் சுதை சிலைகளாக வடிக்கப்பட்டுள்ளன.

மேலும் வடிவாம்பிகை சமேத லிங்கேஸ்வர பெருமான்,ஆஞ்சநேயர், ஆதி அம்பாள், வள்ளி தேவசேனா சமேத முருகப் பெருமான், ஐயப்பன், நவகிரகங்கள்,காளி அம்பாள், மற்றும் நாகதம்பிரான், கருப்பண்ணசுவாமி,சண்டிகேஸ்வரி ஆகிய தெய்வங்களின் சன்னதிகள் முறையே அமைந்திருக்கின்றன.

மேலும் இந்த ஆலயத்தில் சிவபெருமான் மூன்று வடிவங்களில் காட்சி தருகின்றார்.முதலாவது வடிவமாக வடிவாம்பிகை சமேத லிங்கேஸ்வராக காட்சி தருகின்றார்.

இரண்டாவது வடிவமாக ஆலய அரச மரத்திற்கு அடியில் பிரதோஷ நாதராக காட்சி தருகின்றார்.இந்த சிவ லிங்கத்திற்கு சிவராத்திரி காலங்களில் விசேடமாக நான்கு கால அபிஷேகங்கள் இடம் பெறுகின்றன. அடியவர்கள் தங்களது திருக்கரங்களால் முதலாம் காலத்தில் பால், இரண்டாம் காலத்தில் தயிர், மூன்றாம் காலத்தில் இளநீர், நான்காம் காலத்தில் பன்னீர் போன்ற திரவியங்களால் அபிஷேகம் செய்கின்றனர்.

ஏனைய நாட்களிலும் பிரதோஷ காலங்



தகவல்:–
சிவஸ்ரீ சிவ
சுதர்சன் குருக்கள்





களிலும் அடியவர்கள் பாலாபிஷேகம் மற்றும் ஜலாபிஷேகம் போன்றவற்றை தங்கள் திருக்கரங்களால் தாங்களாகவே மேற்கொள்கின்றனர்.

ஆலயம் புனர்நிர்மாணம் செய்வதற்கு முன்பதாக ஆவுடை அற்ற ஒரு லிங்க ரூபத்தில் அடியவர்கள் சிவனாக வழிபட்டு இருக்கின்றனர். அந்த லிங்க ரூபம் ஆனது தற்போது அதிகமாக அடியவர்களால் வழிபடப்படுகின்றது.இவ்வாறு எமது ஆலயத்தில் மூன்று சிவ வழிபாடுகள் இடம்பெறுகின்றன.

களுத்துறை மாவட்டத்தில் மிகப்பெரிய காளி விக்கிரகம் இந்த ஆலயத்தில் அமைந்திருக்கின்றது சுமார் இருபத்தி ஒரு அடிக்கு மேற்பட்ட அளவினை கொண்ட இந்த மகா காளி ரூபம் சுதை வடிவில் இங்கு அமைக்கப்பட்டுள்ளது அம்பிகையின் வடிவம் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த மகா காளி விக்ரகத்திற்கு அடியில் மூன்று அடி அளவிலான அதே காளியின் ரூபத்தை ஒத்த கருங்கல் விக்ரகம் அமைக்கப்பட்டுள்ளது. களுத்துறை மாவட்டத்தில் இருக்கக்கூடிய பெரும்பாலான சிங்கள மக்கள் வந்து வழிபடும் ஒரு இடமாகவும் இந்த காளி ஆலயம் அமைந்திருக்கின்றது.

ஆலயத்திற்கு முன்பாக அமைந்திருக்கும் கருங்கல் பாறையில் 16அடி முருகப்பெருமானின் திருவுருவ சிலை அமைந்திருக்கிறது.இவ் ஆலயத்தில் அரசமரம் தலவிருட்சமாக இருக்கின்றது.

## ஆலய உற்சவங்களும் விழாக்களும்

பேர்த் ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் மாசி மகத்தை தீர்த்தோற்சவமாக கொண்ட 5 நாள் அலங்கார உற்சவம் இடம்பெறுகின்றது.

தைப்பொங்கல், மகாசிவராத்திரி, பங்குனி உத்தரம், வைகாசி விசாகம், ஆடிப்பூரம் ஆடிவெள்ளி, ஆடிச்செவ்வாய், வரலட்சுமி நோன்பு, காரடையான் நோன்பு, புரட்டாதிச் சனி, நவராத்திரி, கேதாரகௌரி, கந்தசஷ்டி விரதம், ஐயப்ப வழிபாடு, ஆவணி சதுர்த்தி, வளர்பிறை சதுர்த்தி, பிரதோஷம், ஏகாதசி, போன்ற நாட்களில் விசேட அலங்கார பூஜைகள் இடம் பெறுகின்றன.

நித்திய பூஜைகள் இரண்டு வேளை பூஜைகளாக இவ்வாலயத்தில் இடம்பெறுகின்றன. சிவசக்தி அறநெறிப் பாடசாலை என்ற ஒரு பாடசாலையும் இயங்கி வருகின்றது. இந்த அறநெறிப் பாடசாலையில் சுமார் 8 ஆசிரியர்களும் 85 மாணவர்களும் காணப்படுகின்றனர்.

களுத்துறை மாவட்டத்தில் வளர்ந்து வருகின்ற ஒரு ஆலயங்களுள் இந்த ஆலயம் முதன்மை இடத்தை வகிக்கின்றது.

ஆலயத்தின் வெளி சுவர்களிலே தேவியின் ஒவ்வொரு வடிவங்களும் மிகவும் அழகாகவும் நேர்த்தியான முறையிலும் வடிவமைக்கப்பட்டு இருக்கின்றன.

களுத்துறை மாவட்டம் மட்டுமல்லாமல் வெளி மாவட்டங்களிலும் இருந்து அடியவர்கள் இந்த ஆலயத்திற்கு வருகை தந்து தங்களுடைய நேர்த்திக் கடன்களை வைத்து பூஜை புனஸ்காரங்கள் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தென்கயிலை ஆதீனத்து



சிவன்கயிலை வார்மேகம் சித்தன்கை லாசம்
அவன்கழலே யாகுமாம் அண்டம் கவன்நிறைந்து
ஆதீன மென்க அறத்தோடும் ஊர்விளம்ப
மாதான மிட்டார் வயல் !

தென்கயிலை ஆதீனச் சித்தர் அகத்தியரே
துன்பமெனும் ஏழ்மைத் துடிப்புணர்ந்தே - தென்சிவனை
நேர்கொள்ள வைத்து நிலத்திற் பசிபோக்கி
வேர்கொள்ளச் சார்ந்தார் விரதம் !

இறையோடு தத்துவம் ஏற்றார் சிவனின்
மறையோடுந் தத்துவம் ஆர்ந்தார் அறமாகும்
எண்ணப் படியூர்ந்து இறைவம் மனதூன்றக்
கண்மிப் பரந்தார் கனம் !

ஆதீன மெய்பாடி ஆக்கும் அருள்பாடி
மேதினியிற் துன்ப விருள்பாடி - சாதனையாய்
அன்பொழுகத் தெய்வ அறம்பாடி வையமெலாம்
தென்கயிலை கண்டார் சிவம் !

குருகுல மோம்பக் குடிலென வாக்கும்
திருமுனைப் பாடியாய் நின்றார் - வருமார்
தருமதுரை போலவே சைவமொடும் போற்றும்
திருமலையாய் ஆனதுவே தேன் !

வாழ்வை வளமாக்கி மன்னுயிரைக் காப்பாற்றி
ஏழ்மை அகற்றி இதமாக்கிச் சூழ்வலியால்
கன்றும் மிடிபோக்கிக் கையில் வசமாக்கிக்
குன்றாய் நிமிர்ந்த குடில் !

மனதூறும் சிற்றூர்கள் மாண்புவழி காணார்
இனிதான தென்கயிலை சேர்ந்தார் தனியாய
நூல்நிலையம் பேணி நிமிரும் படியேற்றிக்
கால்கொள்ளக் கண்டாரே கல்வி !

தென்கயிலைத் தொன்மலையிற் தோன்றுஞ் சுயம்பாடி
நன்றுறையும் ஈசன் லலிதாம்பாள் என்கத்
திறம்பாடி நின்றார் திருவாச கத்தெம்
மறம்பாடி வைத்தார் மதி !

மெய்கண்ட வாதீனம் வேத மனுத்தாங்கல்
தெய்வத்தார் பக்கம் தினஞ்சேர - மெய்வைத்தே
மன்கயிலை பாடி மறையோர் அருள்பாடித்
தென்கயிலை ஏற்றார் சிறப்பு !

நல்லோர் நறைபாடி நற்கருப்பஞ் சீர்பாடி
சொல்லேர் பதினென்கீழ்ச் சிந்தாடி - சொல்மூலம்;
முன்னைத் திருமூலர் முக்திச் சிவனார்ந்த
தென்கயிலைப் பத்திதுவே தேர் !



தென்கயிலை ஆதீன ஞானக்கவி



# இலங்கையில் சித்த மருத்துவம்

**அகத்தியரின்**
**அகத்தியர்தாபனம்...**

திருகோணமலையின் முதூரில் உள்ளகங்குவேலிக் கிராமம் மிகப் பழமையான கிராமமாகும். மூன்றுபோகமும் நெல்விளைச்சல்களைப் பெறக்கூடியதும், கங்கைக் கரைக்கு அருகில் அமைந்துள்ளதுமான இக்கிராமத்துக்கு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் வருகை தந்திருந்த அகத்தியர் பெருமான், அங்கு ஒரு சிவன் ஆலயத்தை அமைத்து வழிபாடியற்றிவந்துள்ளார். அவ்வாலயம் அமைந்துள்ள இடம் அகத்தியர் தாபனம் என்று அழைக்கப்படுகின்றது.

உலகிலேயே அகத்தியர் தாபனம் என்ற பெயரில் உள்ள ஒரே ஒரு சிவன் ஆலயம் இதுவாகும். இத்தகைய சிறப்பு பொருந்திய அகத்தியர் தாபனத்தில் இரண்டாவது தமிழ் பல்கலைக் கழகமும், சித்தமருத்துவ பீடமும் இருந்ததாக வரலாறுகள் தெரிவிக்கின்றன.

திருக்கரைசையம்பதி; புராணப்பாடல் பெற்றதலமாக இது காணப்படுகின்றது. இதன் பெருமைக்கு, திருக்கரைசைப் புராணம் ஆனது 10 ஆம், 11 ஆம் மற்றும் கல்விப் பொதுத் தராதரஉயர்தரத்திலும் பாடத்திட்டத்தில் கல்வி அமைச்சு சேர்த்துள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்.

காலப்போக்கிற் யாவும் அழிவடைந்துபோக,தற்பொழுதுஆலயம் மட்டும் கும்பாபி சேகம் செய்யப்பட்டு வழிபாடுகள் நடைபெற்றுவருகின்றன.

அத்துடன், பொலநறுவையில் அமைந்துள்ள பொற்கல் விகாரையில் உள்ள சிலைகளில் ஒன்று சித்தமருத்துவத்தின் தந்தை என்று கருதப்படும் அகத்திய முனிவருடையது என்ற கருத்து அகத்தியர் தாபனத்தை வலுப்படுத்துவதாக அமைகின்றது.

நுவநாத சித்தர்களுள் ஒருவரான கோரக்கர் திருகோணமலையில் சித்தியடைந்தார் என்பதும் அவரது சமாதி கன்னியாவில் உள்ள 40அடி நீளமான நீண்டபெரிய சமாதியே என்பதும் கதைவழி சான்றாக விளங்குகின்றது.

அத்துடன் கதிர்காமத்தில் காணப்படும்,கதிர்காம இயந்திரத்தை தாபித்தவர் பதினெண் சித்தர்களுள் ஒருவரான போகர் என வரலாறுகள்



சித்தமருத்துவர்
**தியாகராஜா சுதர்மன்**
BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition
மானிப்பாய்.



கூறுகின்றன. இதனாலேயே இன்றும் அங்கு மூலிகைகள் நிறைந்துகாணப்படுகின்றன. மருந்துமாத்திரைகள் பிழைத்தால் கதிரை மலை மேவு முருகனை வணங்கிட அந்நோய்கள் மாறும்என பரராசசேகரத்தில் பல இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

புலாத்தியர்,சட்டநாதர் ஆகியோர் ஈழநாட்டைச் சேர்ந்தவர்கள் என்றும், இவர்கள் இலங்கையில் இருந்து இந்தியாவிற்கு சென்று சித்தமருத்துவ வளர்ச்சியில் தம்மை ஈடுபடுத்தியிருகக் வேண்டும் என்றும் வரலாற்றாசிரியர்கள் எண்ணுகின்றனர்.

இவ்வாறு அகத்தியரிடம்; இருந்து மக்களுக்கு பரப்பபட்ட சித்த மருத்துவத்தினை குமரிகண்டத்தை ஆண்ட இலங்கையின் இராவணனே முழுமையாக கற்றதாகவும் இராவணனே சித்த மருத்துத்தில் சிறந்த வைத்தியனாகவும் இருந்துள்ளான் எனவும் கூறப்படுகின்றது. இராவணனிடமிருந்தே சித்த மருத்துவம் இலங்கை இந்தியா எங்கிலும் பரவியதாக பல ஆராய்ச்சிகள் கூறுகின்றன.

இதற்குச் சான்றாக திருக்கரைசையம்பதி அகத்தியர் ஸ்தாபன கும்பாபிசேக மலரில், ஆசிச் செய்தி வழங்கியுள்ள சித்தர் திருஞானசம்பந்தன் கீழ்க்கண்டவாறு கூறியுள்ளார்.

தட்சிணகைலாயத்தின் - முதற் தமிழ்ச் சங்கத்துக்கு முற்பட்ட காலத்தில், குமரிகண்டத்தில் அமைந்துள்ளமிகவும் விசாலம் உள்ள நகரமான முத்தூரில் அட்டமாசித்திகள் பெற்ற குறு முனிவர் அகத்தியரை முப்புரம் எரித்த முக்கண்ணர் படைத்தார்.

இவர் முதலாம், இரண்டாம் சங்கங்களை அமைத்து தமிழை வளர்த்து புரட்சிகரமான மறுமலர்ச்சி ஒன்றினைஏற்படுத்தினார்.

குமரிகண்டத்தின் பலபகுதிகளுக்கும் மற்றும் கம்போடியா, எகிப்து, சுமேரியா, மேற்கிந்தியதீவுகள், வரை தமிழையும், தமிழரின் கலாச்சாரத்தினையும் பரப்பி தடம் பதித்தார்.

சிவபக்தன் இராவணனும் அகத்தியரின் சீடர்களில் முக்கியமானவன் ஆவார். இலங்கையின் குணதிசையின் கோடியில் ஆலகாலன் அம்பலத்தரசன் ஆடுகின்ற சுனையில் அகத்தியரும் ஆடிக்கொண்டே இருக்கின்றான்.

சங்கரன் கொடுத்தவாளும்,வீரமும் களத்திலே போட்டு வெறுங்கையாய் இலங்கை வந்த இராவணன் அகத்தியரின் திருவடியில் சிரம் தாழ்த்தி பூதவுடலை நீக்கி புகழுடம்புடன் அகத்தியரின் தாபனத்தில் அமைந்துள்ள திருக்கரைசையம் பதிபெருமானை வலம் வந்து கொண்டிருக்கின்றான் என்பதே ஆகும்.

**தொடரும்....**





# தமிழர் பண்பாட்டுத் திருமணம்

இற்றைக்கு 2000 ஆண்டுகளுக்கு முன் தமிழன் எல்லாத் துறைகளிலுமே சிறந்தே இருந்தான். பிற்காலத்தில பகுத்தறிவைப் பயன்படுத்தாததினால் தாழ்ந்து கெட்டுப்போனான். இன்று தன்னினப் பகையால், கொடைமடத்தால், மதப்பித்தத்தினால், வேற்றின மொழியாளர் வரவாலும் தன் மொழியை, நாகரிகத்தை, பண்பாட்டை, வரலாற்றை,தன்நிலத்தை இழந்து தாழ்வுணர்ச்சி கொண்டு அடிமை நிலைக்கு ஆக்கப்பட்டுள்ளான் .இதிலிருந்து மீட்படைய மொழி மீட்பு, பண்பாட்டு மீட்பு, வரலாற்று மீட்பு என்பன முதன்மைத் தேவையாய் உள்ளன. இவை மூன்றும் சமகாலத்தில் மீட்படைய வேண்டும்.

சிந்து வெளியில் வைதீகவேத ஆரியர் உள்ளிட்ட காலத்திலிருந்தே தொல்தமிழர் நாகரிகத்தை, பண்பாட்டை, மொழியை, வரலாற்றை சிதைத்து சீரழிக்கவே இன்றுவரை முயன்று கொண்டிருக்கின்றனர். 20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மறைமலை அடிகளார் என்ற சுவாமி வேதாச்சலம், அவரது மகள் நீலாம்பிகை




**கலைவல்லார் (கலாபூசணம்)**
**நா. வை. குமரிவேந்தன்**
**(மகேந்திரராசா)**
நிறுவநர் இலங்கைக்
குமரித் தமிழ்ப் பணிமன்றம்
மின்பொறியியல்
கண்காணிப்பாளர் (ஓய்வு)
கிளிநொச்சி.




அம்மாள், கி.ஆ.பெ.விசுவநாதம் இன்னும் பல தமிழறிஞர்கள் கூடி தமிழர்களுக்கென்று ஒருதொடராண்டு முறையிருக்கக் கூடாதென வைதீகவேத வடவரால் உருவாக்கப்பட்டிருந்த தொன்ம(புராண) இழிவுக்கதையுடன்(விரிக்க நீளும்) தொடர்புற்ற 60ஆண்டுச் சுழற்சி முறையை நீக்கினர்.தமிழர்களுக்கு ஒரு வரலாற்று தொடராண்டு முறையை உலக மெய்யியல் தந்த திருவள்ளுவர் கிறீத்துவுக்கு 31ஆண்டுகள் முன் பிறந்தவராகக் கொண்டு தொடக்கினர். திருவள்ளுவர் தொடராண்டின் முதல் நாளாக தமிழரின் வாழ்வியலோடு பின்னிப் பிணைந்த வேளாண்மை, மேழவிழு முன்னுறலை நடுவகப் படுத்தி சுறவ(தை)த் திங்கள் பொங்கல் நாளில் தொடங்குவதென்றும் முடிவு செய்தனர். அத்தோடு திங்கள் மாதங்களான தை,மாசி,பங்குனி, சித்திரை, வைகாசி, ஆனி, ஆடி, ஆவணி, புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழிக்கு பகரமாக(பதிலாக) ஞாயிற்று மாதங்களான சுறவம், கும்பம், மீனம், மேழம், விடை, ஆடவை, கடகம், மடங்கல், கன்னி, துலை, நளி, சிலை ஆகியவற்றையும், கிழமை நாட்களில் தொன்ம(புராண) இழிவை நினைவூட்டும் புதனுக்குப் பகரமாக(பதிலாக) அறிவன் என்றும், சனிக்குப் பகரமாக காரி என்றும் பயன் படுத்த முடிவானது. நாட்காட்டிகளில் நாட்களை 1.2.3.4.5.6.7.8.9.10 ஐ தமிழிலக்கங்களில்: க, உ, ங, ச, ரு, சா, எ, அ, கூ,க என இடவும் தீர்மானித்தனர்.

> யாகாவா ராயினும் நாகாக்க காவாக்கால்
> சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு
> (கு.127) என்பார் வள்ளுவனார்.

இங்கு நா மொழிக்குரியது நா இல்லையேல் மொழியில்லை மொழி குறித்த இனத்தை, அதன் பண்பாட்டை, ஒழுக்கம், நாகரிகம் போன்றவற்றை உலகிற்குப் பறை சாற்றுவது. மொழி காக்கப்படாவிட்டால் பின்வரும் தலைமுறையினரால் பழிக்கப்படும் இழுக்குக்கு உடையவராவர் என்கிறது குறள்.. கீதாஞ்சலி புகழ் மாகவி இரவீந்திரநாத் தாகூர் ஒருமுறை குறிப்பிடும்போது உலகின் உயர் உச்சிகளான இலக்கியங்களை தமிழ்மொழி கொண்டிருந்தும் அவற்றைப் புறக்கணித்து வேற்றுமொழிக்கு தமிழினம் முதன்மை கொடுப்பதுபோல் இன்னொரு இனம் உலகில் இல்லை என்பார்.

மக்கள் தோன்றிய காலத்தே தோன்றி இன்றுவரை உலக வழக்கொழியாது வாழ்ந்துகொண்டிருக்கும் ஒரேமொழி தமிழே. உலக செம்மொழிகள் என்று கூறப்படும் இலத்தீன், கிரேக்கம், சமற்கிருதம், கீபுரு, சீனம், தமிழ் ஆகியவற்றில் சீனம் மக்கள்தொகை கூடிய தனியரசாய் இருப்பதால் வாழுகின்றது.இலத்தீன், கிரேக்கம், சமற்கிருதம,; கீபுறு. செத்தமொழிகள். வைதீகவேத வடவரின், ஐரோப்பியரின் மேலாண்மை சிதைத்துச் சீரழித்து அறிவுக் களவாடியபோதும் நிமிர்ந்து நிலைத்து வாழும்மொழி தமிழ் மொழியே. ஆனால் தமிழரோ தமது பெருமையை, தமிழின் பழமையை, சிறப்பை உணராது, புரியாது வாழ்கின்றனர். இது ஏன்? தாழ்வுணர்ச்சியா? அல்லது அடிமைத்தனமா?

இன்று எல்லா மதங்களுமே அதைப்பின்பற்றும் மக்கள் பேசுகின்ற அவர்தம் தாய்மொழியில் பண்பாட்டு நிகழ்வுகளை நடத்தும்போது தமிழச் சைவர்கள் மட்டும் வேற்றின செத்தமொழி சமற்கிருதத்தை நாடி நிற்பதேன். தமிழன் தமிழச்சியின் இல்லத்திலே நடைபெறுகின்ற மிகவுயரிய விழா திருமணம் ஒன்றேயாகும். அது மணமக்களை, அவர் தம் பெற்றேரை, உறவுகளை, நண்பர்களை, அயலவரை, ஏன் அந்தச் சிற்றூரரையே இன்பக் களிப்ணீல் ஆழ்த்துகின்ற இன்பவிழா. இதில் அவனை அடையாளப்படுத்தும் மொழி, பண்பாடு, வரலாறு என்பன முதன்மைப் படுத்தப்பெறவில்லை என்றால் தமிழர் தம்மை தமிழரெனக் கூறிக்கொள்ளத் தகுதியுடையவர்களா? வெட்கத்தின்மேல் வெட்கம்.



அன்று உள்ளக் கலப்பே வாழ்வாக மலர்ந்த வாழ்வு, காலச் சுழற்சியிலே எப்படி சூழல் மாசுபட்டதோ அதுபோல் மாந்தக் குமுகா(சமுதா)யமும் மாசுபட்டது. மாந்த வாழ்வு விலங்கு வாழ்வானது. இதனால் மக்கள் நலன்கொண்ட சான்றோர் திருமணக் கரணத்தை ஏற்படுத்தி நிலையான வாழ்க்கைத் துணையை பலரறிய ஆணையிடுவித்தனர். இதனை தொல்காப்பியம்

> பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
> ஐயர் யாத்தனர் கரணமென்ப (தொல். கற். 4)

கி;. மு.800 இல் எழுதப்பெற்றதாக கருதப்பெறும் தொல்காப்பிய கரணமுறை இதன் ஆக்கத்திற்கு பலநூறு ஆண்டுகளுக்கு முன்னதாகவே முகிழ்த்திருக்க(கி.மு.1500அளவில்) வேண்டும் என்பர் சிலர். காதல் மணம், களவில், கற்பில் முடிவுறும். களவு மணம் பெற்றோர் ஏனையோருக்குத் தெரியாமல் இணைந்து கொள்வது. கற்புமணம் என்பது வெளிப்படையானது.

> கற்பெனப்படுவது கரணமொடு புணர
> கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
> கொடைக்குரி மரபினர் கொடுப்பக் கொள்வதுவே.
> (தொல். கற்..1)

அன்பு, காதல், காமம் என்பன நுண்நோக்கில் வேறுபட்டவையாகும். அன்பு திருவள்ளுவரும்,புத்தரும், இயேசுவும், விவேகானந்தரும் எல்லோரிடத்தும் காட்டிய அன்பு. இது அறமாகவும், அறவினைக்கு எல்லாம் மூலமாகவும் கருதப்பெறுபவை. காதல் என்பது பெற்றோரும் பிள்ளைகள் போன்றும், கோப்பெரும் சேரழனும் பிசிராந்தையர் போன்றும் நண்பரிடத்தும் காணப்படுவது. காமம் என்பது கணவன் மனைவியிடத்தும், ஆண்பெண்ணிடையே நிகழக்கூடிய இல்லற இன்பத்திற்கான நேயமாகும். எனவே தான் மாமறை தந்த வள்ளுவனார் இன்பத்துப்பாலை காமத்துப்பால் என்றார்.

கரணம் அல்லது சடங்கு எவர்க்குச் செய்யப்படுகின்றதோ அவருக்குத்தான் அதன் உள்ளீடு புரியவேண்டும். சடங்கு புரியும் மொழியில், பொருந்தும் முறையில் செய்யப்படவேண்டும். செல்பவனுக்கும் கேட்பவனுக்கும் ஊடகமாக, உணர்வாக இருப்பது மொழி. இங்கு சொல்பவருக்குப் புரிகிறதோ இல்லையோ கேட்பவனாகிய எந்தவொரு தமிழனுக்கும் பொருள் புரியாது. இன்று கற்றாரும் மற்றாரும் விடாப் பிடியாய் நின்றொழுகவும்,மானமும், மதிப்பும், பகுத்தறிவு விளக்கமும் இல்லாத பிறவியராகவே தமிழர்கள் இருக்கவேண்டும் என்பதற்காக வைதீகவேத



மரபாரால் ஏற்படுத்தப் பெற்றதே இந்நடைமுறையாகும். உலக நாடுகளில் தாய்மொழிக் கல்விக்கும், கோயில்களில் தாய்மொழியில் கரண வழிபாட்டிற்கும் முன்னுரிமை வழங்கும்போது தமிழர்கள் மட்டும் ஏன் இதைக் கைக்கொள்ள பின்னிற்கின்றனர்.

அன்று பாகத(பிராகிருதம்) மொழியின் ஒரு கூறான பாலி(மாகதி) மொழியே புத்தர் அறிவுரை வழங்கிய புத்தமத மொழி, ஆனால் இலங்கையில் அது சிங்களத்தில், யப்பானில் யப்பானிய மொழியில், சீனாவில் சீனமொழியில்.கிறீத்தவர்களும் அவர்களின தாய்மொழிகளில் கரண வழிபாடுகளைச் செய்யும் போது தமிழ்ச் சைவர்களுக்கு தமிழ்தானே வழிபாட்டு மொழியாய் இருக்கவேண்டும். உலகக் கடவுளர்க்கு எல்லாம் எல்லா மொழியும் புரியும்போது ஏன் தமிழ் கடவுளர்(சிவன்,முருகன், கொற்றவை, ஐயனார் போன்றவர்)க்கு மட்டும் சமற்கிருதம் புரியும் மொழியானது?இதுவைதீகவேத மநுநெறி தமிழை இழிவு மொழி என்பதாலா? அல்லது இக்கடவுளர் வைதீகவேத(இந்து) மதத்திற்கு மாறிவிட்டார்களா? அல்லது தமிழர்கள் வைதீகர்களாக மாறிவிட்டதாலா?. அருளாளர்களே! கல்வியாளர்களே! அறிஞர்களே! தமிழ்த் தாயின் விலங்கைக் கழற்றி விடுங்கள்.

கிட்டத்தட்ட 2000 ஆண்டுகளுக்கு மேலாக வைதீகவேத மேலாண்மைக்கு அடங்கிக்கிடந்த தமிழ் பண்பாட்டின் உயரிய நிகழ்வாக திருமணத்தின் மறுமலர்ச்சி 20ஆம் நூற்றாண்டில் முகிழ்த்தது. மார்க்கசகாய ஆச்சாரியார் பிராமணியத்தையும், மறைமலையடிகளார், வி.கலியாணசுந்தரனார் பிராமணியம், சமற்கிருதத்தையும்,ஈ. வெ. இராமசாமிப் பெரியார் பிராமணியம், சமற்கிருதம், வீண் சடங்குகளையும் நீக்கித் திருமணக் கரணத்தைச் சீர்செய்தனர். இவர்களைத் தொடர்ந்து கி;. ஆ. பெ.விசுவநாதம், அறிஞர் அண்ணா, சோமசுந்தர பாரதியார் போன்றோரும், தற்போதுமுதுமுனைவர் .இரா.இளங்குமரன், தொல். திருமாவளவன், இன்னும் பலரும் தமிழ்நாட்டில் இத்திருமணங்களை நடத்திக்கொண்டிருக்கின்றனர்.இலங்கையிலும் முனைவர்.க. பொ. இரத்தினம், அ. அமிர்தலிங்கம், போன்றோரும் இன்று வே. இறைபிள்ளை, கலைவல்லார்(கலாபூசணம்).நா. வை. குமரிவேந்தன் போன்றோர் திருக்குறள் நெறித் திருமணங்களாக தனித்தமிழில் நடைமுறைப்படுத்தி வருகின்றனர் பொதுவாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, முல்லைத்தீவு, கொழும்பு,கண்டி, கம்பளை போன்ற இடங்களில் நிறைவேற்றப் பட்டுள்ளன. இந்தக் கரண முறைகளில் அம்மி மிதித்தல், அருந்ததி காட்டல், தீ(அக்கினி) வலம் வருதல் போன்ற சடங்குகள் உள்வாங்கப் படுவதில்லை.

அம்மி மிதித்தல் பெண்ணிழிவை நினைவூட்டுகின்ற தொன்ம(புராண)க் கதை. இங்கு கௌதம முனிவரின் மனைவி அகலிகை அழகி. இவளை தேவர்களின் தலைவனாகிய இந்திரன் கண்டு விட்டதால் அவளை அடைய விருப்பம் கொண்டிருந்தானாம். கௌதமர் தனது தியானத்தை தொடங்கு முன் அதிகாலையில் ஆற்றுக்குச் சென்று நீராடி வந்தே தன் தியானத்தைத் தொடக்குவது வழக்கம். அன்றும் அவர் ஆற்றுக்குச் சென்ற நேரம்பார்த்து இந்திரன் அகலிகை இருப்பிடம் வந்து அவளுடன் இருக்கும் போது திரும்பிவந்த கௌதமர் இதைக்கண்டு கோபங்கொண்டு அவளைக் கல்லாய்ஆக்கிவட்டார். இப்பெண்ணிழிவு நினைவூட்டல் தேவையா?.

அருந்ததி காட்டலும் பெண்ணிழிவை வெளிப்படுத்தும் தொன்ம(புராண)க் கதை. இதில் பல வழக்காறுகள் உள்ளதாக முனைவர். பக்தவத்சல பாரதி தனது தமிழர் மானிடவியல் என்ற நூலில் வெளிப்படுத்துவார். அதில் ஒன்றையாவது தெரிந்து கொள்வது நல்லது. துருவாச முனிவரின் மனைவி அருந்ததியார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். துருவாச முனிவரின் பூசைக்கு அருந்ததியார் ஆற்றுக்கரை சென்று ஆற்றுக்கரை மணலில் குடம் வனைந்து நீரெடுத்து வந்துதான் பூசைதொடங்கும். அன்றும் நீரெடுக்கச் சென்றபோது அங்கு காந்தருபன் என்ற அழகனைக் கண்டு மனம் குழம்பியதால் அவளால் நீரெடுக்க குடத்தை வனைய முடியவில்லை. இதனால் கோபங்கொண்ட முனிவர் அருந்ததியைக் கொன்று விடுமாறு பிள்ளைகளைக் கோருகின்றார். மூத்த நால்வரும் மறுத்துவிட கடைசி மகன் பரசுராமன் தாயைக்கொல்ல உடன்பட்டு,தந்தையிடம்,அதற்கு கைமாறாக கோபத்தை அடக்கவேண்டும் என்றும், கல்லாக்கப்பட்ட உடன் பிறப்புக்களை உயிர்ப்பிக்க வேண்டுமென்றும், தாய் அருந்ததியை வானத்து விண்மீனா(நட்சத்திரமா)க ஆக்கவேண்டும் எனக்கோட்டு கொண்டதால் அது நிறைவேற்றப்பட்டதாம். இதுவும் பெண்ணிழிவை நினைவூட்டுவதே.

அத்துடன் வைதீக தீக் கடவுளான அக்கினி ஒரு காமவெறியனாகவே தொன்ம(புராண)ங்கள் சுட்டுவாதால் இவை தமிழன் பண்பாட்டிற்கு முழுக்கமுழுக்க முரணானதால் திருக்குறள்நெறித் திருமணங்களில் விலக்கப்பட்டுள்ளன. பெண்ணியம் பற்றியும், பெண்ணிய விடுதலை பற்றிப் பேசுகின்ற மேடைப் பேச்சாளர்கள், தங்களை பகுத்தறிவாளர்கள், புத்திக் கூர்மையர் என்பவர்களின், இது பற்றிய நிலைப்பாடுதான் என்ன?. தமிழ்க் குமுகாயத்திலே தமிழ்ப் பண்பாட்டிற்கு இலக்கணமாய் கண்ணகியார், மாதவியாரா, திலகவதியார்,பூதப்பாண்டியனின் தேவி கோப்பெ



ரும்பெண்டு போன்ற பலரிருக்கவும் தண்டிக்கப்பட்டவர்களின் நினைவூட்டல் எதற்கு?. வைதீகவேத மநுநெறி(வேதமிருதி) கூறும் உலகில் பிறந்த பெண்களனைவருமே இழிவுப் பிறவிகள் என்பதை ஊறுதிசெய்யவா?.

சங்ககாலத்தில் (2000 ஆண்டுகளுக்கு முன்) தொல்தமிழர் கைக்கொண்ட திருமணமுறையை சங்க இலக்கியமான அகநானூ றின் 86ஆம், 136ஆம் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. வளர் பிறை நாளிலே முழு(முகுர்);த்தக்கால் நடப்பெற்று மணப்பந்தல் போடப்படும். வாழை, கமுகு போன்ற மரங்கள் கட்டப்பட்டு, மணமேடையில் அரசனைக் குறிக்க அரசங்கொம்பொன்றும் கட்டப்படும். மணப்பந்தலில் வெண்மணல் பரப்பி மணமேடை யில் மணமக்களின் பார்வைக்கு முளைப்பாலிகை(ஒரு சட்டியில் முளைக்க வைக்கப்பட்ட தொண்டு(9) தவசங்கள்(தானியங் கள்) வைக்கப்படும்.வெள்ளுவா(பௌர்ணமி) நாளில் அகவை முதிர்ந்த வாழ்வரசிகள் மணமக்களை மஞ்சள் நீராட்டி,புத்தாடை அணிவித்து மணமேடையில் அமர்த்தி திருநாண் பூட்டு நிகழ்த் தினர். சான்றோரும் மற்றோரும் மணமக்களை வாழ்த்தினர். விழாவில் கலந்து கொண்டவர்க்கு இறைச்சியுடன் கலந்த நெய் கலந்த வெண்சோறு வழங்கப்பட்டது. கண்ணப்ப நாயனார் இறைவனுக்கு இறைச்சிதான் படைத்தார், சிறுத்தொண்டர் தன் பிள்ளையையே கறியாக்கிப் படைத்தார். அண்மைக் காலம் வரை சில கோயில்களில் விலங்குப்பலி இடும் வழக்கம் காணப் பட்டதெனலாம்.இன்று வீட்டாரின் விருப்பத்திற்கு ஏற்ப விருந்து வழங்கப்படுகிறது..

இன்றைய தமிழர் பண்பாட்டுத் திருமணங்களில் குறித்த நன்நாளிலே மணப்பந்தலுக்கான முழுத்தக் கால் நடப்பட்டு அக் காலைச் சுற்றி தொண்டு(9) தவசங்கள்(தானியங்கள்) விதைக் கப்பட்டு திருமணநாள்வரை நீர்தெளித்து வளர்க்கப்படும். (முளைப்பாலிகை).திருமண நாளன்று மணமக்கள் தம்தம் இல் லங்களிலேயே மஞ்சள் நீராட்டிவித்து தோழன் தோழியருடன் முன்பினனாக மணமேடைக்கு அழைத்துவரப்படுவர். அவர்க ளின் இருக்கைக்கு முன்பாக மங்களப் பொருட்களான நிறை குடம், வெற்றிலை, பாக்கு, பழம், குத்துவிளக்கு(ஒளியூட்டப் பெற்றவை) மாற்றுமாலைகள்,உதிரிப்பூக்கள், விரும்பின் திரு நீறு, சந்தனம், குங்குமம், பன்னீர்செம்பு என்பனவும் வைக்கப்ப டலாம்.

திருமணத்திற்கு உரித்தான ஒருவர் விழாத் தலைவரை அழைப் பார். அவையோர், மணமக்கள் யாவரும் எழுந்து நிற்க தமிழ்த் தாய் வாழ்த்தும், திருக்குறள் இறைவணக்கப் பாடல்களும் பாடப் படும். பாடல்களின் பின் நாற்காலியில் வைக்கப்பட்டுள்ள திருவள்ளுவர் திருவுருச்சிலைக்கு அல்லது அவரது நிழற்படத் திற்கு அல்லது திருக்குறள் நூலிற்கு மணமக்கள் மலர் சாற்று வர். தலைவரின் தலைமை உரையைத் தொடர்ந்து மணமக்கள் தம்தம் பெற்றோரின் கால்களைக் கழுவி, சந்தனம்பூசி, மலர் ச ஏற்றி ,வணங்கி எழுவர். பெற்றோர் மணமக்களின் கைகளை இணைப்பர் இதன்பின்னாக மணமக்கள் திருக்குறளை உள்ளீடா கக் கொண்ட உறுதிமொழியை எடுப்பர்.

அடுத்து உறவாடிகள்(சம்பந்திகள்) ஒருவருக்கொருவர் மதிப் புச் செய்வர்(மாலையிடலாம்). அவை வாழ்த்துதலுக்காக திரு நாணுடன் கூடிய மங்கலத்தட்டு அவை சென்று வந்தபின் மணமக்கள் புத்தாடைகளை மாறி வழங்குவர். இருவரும் உடை மாற்றி வந்தவுடன்(இதை தவிர்க்க விரும்பினால் விடலாம்) திருநாண்கட்டுதல் அவையோர் வாழ்த்துதலுடன் நிறைவேற்றப் படும். பின் மணமக்கள் மாலை மாற்றிக் கொள்வர். இதன்பின ஓரிருவர் வாழ்த்துரை வழங்கலாம்.இவ்வேளை மணமக்களுக்கு பால்பழம் வழங்கலாம். தொடர்ந்து வாழ்வரசிகளால் ஆலாத்தி எடுத்து பொட்டிட்டபின் அவையோர் பூக்களால் அல்லது அறு கரிசி தூவி வாழ்த்தல் இடம்பெறும். வாழ்த்தலைத் தொடர்நது அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்படும்(சைவம் அல் லது அசைவம்).

இத்திருமணமுறையில் ஒரே மதத்தினரோ, இருவேறு மதத்தின ரோ(மதம் மாறாது) திருமணம் செய்துகொள்ளலாம். சிலவேளை களில் மணமக்களின் பெற்றோரில் ஒருவர் மட்டும்தான் இருப் பர். பிள்ளைகள் இருப்பவரே(தாயோ, தந்தையோ அவர்களின் உடன் பிறப்போடு) தங்களை கையளிக்க வேண்டும் என விரும் புவதால் அச்செயற்பாடும் உள்வாங்கப்பட்டுள்ளது. இந்நடை முறையை திருக்குறளுக்குப் பகரமாக(பதிலாக) தேவார, திரு வாசகம் ஓதியும் நடைமுறைப் படுத்த முடியும்.இதன் நோக்கம் தமிழ்மொழி இழிவுமொழியல்ல உலகின் முதன்மொழி, உயர்ந்த மொழி என்பதை தமிழர் ஒவ்வொருவரும் உணர்ந்து கொள்ளவே ணடும், அத்தோடு தமிழன் வீட்டில், அவனது வழிபாட்டு இடங்க ளில் தமிழே கோலோச்சவேண்டும். இது தமிழனின் அடிப்படைப் பிறப்புரிமை என்பதை தமிழன் ஒவ்வொருவனும் நெஞ்சில் நிறுத் திக் கொள்ளவேண்டும். அதுவே இப்பிறப்பெடுத்ததின் நோக்கம்.

**வாழ்க தமிழ்! வளர்க பகுத்தறிவு!!**
**மறுமலர்ச்சி பெறுக தமிழர் பண்பாடு!!!**

**குறிப்பு:-வேற்றுமொழிச் சொற்கள்,எழுத்துக்கள் (வடமொழி,கிரந்தம்) முடிந்தவரை தவிர்க்கப்பட்டுள்ளது.**

.



தமிழ்நிதி அருணா செல்லத்துரை



# இராவண மகாராசாவின் சமாதிக்கு காலாங்கி நாதர் சித்தர் விஜயம் செய்துள்ளார்

**கி**.பி. 2020 களில் கண்ணுக்கு தெரியாத குரோனா வைரஸ் உலகத்தையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் காலமிது. 21ம் நூற்றாண்டுக்குள்ளே கடல் பெருக்கெடுத்தது. சுனாமியால் காவு கொண்ட உயிரிழப்புகளைப் பார்த்திருக்கிறோம். இலங்கையில் யுத்தத்தினால் ஏற்பட்ட உயிரிழப்புகளை நேரில் கண்டிருக்கின்றோம். இவையனைத்தும் எமது கண் முன்னே நடந்து முடிந்தவை.


இடம்பெற்றுக் கொண்டிருக்கின்ற உயிரிழப்புகள் எமக்கு எதையோ சொல்லிக் கொண்டிருக்கின்றன. அது என்ன என்று நாம் சிந்திக்க முடியாதவர்களாக இருக்கின்றோம். எமது உயிர் எப்போது பிரியும் என்ற காலத்தை நேரத்தை தெரிந்து கொள்ள முடியாதவர்களாக இருக்கின்றோம். இதனால் எமது சிந்தனையில் பல குழப்பங்கள் ஏற்பட்டுள்ளன. இதுபற்றி நான் அறிந்தவற்றை வாசித்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும். இந்த விடயத்தில் மிகவும் தேர்ந்தவர்கள் இருப்பார்கள் அவர்களின் கருத்துக்கள் வரவேற்கப்படுகின்றன.

இவ்வுலக வாழ்வை தான் எப்போது முடித்துக் கொள்ள வேண்டும், தனது உயிர் எப்போது பிரிய வேண்டும் என்பதை தீர்மானிக்கும் சக்தி உடையவர்கள் இந்த வையகத்தில் இருந்திருக்கிறார்கள். அது அவர்களுக்கிருந்த உரிமையாகும். தனது உயிர் பிரியும் நேரம் வந்துவிட்டது அல்லது பலவித காரணங்களினால் இவ்வுலக வாழ்வைத் துறக்க வேண்டும் எனத் தானே தீர்மானித்து அதற்கு தயாராகி சமாதி இருந்தவர்கள் பற்றிய வரலாறுகள் அநேகம் எம்மத்தியிலே இருக்கின்றன. இதனை வடக்கிருத்தல் என்று அழைத்திருக்கின்றார்கள். இலேசாக விளங்கிக் கொள்ளும் வகையில் கூறுவதாக இருந்தால் யோகாசனம் செய்வது ஒரு பயிற்சியாகும். இது எமது உடலை நோய் நொடி இல்லாமல் வைத்திருப்பதற்கு உதவுவது என்பது நம் மத்தியிலே இருக்கும் பொதுவான நம்பிக்கையாகும்.

இதில் மூச்சுப் பயிற்சி (பிராணாயாமம்) முக்கியமான ஒன்றாகும். உலக நடப்புகளில் உள்ள சரி பிழைகளை விளங்கிக் கொண்டவர்கள் தமது இவ்வுலக நினைவுகளையும் உணர்வுகளையும் மறந்து நீண்டநேரம் மூச்சையடக்கி தியானத்திலிருப்பார்கள். இந்தப் பயிற்சியின் உச்சக் கட்டமாக தான் தீர்மானிக்கும் நேரத்தில் உயிர் மூச்சை உச்சந்தலையில் அடக்கிக் கொள்வது பயிற்சியின் முக்கிய அம்சமாகும். அடக்கிய மூச்சை திரும்பவும் வரவழைத்து தியானத்திலிருந்து மீண்டு இவ்வுலக வாழ்வில் ஈடுபடுவதும் வழக்கம். இந்தப் பயிற்சியின் முடிவில், தங்களது மூச்சை நீண்ட நேரம் அடக்குவதே பயிற்சியின் முதிர்ச்சியாகும். நாட்கணக்கில் வருடக்கணக்கில் முதிர்ச்சி நிலையை அடைந்து தொடர்ச்சியாக தியானத்தில் இருப்பதை சமாதியடைதல் என்று அழைத்துள்ளார்கள். இப்படி சமாதியடைந்தவர்கள் யோகிகள் சித்தர்கள், முனிவர்கள் என தமிழிலும் ரிஷிகள் என்று வடமொழியிலும் அழைக்கப்பட்டுள்ளனர். சைவ சமயத்தில் யோகப்பயிற்சியில் முக்கியமானவர் முதன்மையானவர் 'மகா-யோகி' என்று அழைக்கப்பட்ட சிவபெருமானாகும்.

## சித்தர் காலாங்கி நாதர்

இந்தியாவில் கோடிக்கணக்கான சித்தர்கள் வாழ்ந்துள்ளனர். இவர்க



ளுள் ஒரு சிலர் மாமுனிவர் என்றும் மகா முனிவர் என்றும் அழைக்கப்பட்டுள்ளனர். இவர்கள் பற்றிய விபரங்கள் ஆய்வுகள் செய்யப்பட்டு இணையத்தளங்களில் அந்தந்த சித்தர்களுடைய பெயர்களில் வெளிவந்த வண்ணம் இருக்கின்றன. அவர்களுள் 18 பேர் முக்கியமான சித்தர்கள் என்று குறிப்பிடப்படுகிறது. 60 சித்தர்கள் சிறப்புள்ளவர்களாக இருந்தார்கள் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது

இவர்களில் அனேகமானவர்கள் மூலிகை வைத்தியங்களில் (Herbal Healer) சிறந்தவர்கள். அவர்களால் தயரிக்கப்பட்ட மருந்து வகைகள் மிகவும் சக்தி வாய்ந்தவை. நீண்டகாலம் நோய் நொடியின்றி வாழ்வதற்கு தேவையானவை மருந்து வகைகள் இருந்துள்ளன. அவர்களால் குறிக்கப்பட்டுள்ள நோய்களின் பெயர்கள் தற்காலத்திலும் பாவனையில் உள்ளமை விசேட அம்சமாகும்.

உருவத்தை மறைத்து அருவமாக காட்சியளிப்பதற்கென தயாரிக்கப்பட்ட குளிகை அவற்றில் முக்கியமானதாகும் என்று கூறப்;பட்டுள்ளது. நாடு விட்டு நாடு சென்று அல்லது கண்டம் விட்டு கண்டம் சென்று தமது அறிவையும் திறமையையும் பகிர்ந்து கொள்ள இந்தக் குளிகைகள் சித்தர்களுக்கு உதவியுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் வாழ்ந்த சித்தர்கள் பலர் சீனா, பர்மா, இலங்கை, மற்றும் மெக்சிக்கோ போன்ற நாடுகளுடன் மிகவும் நெருங்கிய தொடர்புடையவர்களாக இருந்துள்ளார்கள். புராதன காலத்தில் இந்தச் சித்தர்கள் குளிகை வடிவில் இருந்த மருந்துகளை சாப்பிட்டு தமது உருவத்தை அருவமாக்கி இருந்தமையும் குறிப்பிடப்பட்டுள்ளது. அருவமாக மாறியவர்கள் வேறு நாடுகளுக்குச் சென்று மூலிகை வைத்திய முறைகளையும்,விஞ்ஞானதெளிவுகளடியும் பகிர்ந்து கொண்டு பல சாதனைகளைப் புரிந்துள்ளனர்.

இவர்களில் மிகவும் சக்தி வாய்ந்தவரும், இலங்கைபற்றிய வரலாற்றுக் குறிப்பை தந்துள்ளவருமான காலாங்கி நாதர் என்று அழைக்கப்பட்ட சித்தர் என்று குறிப்பிடுவதில் இலங்கைத் தமிழர்களாகிய நாங்கள் பெருமை கொள்ளலாம். சைவ சமய சித்தர்களில் ஒருவரான திருமூலர் அவர்களின் ஏழு சீடர்களில்; காலாங்கி நாதரும் முக்கியமான ஒருவர் என குறிப்பிடப்படுகிறது.



**கமலமுனி**

காலாங்கி நாதர் பெனரஸில் கன்னார் குலத்தில் பிறந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது. பின்வந்த வரலாறுகளில்



**கன்ஞசர் மலை**

நாகர்குலம் என்பது பஞ்சகர்மாக்கள் என அழைக்கப்பட்டுள்ளனர். பஞ்ச கர்மாக்களில் கன்னார் என்ற பிரிவும் உள்ளது.



காலாங்கி நாதர் அவர்கள் கமலமுனி எனவும் அழைக்கப்பட்டுள்ளார் என்று அவரது சீடரான போகர் நாத சித்தர் தமது பாடலில் தெரிவித்துள்ளார். கமலமுனி என அழைக்கப்பட்ட கலாங்கி நாதர் குறவர் குலத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அவர் தமிழ் வைகாசி மாதம் ( May-June) பூச நட்சத்திரம் 2ம் பாதத்தில் பிறந்தவர் என்று போகருடைய பாடலில் தெரிவிக்கப்படுகிறது. இது தமிழர் காலக் கணிப்பாகும்.

**01. படம் : கமலமுனி**

இவர் கன்சமலைச் சித்தர் எனவும் அழைக்கப்பட்டுள்ளார். கன்சஞம் என்பது தங்கம், வெள்ளி, இரும்பு போன்ற உலோகங்களைக் குறிப்பது. அவை இருந்த மலை என்பதையே இது குறிக்கிறது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்தோடு இந்த மலையில் அபூர்வமான மூலிகைகள் இருந்ததும் ஒரு முக்கியமான காரணமான இருந்திருக்கிறது.

**02. படம் : கன்ஞசர் மலை**

காலாங்கி நாதர் வட இந்திய மற்றும் தென்னிந்திய பாரம்பரிய சித்த வைத்தியத் துறையில் சிறந்தவர். இதனால் இவருக்கு தென்னிந்தியாவில் உள்ள கான்சஞ மலையுடன் தொடர்புடையவராக இருந்தார் எனவும் எழுதப்பட்டுள்ளது. இவர் மா-முனி எனவும் அழைக்கப்பட்டார்.

காலாங்கி நாதர் குளிகைகளை பயன்படுத்தி சீனா சென்று வாழ்ந்தவர் என்று குறிப்பிடப்படுகிறது. காலாங்கி நாதர் நீண்ட காலம் சீனாவில் வாழ்ந்த போது அவர் கொன்பியுசியஸ் (Confucius) என்று அழைக்கப்பட்டுள்ளார். யோகா மற்றும் வர்மக்கலை (அக்குப் பஞ்சர்) போன்றவற்றை சீன மக்களிடையே அறிமுகம் செய்துள்ளார்.

**03.படம்: Confucius**
**(காலாங்கி நாதர்)**

சீன வரலாறுகளில் கொன்பியுசியஸ் (Confucius) கிறிஸ்துவிற்கு முன்னர் 551ம் ஆண்டு (BCE, as per Chinese sources) லூ (Lu) என்ற சீனக் கிராமத்தில் பிறந்தார் எனத்; தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் கி.மு. 479ம் ஆண்டு காலமானார். இதன்படி கொன்பியுசியஸ் 72 ஆண்டுகள் உயிர் வாழ்ந்தவர் என்பது தெளிவாகிறது.

கி.மு.காலக்கணிப்பு 500-400-300 என

மேலிருந்து கீழ்நோக்கி வருவதாகும். கொன்பியுசியஸ் பிறந்தது கி.பி.551ம் ஆண்டாகும். 600 க்கும் 500க்கும் இடைப்பட்டது கி.மு. 6ம் நூற்றாண்டாகும். கொன்பியுசியஸ் காலமாகியது (சமாதியடைந்தது) கி.மு.479ம் ஆண்டாகும். 500-400க்கும் இடைப்பட்டது 5ம் நூற்றாண்டு என்பது குறிப்பிடத்தக்கது.

கொன்பியுசியஸ் (காலாங்கி நாதர்) பற்றிய இந்தக் காலக் கணிப்புகள் இலங்கை வரலாற்றோடு எவ்வாறு ஒத்துப் போகிறது என்பதை பின்னர் விபரிப்போம்.

காலாங்கி நாதர் முக்தியடைந்தது (immortal stage) காஞ்சிபுரத்திலாகும். அவருடைய ஜீவ சமாதி தமிழ்நாடு காஞ்சிபுரம் மாவட்டத்தில் இருக்கிறது. காலங்கி நாதர் நீண்டகாலமாக சாமாதியடைவதற்கு எதிர்பார்த்திருந்தார். அப்போது சீனாவில் தனது கடமைகளை தொடர்ந்து செய்வதற்கு முக்கிய சீடர்களில் ஒருவரான போகர் நாதர் சித்தரை தெரிவு செய்திருந்தார்.

போகர் நாதர் அவர்களுக்கு காலாங்கி நாத சித்தர் சமாதியடைவதற்கு முன்னர் வழங்கிய உபதேசங்களில் இலங்கைக் கடற்கரையில் கட்டப்பட்டிருந்த கோட்டையின் நடுவே அமைக்கப்பட்டிருந்த இராவண மகாராசாவின் சமாதியைப் பார்க்கச் சென்றபோது ஏற்பட்ட அனுபவத்தையும் கூறியிருந்தார். இந்த விடயத்தை, போகரின் சப்த காண்டம் - 7000 பாடல்கள் என்ற நூலில் மூன்றாம் காண்டத்தில் 2401 - 2417 வரை உள்ள 16 பாடல்களில் தெரிவிக்கப்பட்டுள்ளமை இலங்கை வரலாற்றின் முக்கிய திருப்புமுனையாகும்.



**04. படம் : காலாங்கி நாதர் போகருக்கு போதனை**

*காலாங்கி நாதர் சமாதியடையச் செல்வதற்கு முன்னர் போகர் சித்தருக்குப் பல உபதேசங்களை வழங்கினார், என்று போகரின் பாடலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவருடைய சமாதி தமிழ் நாட்டில் சேலம் மாவட்டத்தில், சேலம் நகரிலிருந்து 12 கிலோமீற்றர் தொலைவில் அமைந்துள்ளது. அங்கு அவருடைய சிறப்பான சிவ த பா ஊரம் (Siva-dha- pa-uram) என்ற ஆலயம் எல்லம்பிள்ளை என்ற கிராமத்திற்கு அருகில் இருக்கின்றது. இந்தப் பிரதேசத்தில் இந்த ஆலயம் சித்தர் கோவில் என அழைக்கப்படுகின்றது. (கி.மு.5ம் நூற்றாண்டு என்று சீனக்கணிப்புகள் குறிப்பிடடாலும், 5000 ஆண்டுகளுக்கு முன்னர் அவர் சமாதியடைந்ததாக தமிழ் வழி வரலாறுகள் தெரிவிக்கின்றன.*

போகர்அல்து போகர் நாதர் – 7000 என்ற பாடல் தொகுப்பு 7 காண்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ள காரணத்தினால் சப்த காண்டம் என அழைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு காண்டத்திலும் 1000 பாடல்கள் இருக்கின்றன.

பிரான்சில் குகன் ஆதினம் அவர்களுடன் சிறிது நாட்களுக்கு முன்னர் தொலைபேசியில் பேசிக்கொண்டிருக்கும்போது இராவண மகாராசா பற்றிய பல விபரங்களைக் கலந்துரையாடியிருந்தேன். இலங்கையின் மேற்குப் பகுதியில் மன்னார் தீவகத்திற்கு கிழக்கேயுள்ள நிலப்பரப்பின் கடற்கரையில் உள்ள மாளிகைத் திடல் என்பது இராவண மகாராசாவுடைய கோட்டைகள் இருந்த இடம் என்பதை தெளிவாகக் குறிப்பிட்டிருந்தேன்.

அவரும் மிகவும் ஈடுபாடு காட்டினார். பழனி முருகன் நவ பாசாணத்தை பற்றி ஆய்வு செய்தபோது, இராவண மகாராசா பற்றிய விபரங்களை போகர் சித்தருடைய பாடல்களில் கண்டு, அவரைப்பற்றி தேடுவதில் ஆர்வம் காட்டி வரும் என்னிடம் இந்தப் பாடல்களை தந்துள்ளமை இலங்கை வரலாற்றில் ஒரு முக்கிய நிகழ்வாகும் என்று கூறலாம்.

தொடரும்....



கலாநிதி பாலா. சிவகடாட்சம் எழுதும்



# யாழ்ப்பாண மன்னன் செகராஜசேகரன் ஆக்குவித்த இரசவர்க்கம்

## கடுகு


படுகின்ற ரத்தம்போம் பாலார்
முலை சுரக்கும்
அடுகின்ற மூலம்
அணுகாது- தொடுகின்ற
தாளிதத்துக்காகும் தழலாகும்
கண்டீர்
வாளித்த வல்ல கடுகு

**இதன் பொருள்:** பெண்களுக்கு மாதவிலக்கு காலத்தில் ஏற்படக்கூடியகூடுதலான உதிரப்போக்கைக் கட்டுப்படுத்தும். பாலூட்டும் தாய்மாருக்குப் பாற்சுரப்பை ஊக்குவிக்கும். மூலவியாதியைத் தவிர்க்கும். சமையலுக்குத் தாளிதம் செய்வதற்கு உதவும்.



Fiure 7 Mustard (கடுகு)

**மேலதிகவிபரம்:**பொதுவாக ஹோர்மோன் சமநிலை பிறழ்வு காரணமாக இளம் வயதுப்பெண்களுக்கும் நடுவயது கடந்தபெண்களுக்கும் மாதவிலக்கின்போது கூடுதலாக இரத்தம் வெளியேறுவதுண்டு. இதைக்கட்டுப்படுத்தப் பயன்படும் மூலிககளுள் கடுகும் ஒன்று. 40 கிராம்(8 தேக்கரண்டி)கடுகை எடுத்துநன்றாகப்பொடிசெய்துவைத்துக்கொள்ளவேண்டும். மாதவிலக்கு தொடங்குமுன்னரும் மாதவிலக்கின்போதும் கடுகுத்தூளில் இரண்டு கிராம் (அரைத்தேக்கரண்டியிலும் சற்றுகுறைவு) எடுத்து அதனைப் பாலுடன் அல்லது சுடுநீருடன் ஒரு நாளைக்கு இரு தடவைகள் அருந்தவேண்டும். கூடு



கலாநிதிபாலா.
சீவகடாட்சம்



தல் இரத்தப்போக்கைக்கட்டுப்படுத்த இது ஒரு சிறந்த வீட்டுவைத்தியம் என்று கூறப்படுகிறது.

கடுகில் செலெனியம் (selenium) என்னும் கனிப் பொருள் நிறைந்து காணப்படுகிறது. பாலூட்டும் தாய் மாருக்கு இந்த செலெனியம் ஏனையபெண்களைவி டச் சற்றுக்கூடுதலாகத் தேவைப்படுகிறது என்பதைச் சமீபத்தைய ஆய்வுகள் தெரிவிக்கின்றன. இந்த ஆய்வு களின்படி பாலூட்டும் தாய்மாருக்கு ஒருநாளைக்கு 70 ஞ்மைக்றோகிராம் (microgram) என்ற அளவிலும் கர்ப்பிணிப்பெண்களுக்கு ஒருநாளைக்கு 60 ஞ்மைக் றோகிராம் என்ற அளவிலும் ஏனையபெண்களுக்கு ஒருநாளைக்கு 55 ஞ்மைக்றோகிராம் என்ற அளவிலும் இது தேவைப்படுகின்றது. (ஒரு மைக்றோகிராம் (g) என்பது ஒரு கிராமின்(g) ஆயிரத்தில் ஒரு பங்காகும். (1 g = 0.001 g)

தைறொய்ட் (thyroid) கோளாறு உள்ளவர்கள் கடு கைக் கூடுதலாகவும் தொடர்ந்தும் எடுப்பதைத் தவிர்த் துக்கொள்ள வேண்டும் என்று கூறப்படுகிறது.

Mustard என்பது கடுகின் ஆங்கிலப்பெயர்.

Brassica nigraL.என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## சீரகம்

வாயின் அரோசிகம் போம்
வாந்திபோம் வாசனையாம்
நோயகலும் பித்தம் நொடியிற்போம்-
பாயில் சுரமும்கடுப்பும்போம்
சொன்னோமே சீரகத்தைத் தரமுடைய
கண்குளிரும் தான்

**இதன் பொருள்:** *சீரகம் வாய்க்கசப்பைப் போக்கி பசி யை ஏற்படுத்தும். வாந்தியை நிறுத்தும். உணவுக்கும் வாய்க்கும் ஒரு வாசனையைக் கொடுக்கும். பித்தத் தால் ஏற்படும் காய்ச்சல் தீரும். கண்ணுக்கும் நல்லது.*

வாய்வு அணுகாது வந்து பிணிசேராது
காயம்நெகிழாது இருகண்குளிரும்-சீயான
காரனைய கூந்தல்நல்லீர்கைகண்டதித்தனையும்
சீரகத்தைத் தின்பீர் தினம்

**இதன் பொருள்:** *சீவிய மேகம்போன்ற கூந்தலை உடைய பெண்ணே! சீரகத்தை உணவில் தினமும் சே ர்த்துக்கொள்வதனால் செமிபாட்டுக்குறைவினால் ஏற் படும் வாய்வு அணுகாது. நோய் ஏற்படாது. உடல் பல வீனம் அடையாது. கண்களுக்கும் நல்லது.இவை அத்த னையும் அனுபவமூலம் கண்டறிந்தவை*

### Figure 8 Cumin (நற்சீரகம்)

*மேலதிகவிபரம்:சீரகத்தில் இரும்புச்சத்து நிறைய உண்டு. பொதுவாக இந்தச் சத்துக் குறைவினால் பெண்கள், குழந்தைகள் மற்றும் பருவவயதினரே கூடு தலாகப் பாதிக்கப்படுகிறார்கள். இவர்கள் உணவில்*



*சீரகத்தைக் கூடுதலாகச் சேர்த்துக் கொள்வது நல்லது. பருவம் அடைந்த பெண்களுக்கு மாதவிலக்கின்போது வெளியேறும் இரத்தத்துடன் இரும்புச்சத்து இழக்கப்ப டுவதால் இவர்களுக்குச் சீரகம் சேர்ந்த கறிசமைத்துக் கொடுக்கும் வழக்கம் இலங்கைமக்களிடம் இருப்பதை இவ்விடத்தில் நினைவுகூரலாம். பெண்களில் மாதவி*

லக்குச் சுழற்சி சீராக நடைபெறுவதற்கு சீரகம் உதவுகிறது.

'சீரகம் தின்னச் சீரணம் யாவும்' என்பது மருத்துவப் பழமொழி. சமிபாட்டுகோளாறுகளைச் சீரகம் தீர்த்து வைக்கின்றது என்பது அனுபவமூலமாக அறியப்பட்ட உண்மை. உணவு உண்டபின் சீரகம், சீனி, மாங்காய்த் தூள் என்பன சேர்த்துத் தயாரிக்கப்படும் ஜீர கோலி (Jeera Goli)சாப்பிடுவது இந்தியர்களின் வழக்கம்.சமிபாட்டை ஊக்குவிப்பதுடன் வாய்க்குநறுமணத்தையும் சீரகம் தருகிறது.

Cumin என்பது நற்சீரகத்தின் ஆங்கிலப்பெயர்.

Cuminumcyminum L.என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

**Figure 9 Fennel**
**(பெருஞ்சீரகக்கீரை)**
**பெருஞ்சீரகம் (சோம்பு)**



சீரகத்தில் நற்சீரகம், பெருஞ்சீரகம் என்று இருவகை உண்டு.

பெருஞ்சீரகத்தை இந்தியாவில் சோம்பு என்றே குறிப்பிடுவார்கள்.

Fennel என்பது பெருஞ்சீரகத்தின் ஆங்கிலப்பெயர். இதன் கீரை அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் ஸலாட், சூப் என்பவற்றில் தாராளமாகச் சேர்க்கப்படுகிறது.

Foeniculum vulgare GAERTNஎன்பது பெருஞ்சீரகத்தின்இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## கருஞ்சீரகம்

கருஞ்சீரகத்தாற் கரப்பனும்புண்ணும்
வரும்சீராய்ப் பீனிசமும் மாறுமே-அருந்தினால்
காய்ச்சல்தலைவலியும் கண்வலியும்போமுலகில்
வாய்ச்சமருந்தெனவே வை

**இதன் பொருள்:** கருஞ்சீரகத்தால் கரப்பனும் புண்ணும் மாறும். பீனிசமும் மாறும். காய்ச்சல், தலைவலி, கண்வலி என்பவற்றையும் கருஞ்சீரகம்துரிதமாகத் தீர்த்துவைக்கும்.உலகத்தில் நமக்கு அருமையாகக்கிடைத்த மருந்து இது என்று அறிந்து கொள்வாயாக.

**Figure 10 Kalonji (கருஞ்சீரகம்)**



**மேலதிகவிபரம்:**அரபுநாட்டவர்களால் அருமருந்தாக எண்ணப்படுவது கருஞ்சீரகம். சாவு ஒன்றைத்தவிர மீதி எல்லாநோய்களையும் தீர்த்துவைக்கும் ஆற்றல் கருஞ்சீரகத்துக்கு உண்டு என முகம்மது நபி அவர்கள் கூறியதாக ஒரு செய்தியும் உள்ளது.ஏராளமான இரசாயனப்பொருட்கள் கருஞ்சீரகத்தில் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. முகப்பரு தொடக்கம் சொறி முதலான தோல் வியாதிகள் மற்றும் தலைவலி, வயிற்



றுக்கோளாறுகள், ஆஸ்த்மா, என்பவற்றுக்கும் இது மருந்தாகப்பயன்படுகிறது. நோய் எதிர்ப்புச் சக்தியை ஊக்குவிப்பதன்மூலம் ஒவ்வாமையால் ஏற்படக்கூடிய பிரச்சனைகளைத்தீர்த்துவைக்கிறது.

கருஞ்சீரகத்தை அரைத்துப் பத்துப் போட்டால் தலை வலிக்கு நல்லது. கருஞ்சீரகத்தைவினிகரில்(vineger) வேகவைத்து வாய் கொப்புளித்தால் பல் வலிக்கு நல்ல பலன் கிடைக்கும்என்று கூறப்படுகிறது.

அமெரிக்காவின் பிலடெல்பியா (Philadelphia) மாநிலத்தில் உள்ள தோமஸ்ஜெபெர்சன் பல்கலைக்க ழகத்தைச் (Thomas Jefferson University) சேர்ந்த ஆய்வாளர்களின் கண்டுபிடிப்புகளின்படி கருஞ்சீரக விதைகளில் இருந்து பெறப்படும் எண்ணெயில் உள்ள தைமொக்குயினோன் (thymoquinone) என்னும் இரசாயனம் கணையத்தில் ஏற்படும் புற்றுநோய்க்கு (Pancreatic cancer) மருந்தாகும் என அறியப்பட் டுள்ளது.

Black cuminஎன்பது கருஞ்சீரகத்தின் ஆங்கிலப்பெயர்.

Kalonji இதன் வர்த்தகப் பெயர்

Nigella sativa என்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.

## வெந்தயம்

மாந்தங்கணசுரத்தை மாத்திவிடும் வல்வினையால்
ஏந்தல்வாய்க்களிச்சல் ஏகுமே-
போந்துடம்பு வெச்சென்றால் போக்கிவிடும் மெல்லிநல்லீர்கேளீர்
அச்சமறும் வெந்தயத்துக் காம்

இதன் பொருள்: வெந்தயம்சமிபாட்டுக்குறைவினால் ஏற்படும் மாந்தம், காய்ச்சல்,வலிப்பு என்பவற்றைக் குணமாக்கும். வாந்தி, வயிற்றோட்டம் என்பவற்றைப் போக்கும். உடம்புச்சூட்டைக் குறைக்கும்.

Figure 11 Fenugreek (வெந்தயம்)



**மேலதிகவிபரம்:**இரவில் தூங்குவதற்கு முன்ஒரு தேக்கரண்டி அளவு சுத்தமான வெந்தயத்தை எடுத்து200 mL (ஒரு கப்) தண்ணீரில் ஊறவைக்கவேண்டும். காலையில் எழுந்ததும் வாய் கொப்பளித்த பின் தண்ணீரில் ஊறிய வெந்தயத்தை சாப்பிட்டுவிட்டு அந்தத்தண்ணீரையும்குடிக்கவேண்டும்.வாரம் ஒருமுறை இவ்வாறு செய்துவரஉடல் சூடு, மலச்சிக்கல்என்பன வராமல் தடுக்கலாம். கோடைகாலத்தில் மோரில் வெந்தயத்தை ஊறவைத்தும் குடிக்கலாம். நீரிழிவு நோயாளர்க்கும் இது நல்லதுஎன்று கூறப்படுகிறது.

வெந்தயத்துடன்சிறிதளவு பெருங்காயத்தையும் போட்டு வறுத்து அரைத்துஎடுத்த தூளை ஒரு கோப்பை வெந்நீரில் அல்லது மோரில் போட்டுக் குடிக்க வயிற்றோட்டம் செமியாக்குணம் என்பன தீரும்என்னும் ஒரு நம்பிக்கையும் உண்டு.

Fenugreek என்பது வெந்தயத்தின் ஆங்கிலப்பெயர்.

Trigonellafoenum&graecum Lஎன்பது இதன் இலத்தீன் விஞ்ஞானப் பெயர்.



# 'இலிங்க பூமி'

தமிழ்நிதி அருணா செல்லத்துரை

இலங்கையில் இருந்த சமயங்களுள் சைவம் ஆதியானது. தென்னிந்தியாவில் சைவம் செழித்தோங்குவதற்கு முன்னரேயே இலங்கையில் இலிங்க வழிபாடு மிகவும் பிரபலமாகியிருந்ததை திருமுறைகள் மூலம் நாம் தெரிந்து கொள்ளலாம். புராதன காலம் தொடக்கம் அடங்காப்பற்று- வன்னியில்; பரவலாக இலிங்க வழிபாடு பெருமளவில் இடம் பெற்றுள்ளமைக்கான தொல்லியல் ஆதாரங்கள் நிறையவே உள்ளன. அதனால் இந்தப் பிரதேசத்தை இலிங்க பூமி என்றழைக்கலாம் என்பது எனது கருத்தாகும்.

வடஇந்திய வான்மீகி முனிவர் இலங்கையை ஞானக்கண்ணால் பார்த்து இலங்கையில் இருந்த இராவண மகாராசாவை உள்ளடக்கி இராமாயணத்தை எழுதியுள்ளார். 12ம் நூற்றாண்டில் வான்மீகியின் இராம காதையை தமிழில் மொழிபெயர்த்த, தலைசிறந்த தென்னிந்திய கவிஞரான கம்பரும் இலங்கைக்கு வந்திருக்கவில்லை.

காவியத்தின்; முக்கிய கதாபாத்திரங்களாக இலங்கையைச் சேர்ந்த இராவண மகாராசாவும் வடஇந்தியாவைச் சேர்ந்த தசரத சக்கரவர்த்தியின் மகன் இராமரும் உள்ளனர். இதனால் ஞானக்கண்ணால் பார்த்து எழுதப்பட்ட காவியங்களில் உள்ளவற்றை இலங்கையின் வரலாறாக நாம் எடுத்துக் கொள்ள முடியாது. வடஇந்தியாவில் விஷ்ணுவை முழுமுதற் கடவுளாக வழிபடும் வைணவம் இருந்தது. அண்டை நாடான இலங்கையில் சைவ சமய இலிங்க வழிபாடு செழித்தோங்கியிருந்தது.

இலங்கையில் வைணவத்தை பரப்பவும் அதனை வடஇந்திய நிர்வாகத்தின் கீழ் கொண்டு வருவதற்கும் நடத்தப்பட்ட படையெடுப்பை நியாயப்படுத்துவதே இராமாயண காவியத்தின் உள்ளீடாக இருக்கிறது. வைணவ மதத்தைச் சேர்ந்த இராமரின் புகழைப் பாடுவதற்காக இயற்றப்பட்ட காவியத்தில் இராமரை உயர்த்தியும் சைவ சமயத்தை சேர்ந்தவரான இராவணனை தாழ்த்தியும் கவிஞர் படைத்திருப்பது காவியப் படைப்பின் பண்பாக உள்ளது.



**திருமுறைகளில் சிவலிங்க தலங்கள் :** இந்தியாவில் கி.பி. 7ம் நூற்றாண்டுகளில் 1008 சிவதலங்களுக்குச் சென்று சிவபெருமானின் சிவலிங்க வடிவ பெருமைகளை தேவாரங்களாகப் பாடியவர் திருஞானசம்பந்தராகும். அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்திற்குள் இருக்கும் இரண்டு சிவலிங்க தலங்களைப் பற்றி, ஏழாம் நூற்றாண்டில் திருமுறைகள் பாடிய நாயன்மார்களுள் திருஞானசம்பந்தர் முக்கியமானவராகும். இவர் இலங்கையில் வாழ்ந்த இராவண மகாராசாபற்றி இராமேஸ்வரப் பதிகத்திலே படியுள்ளதிலிருந்து இராவண மகாராசாவின் இலிங்க வழிபாட்டுச் சிறப்பை புரிந்து கொள்ள முடியும்.



**இலங்கையில் இலிங்க வரலாறு :** கி.மு.3084 ம் ஆண்டுகளில் (அதாவது இன்றிலிருந்து சுமார் 5100 வருடங்களுக்கு முன்;னர் கலியுகத்தில்) இலங்காபுரம் இராஜதானியில் வாழ்ந்ததாகக் கூறப்படும் இராவண மகாராசா காலத்தில் இலிங்க வழிபாடு சிறப்புற்றிருந்தது என்பதற்கும், சைவத்தின் அடையாளமாக விளங்கும் விபூதிக்கு அவர் கொடுத்திருந்த முக்கியத்துவத்திற்கும் சைவசமயக் குரவர்கள் பாடிய திருமுறைகள் சான்று பகருகின்றன. பன்னிரு திருமுறைகளில் 400க்கும் மேற்பட்ட இடங்களில் அவரின் சிறப்பு கூறப்பட்டுள்ளது இலங்கையில் இலிங்க வழிபாட்டின் முக்கிய தலங்களாக கோணேச்சரம், கேதீச்சரம் மற்றும் முனீச்சரம் ஆகிய தலங்களைக் கொள்ளலாம்.

தற்போது மன்னார் மாவட்டத்திலுள்ள மா-தோட்டம் பிரிவில் இராவண மகாராசாவுடைய இலங்காபுரம் இராஜதானி அமைந்திருந்தது என்பதை கி.பி.1926 களில் இராசநாயகம் முதலியார் எழுதிய யுணஉநைவெ துயகயெ என்ற நூலில் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளார். அதில் நாகர்களைப்பற்றிக் குறிப்பிடுகையில் பூநகரிப் பிரதேசத்தின் தென் பகுதியில் ஏராளமான நாகர்கள் வாழ்ந்ததாக ஒப்பீட்டு அடிப்படையில் மிகவும் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ள திருக்கோணேச்சரம், திருக்கேதீச்சரம் ஆகிய இரண்டு சிவலிங்க தலங்களுக்கு ஞான சம்பந்தரால் நேரடியாக வந்து பார்க்க முடியவில்லை. இராமேஸ்வரத்தில் இருந்து, தென்திசை நோக்கி ஞானக் கண்ணால் பார்த்து, இந்தத் தலங்களை பற்றிய தேவாரங்களைப் பாடியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இலிங்க பூமியில் ஏற்படுத்திய சேதங்களினால் தமக்கு ஏற்பட்ட தோசங்களுக்கு பரிகாரமாக, வைணவ மதத்தைச் சேர்ந்த இராமரும் அவருடன் சேர்ந்தவர்களும் இராமேஸ்வரத்தில் இலிங்க வழிபாடு செய்தனர் என்றும் அதற்கான அடையாளங்கள் இருப்பதாகவும் இராமேஸ்வர வரலாற்றுக் குறிப்புகளில் தொல்லியல் ஆய்வாளர்களும், சமய அறிஞர்களும் தெரிவித்துள்ளனர்.

**அடங்காப்பற்று வரலாறு :** இலங்கையின் வடபுலத்திலுள்ள பெருநிலப்பரப்பு அடங்காப்பற்று என்றழைக்கப்பட்ட கிழக்கு மூலை, மேற்கு மூலை, கரையோரப் பகுதிகள் மற்றும் மன்னார் ஆகியன தற்போது வன்னி தேர்தல் மாவட்டம் என பிரிக்கப்பட்டுள்ளது. இதில் மன்னார் ஒரு தீவகப் பிரிவாகும்.

இராவண மகாராசாவுடைய இராஜதானிகள் கிழக்கே கோணமாமலையிலும், மேற்கே மன்னார் தீவகத்தின் பரவைக் கடலுக்கு அடுத்திருந்த மா-தோட்டம் நிலப் பிரிவிலும் இருந்தன. அவர் வழிபட்டதாக கூறப்படும் கேதீச்சர இலிங்க ஆலயமும், புகழ்பெற்ற மாந்தைத் துறைமுகமும், பாலாவி தீர்த்தமும், இந்தப் பிரிவிற்குள் இருந்தன.

அடங்காப்பற்று வன்னிப் பிரதேசத்தின் வரலாறுகளும், பிரிவுகள் மற்றும் இடங்களின் பெயர்களும் வடஇந்தியாவில் எழுதப்பட்டுள்ள இராமகாதை வரலாற்றுடனும் அதற்குப் பின்னர் இடம்பெற்ற சம்பவங்களுடனும் நெருங்கிய தொடர்புடையது. இராவண - இராம யுத்தம் முடிவடைந்த பின்னர் அயோத்தியின் ஆட்சிக்கு உட்பட்டிருந்த இலங்காபுரம் இராஜதானியில் விபீஷணன் ஆட்சியாளராக பதவி ஏற்றார். அவருடன் இருக்க விரும்பாத இராவணனுடைய ஆதரவாளர்களான இயக்கர் நாகர் குலத்தவர்கள் இலங்காபுரத்தின் கிழக்குப் பகுதிகளுக்கு இடம்பெயர்ந்து குடியேறினர்.

மன்னார் தீவகத்திற்கு அடுத்திருந்த நிலப்பிரதேசம் இலங்காபுரம் எனவும், அதற்கு கிழக்கே இருந்த பகுதி கிழக்கு மூலை எனவும், கிழக்கு மூலைக்கு மேற்கே இருந்த பகுதி மேற்கு மூலை எனவும் பிரிக்கப்பட்டுள்ளமைக்கு வரைபடங்கள் சான்று பகருகின்றன.

பிற்காலத்தில் இலங்காபுரம் இராஜதானிக்கு கிழக்கே மற்றும் தென்மேற்கே இருந்த பிரதேசங்கள் அடங்காப்பற்று என்ற பெயரைப் பெறுவதற்கும் இராவண மகாராசாவுடைய வரலாறு காரணமாக இருந்துள்ளது. கிழக்குக் கரையோரப் பிரதேசங்கள் யானை வர்த்தகத்திற்கான பிரதேசமாக இருந்தபடியால் கரிக்கட்டுமூலை என அழைக்கப்பட்டுள்ளது.

**01. வரைபடம் மூலைகள்**



**இலிங்க வழிபாடு :** பெருநிலப்பரப்புப் பிரதேசம் இராவண மகாராசாவுடைய வரலாற்றோடு நெருங்கிய தொடர்புடையது. கருங்கல் காலத்தில் கட்டப்பட்டுள்ள ஆலயங்கள் இயக்கர் - நாகர் காலத்தில் கட்டப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. நாட்டின் கிழக்குக் கரையில் மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்ட கோணேச்சரம், மேற்குக் கரையில் பெரும் நிலப்பரப்பை உள்ளடக்கிய பெரியதோட்டம் என்ற

பெருள்பட பெயரைக் கொண்ட மா-தோட்டம் பிரிவில் இருக்கும் கேதீச்சரம் ஆகிய இரண்டு தலங் களும் கி.மு.3084ம் ஆண்டுகளில் வாழ்ந்ததாக கூறப்படும் இராவ ணேஸ்வரனுடைய வரலாற்றுடன் தொடர்புடையவையாக உள்ளன.

கருங்கற்களில் இலிங்கங்கள் பொளியப்பட்டு பிரதிஷ்டை செய் யப்படுவதற்கு முன்னர் ஆரம்ப காலத்தில் இலிங்க மற்றும் நாக வழி பாடுகள் நடுகல் வழிபாடாக இருந் தது என்பதற்கான தொல்லியல் சி ன்னங்கள் கிடைத்துள்ளன. இங்கு வாழ்ந்த நாகர்கள் ஐந்துதலை நாக வழிபாட்டிலும் இயக்கர்கள் இலிங்க வழிபாட்டிலும் ஈடுப்பட்டிருந்தனர். நீர்ப்பாய்ச்சலுக்கான ஆற்றங்கரை களிலும் குளக்கட்டுகளின் கரை களிலும் நாகர்களின் ஐந்துதலை நாக வழிபாட்டுக்கான அடையாளங்கள் நடுகல்லாகவே இருந்துள்ளன. அதே போல இயக்கர்களும் இலிங்க வழி பாட்டை நடுகல்லாக ஆரம்பித்திருக்க வேண்டும் என்பதற்கான தொல்லி யல் சின்னங்களை இந்தப் பிரதேசத் தின் பல பகுதிகளில் காணலாம்.

முல்லைத்தீவு மாவட்டத்தை குறுக் கறுத்து பேராறு கிழக்கு நோக்கிப் பாய்ந்து பெருங்கடலில் கலக்கிறது. இந்த ஆற்றின் கரைகளில் இலிங்க வழிபாடு, ஐந்துதலை நாக வழிபாடு இடம் பெற்றமைக்கான நடுகல் தொல் லியல் சின்னங்கள் காணப்படுகின் றன. வற்றாப்பளைக்கு அருகாகப் பாயும் பேராற்றங்கரையில் இருந்த இலிங்க நடுகற்கள் வற்றாப்பளை ஞானமூர்த்தி பிள்ளடியார் கோயிலில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளன.

**02. வற்றாப்பளை நடுகல்**



ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈசு வரர் தீர்த்தமாடும் கருடமடு கேணி ஒட்டுசுட்டான்-புதுக்குடியிருப்பு வீதியில் உள்ளது. இந்தக் கேணி யின் அருகே உருண்டை வடிவான கல் இலிங்க நடுகல்லாக பிரதிஷ்டை செய்யப்பட்டிருந்தது. அண்மைக் காலத்தில் இதனை பிள்ளையார் என வழிபடுகின்றனர்

**03: கருடமடு நடுகல்**



ஒட்டுசுட்டான் பகுதியில் கற்சி லைகள் உள்ள மடுவாக (நீர்நிலை) இருந்த இடம் கற்சிலைமடு என அழைக்கப்பட்டுள்ளது. தற்போது மடு குளமாக்கப்பட்டுள்ளது. இந்த குளத்தன் கீழுள்ள காட்டுக் குறைக் குள் பல தொல்லியல கருங்கல் சின்னங்கள் காணப்படுகின்றன. அந்தக் கருங்கல் சின்னங்களுள் சிறிய அளவிலான இலிங்கம் ஒன்று காணப்படுகின்றது.

**04 : கற்சிலை குளத்தின் கீழ் சிறிய இலிங்கம்.**



தட்டையான கற்களிலும் சிறிய அளவில் பொளியப்பட்ட இலிங் கங்கள் பல காணப்படுகின்றன. ஒட் டுசுட்டான் மற்றும் கற்சிலைமடுப் பகுதிகளில் சேகரிக்கப்பட்ட தட் டையான சிறிய இலிங்கம் ஒன்று ஏனைய பல தொல்லியல் சின்னங் களுடன் கற்சிலைமடுவிலுள்ள பாது காப்புப் பிரிவினரின் முகாமிற்கு அரு கில் வைக்கப்பட்டுள்ளது.

**05: பொளியப்பட்ட சிறிய இலிங்கம்.**



செட்டிகுளம் பகுதியில் சந்திரசே கரப் பெருமான் ஆலயம் கட்டப்பட் டிருந்தது. அதிலிருந்து சுமார் நாலு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள சிப் பிக்குளம் பகுதியில் ஓடும் சிற்றாற் றின் மறுபக்கத்தில் உள்ள நீர்நிலை சந்திரசேகரர் தீர்த்தமாடுவதற்காக கேணியாக மாற்றப்பட்டுள்ளது. வெளவால் பறப்பது போன்ற வடிவத்தில் இருப்பதினாலும், வாலை என்ற பெயரில் குளம் ஒன்று இருந்த காரணத்தினாலும் இந்த நீர்நிலைக்கு வெளவாலைக் கேணி என்று பெயர் சூட்டப்பட் டுள்ளதை 1895ம் ஆண்டு, குறிப் புகளில் இருந்து அறிய முடிகிறது. கேணி அமைந்துள்ள பகுதியின் சிற்றாற்றங்கரையில் தட்டையான தனிக்கல்லை இலிங்க வடிவில் பொளிந்து பிரதிஷ்டை செய்து வழிபாடு இடம்பெற்றுள்ளது.

**06. படம் : வெளவாலைக் கேணி இலிங்கம்**



பெருநிலப்பரப்பில் பல செங்கல் அடுக்குகள் காணப்படுகின்றன. அவற்றின் நடுப்பகுதியிலிருந்த செ ங்கற்கள் அகற்றப்பட்டுள்ளன.

இதுபோன்ற செங்கல் அடுக்குகள் பனங்காமம் - இளமருதங்குளம், செக்கடிப்புலவு, குமுழமுனை, மற்றும் ஓமந்தை முதலியாகுளம் கல்லுமலை ஆகியவற்றில் காணப்படுகின்றன. இந்த செங்கல் அடுக்குகளின் நடுவே இலிங்க வடிவக் கற்கள் வைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் நீண்ட காலமாக இருந்தது. அண்மையில் செட்டிகுளம் பிரதேசத்திலுள்ள கெங்கராயன் குளத்தில் ஆய்வுகள் நடத்தப்பட்ட போது செங்கல் அடுக்கின் நடுவே இலிங்கம் ஒன்று புதையுண்ட நிலையில் இருப்பது தெரிய வந்துள்ளது. அந்தப் புகைப்படம் சந்தேகத்தை மேலும் வலுப்;படுத்தியுள்ளது.

**07.படம் : கெங்கராயன் குளம் இலிங்கம்.**



இலங்காபுரம் இராஜதானிக்குள் இருந்த பிரதேசங்களில் முக்கிய சந்தியாக இருப்பது இரணை இலுப்பைக்குளம் என்ற புராதன கிராமமாகும். இந்தக் கிராமத்திலிருந்து வடக்கு நோக்கிச் சென்றால் பாணன்கமம், வவுனிக்குளம், மல்லாவி, உருத்திரபுரம், போன்ற இடங்களுக்குச் செல்ல முடியும். நடுகல் வழிபாட்டின் வளர்ச்சியாக இலிங்கங்களின் வடிவங்கள் பொளியப்பட்டு;ள்ளன. நீண்ட தனிக்கற்களில் இலிங்கங்கள் பொளியப்பட்டுள்ள பாரம் பரியத்தை காணக்கூடியதாக இருக்கின்றது. மன்னார் பிரிவிற்குள் இருக்கும் மேற்கு மூலையில் உள்ள இரணையிலுப்பைக் குளத்தில் சிறிய அளவிலான இலிங்கக் கோவில் இருந்தது. புதிய ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக இலிங்கம் பாலாபிஷேகம் செய்யப்பட்டிருந்தது. பின்னர் புதிய ஆலயத்தில் பிரதிஷ்டை செய்வதற்காக இலிங்கம் வெளியே எடுக்கப்பட்டது. இலிங்கத்தின் வடிவம் பிரதேசத்தில் காணப்படும் ஏனைய இலிங்கங்களை ஒத்திருந்தது.

**08.படம் : இரணையிலுப்பைக் குளம் இலிங்கம்.**



ஒட்டுசுட்டான்-கற்சிலைமடுவில் சிவலிங்கப் பிள்ளையார் ஆலயத்தின் அருகில் உள்ள பாதுகாப்புப் பிரிவினரின் முகாமிற்கு அருகில் சரித்து வைக்கப்பட்டுள்ள இலிங்கத்திற்கும் இரணையிலுப்பைக்குளம் இலிங்கத்தின் தோற்றத்திற்கும் பல ஒற்றுமைகள் காணப்படுகின்றன. கற்சிலைமடுவில் வைக்கப்பட்டுள்ள இலிங்கம், சுமார் சுமார் ஆறு கிலோமீற்றர் தொலைவில் உள்ள வாவெட்டி மலையில் இருந்து கொண்டு வரப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

**09.படம் : கற்சிலை மடு இலிங்கம்;.**



இலிங்க வடிவங்களில் ஏற்பட்ட வளர்ச்சிப் படிமுறைகளுக்கான பல ஆதாரங்கள் இந்தப் பிரதேசத்தில் காணப்படுகின்றன. எல்லப்பர் மருதங்குளம் குளக்கட்டின் கீழ் உள்ள பிள்ளையார் ஆலயத்தில் எண்கோண வடிவில் பொளியப்பட்ட இலிங்கம் இருக்கின்றது.

**10.படம் : எல்லப்பர் மருதங் குளம் எண்கோண இலிங்கம்.**



கல்வீரங்குளம் என்ற இடத்தில் உருண்டையான கல்லில் உச்சிப் பாகம் முடிபோன்ற வடிவில் பொளியப்பட்ட இலிங்கம் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

**11.படம் : கல்வீரங்குளம் இலிங்கம்**




ஓமந்தை - மகிழங்குளம் மற்றும் ஈச்சங்குளம் போன்ற பல இடங்களில் உருண்டையான நடு கற்களை பிரதிஷ்டை செய்து இலிங்க வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

தொடரும்....

# சுவாமி விபுலாநந்தர் பற்றிய பன்முக ஆய்வுகள்

பாகம் I





கலாநிதி.
பாலசுந்தரம் இளையதம்பி
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலை கனடா
வளாகம்.
ரொறன்ரோ.

**அறிமுகம்:**

சுவாமிவிபுலாநந்தர் தாம் வாழ்ந்தகாலத்தின் 'வரலாற்று நாயகன்' ஆவார். அவர் அவதரித்த மட்டக்களப்புக் காரைதீவிற் பிறந்து,காரைதீவிற் சுவாமிகளால் உருவாக்கிய இராமகிருஷ்ணமிசன் பாடசாலையில் ஆரம்பக் கல்வியையும்,சிவானந்த வித்தியாலயத்திற் பல்கலைக்கழகப் புகுமுகக் கல்வியையும் பெற்று,அவர் காட்டிய வழியிலே தமிழ் கற்றுயர்ந்தயான், இதுவரை காலமும் அவரைப் பற்றிப் படித்தவை,அறிந்தவை ஆகியனவற்றைப் புதிய கண்ணோட்டத்திலே தமிழ்ச் சமுதாயத்திற்குப் பயன்படத் தக்கவகையில் எடுத்துக் கூறவிழைந்ததன் பயனே இக் கட்டுரைத் தொடராகும். சுவாமிகளின் ஆளுமைகளை ஆராய்ந்து தொடர்கட்டுரைகளாகச் 'சிவஒளி' இதழில் எழுதுமாறு கேட்டுக்கொண்ட தமிழ்ப் பற்றாளர் இதழ் தலைமைஆசிரியர் தென்கயிலைசிவா அவர்களுக்குத் தமிழ்ச் சமூகம் நன்றி உடையதாகும்.இவ்விதழில் வெளிவரவுள்ள சுவாமி விபுலாநந்தரைப் பற்றிய கட்டுரைகள,; அவரது சமகால சமூகம்,சமயம்,பண்பாடு, இலக்கியம்,மொழி,அரசியல் சார்ந்த சிக்கல்கள்- எதிர்பார்ப்புகள் ஆகியவற்றையும்,சுவாமிகள் அவற்றுக்கு முகம் கொடுத்து மேற்கொண்ட எதிர்நீச்சல் செயற்பாடுகளையும் நன்கு ஆராய்ந்து, காலத்தின் தேவைக் கேற்பச் சுவாமிகள் செயற்பட்ட பாங்கினையும்,தொலைநோக்குடன் வெளிப் படுத்த முனைந்துள்ளன.


சுவாமி விபுலாநந்தர் பற்றி முழுமையாக அறிந்து கொள்வதற்கு அவரது கல்விப் பின் புலத்தை அறிதல் இன்றியமையாததாகும். இலங்கையின் கிழக்கிலுள்ள மட்டக்களப்புக காரைதீவு என்னும் பதியிற் சாமித்தம்பி -கண்ணம்மை இணையருக்கு மகவாகத் 1892ஆம் ஆண்டுமார்ச் மாதம் 27ஆம் நாள் சுவாமிவிபுலாநந்தர் பிறந்தார். இவருக்குப் பெற்றோர் மயில்வாகனன் எனப்; பெயரிட்டும கிழ்ந்தனர். இவர் 1897 -1901வரை காரைதீவில் அமைந்திருந்த மெதடிஸ்த மிசன் தமிழ்க் கலவன் பாடசாலையிலே தொடக்கக் கல்விகற்று, கல்முனை மெதடிஸ்த வீஸ் ஆங்கில ப்பாடசாலையில் இடைநிலைக் கல்வியைப் (1901--04)பெற்றரார். பின்னர், உயர் இடைநிலைக;கல்வியை மட்டக்களப்பு நகரிலுள்ள மெதடிஸ்த மத்தியகல்லூரியிலும் (1904---06)பின்னர் மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரியிலும் (1906-1908) பெற்

றுக்கொண்டார். அதேவேளை கேம்பிரிஜ் சீனியர்ப ரீட்சையிலும் தேர்ச்சிபெற்றார். அவரது கல்வித்திறமை யால் புனிதமிக்கேல் கல்லூரியிலும்(1911),பின்னர் கல்முனைகத்தோலிக்கஆங்கிலப்பாடசாலையிலும் (1912) ஆசிரியரானார்.

ஆசிரியராகப் பணிபுரிந்தபோதும்,தொடர்ந்தும் கற்கவேண்டும் என்ற ஆர்வத்தினாற் கொழும்பு அரசினர் ஆசிரியர் கல்லூரியிற் பயிற்சி(1911--12) பெற்ற பின்னர்,மீண்டும் மட்டக்களப்பு புனிதமிக்கேல் கல்லூரியில் (1913---14) ஆசிரியரானார். அதனைத் தொடர்ந்து அறிவியற்றுறையிற் பயிற்சிபெறும் நோக்குடன்,கொழும்பு அரசினர் பொறியியற் கல்லூரியிற் கல்விகற்று(1915---16) விஞ்ஞான டிப்ளோமாப் பட்டம் பெற்றார். அப்பொறியியற் கல்லூரியிலேயே வேதியியல் உதவி விரிவுரையாளராக (1917) நியமனமும் பெற்றார்.அதன் பின்னர் யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியில் வேதியியல் ஆசிரியராகப் (1917-20) பதவிஏற்றார். அவ்வேளையில் அவர் இலண்டன் பல்கலைக்கழகத்தின் பி.எஸ் சி.(B.SC) பட்டமும் பெற்றுக் கொண்டார்.அதன் பின்னர் யாழ்ப்பாணம் - மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபர் பதவி (1920-22) அவருக்குக் கிடைத்தது.


இத்தகையபதவிகள் அனைத்தையும் துறந்து 1922 இல் தமிழ்நாடு சென்று, அங்கு மயிலாப்பூரில் அமைந்திருந்தஇராமகிருஷ்ணசங்கமடத்தில் சேர்ந்துதுறவியாகி,விபுலாநந்தர் என்ற துறவிப் பெயருடன் பல்வேறு பொறுப்புவாய்ந்த சங்கப் பணிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்தார். அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முதல் தமிழ்த்துறைப் பேராசிரியராக 1931-33 வரை பணியாற்றினார். ஆயினும் இ. கி. சங்கப் பணிகளேதலையாயினஎன்றெண்ணிப் பேராசிரியர் பதவியை 1933இல் துறந்து,தொடர்ந்து இ. கி.சங்கத்தின் இலங்கைக்கானகல்விப் பணியின் பொறுப்பை ஏற்று மிகவும் ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் ஈடுபடலானார். இதனிடையே யாழ் நூல் ஆய்வும் தொடர்ந்தது. அப்போது இலங்கைப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் இ.கி.ச. தலைமைப் பீடத்தை அணுகி,சுவாமி விபுலாநந்தரை இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் பதவியைஏற்கும்படி வருந்தி அழைத்ததன் பெயரில் 1943இல் அப்பதவியை ஏற்று, 1947இல் இயற்கை அடையும் வரையும் தமிழ்ப் பேராசிரியராகவே பணிபுரிந்தார்.

இத்தகைய பரந்துபட்ட கல்வி முயற்சிகளின் இடையே சுவாமி விபுலாநந்தர் மதுரைத் தமிழ்ச் சங்கப் பண்டிதர் பரீட்சையிலும் 1916 இல்தேர்ச்சியடைந்து இலங்கையின் முதல் பண்டிதர் என்ற பெருமையையும் பெற்றார்.12 வயதிலேயே யாப்பிலக்கணம் கற்றுத் தேர்ந்தசுவாமிகள் கற்றோர் வியக்கும் வண்ணம்செய்யுள் இயற்றும் மொழிப்புலமையையும் பெற்றுக்கொண்டார். வடமொழி,இலத்தின்,கிரேக்கம்,ஆங்கிலம்,அரபு,சிங்களம்,பாளி,பெங்காளிஆகிய மொழிகளையும் பின்னாளிற் கற்றுப் பன்மொழி வித்தகராகவும் திகழலானார்.




இதுவரையும் சுவாமி விபுலாநந்தர் கற்றறிந்த கல்விப் பரப்புப் பற்றியும்,அவர் கற்பித்தல் தொழிலில் ஈடுபட்டபுலங்கள் பற்றியும் காலவரன் முறைப்படியான தகவல்கள் தரப்படலாயின. சுவாமிகளின் கல்வி முயற்சி பற்றிய தகவல்களைப் படிக்கும் ஒவ்வொரு இளையோரும் நிச்சயமாக தாமும் வாழ்நாள் முழுவதும் கற்றலை மேற்கொண்டு உயர்நிலை அடையவேண்டும் என்ற ஓர் உணர்வைப் பெறுவார்கள் என்றே கருதவேண்டும். சுவாமிகள் பல்வேறுபணிகளின் மத்தியிலும் ஓய்வின்றி ஒன்றன் பின் ஒன்றாக பல்வேறு கல்வித் தகுதிகளைப் படிப்படியாகப் பெற்றுக்கொண்டமை ஏனையோருக்கும் ஒரு வழிகாட்டியாகவே அமைகின்றது. இதனைத் தொடர்ந்து சுவாமிவிபுலாநந்தரின் சமூகம்,கல்வி,பண்;பாடு, இலக்கியம்,ஆய்வுமுதலான பல்வேறு தலைப்புக்களிற் கட்டுரைகள் தொடரும் என்பதைஅறியத் தருகின்றேன்.

இந்த இதழும் இக்கட்டுரையும் புலம் பெயர்ந்த நாடுகளிலிருந்து வெளிவருகின்றன என்பதை வாசகர்கள் கருத்திற் கொள்ளவேண்டும்.உலகில் வாழும் எட்டுக்கோடித் தமிழர்களில் சுமார் இரண்டுகோடித்



தமிழர்கள் தம் தாய்நாடுகளிலிருந்துபுலம்பெயர்ந்துபல் வேறுநாடுகளில் வாழ்ந்துவருகிறார்கள். இவர்களில் சுமார் நான்குஇலட்சம் ஈழத்தமிழர்கள் கனடாவில் கால்பதித்துக் கொண்டபோதிலும் தம் தாயகநினைவு களுடனும் உணர்வுகளுடனும், தமிழ்ப் பண்பாட்டுப் பாரம்பரியங்களைப் பேணும் முயற்சிகளுடனும் வாழ்ந்துவருகின்றனர். இதுபோன்றே ஐரோப்பியநா டுகள்,அவுஸ்திரேலியா,ஐக்கியஅமெரிக்காமுதலான நாடுகளில்வாழும் தமிழர் எதிர்காலச் சந்ததியினராகிய இளைய தலைமுறையினருக்குத் தமது வரலாற்றுப் பின்னணிகளையும்;, பண்பாட்டுப் பெருமையி னையும் தக்கமுறையில் அறிவுறுத்திஅவர்களுக்குத் தமிழ்ப் பண்பாட்டுணர்வைஊட்டவேண்டியது மூத்த பரம்பரையினரின் கடமையாகின்றது. அதேவேளை புலம்பெயர்ந்து வந்து பிறநாடுகளில் வாழும் தமிழர்; தம் பண்பாட்டுப் பாரம் பரியங்களைப் பேணும் கடப் பாடுடையவர்கள் என்பதையும் உணர்ந்து செயற்பட வேண்டும்.

தமிழர் பண்பாட்டு வரலாற்றினைக் கட்டியெழுப் புவதில் பங்களித்தவர்களில்; சுவாமி விபுலாநந்தர் தனிச் சிறப்புடையவர். அவர்தமிழின முன்னேற்றத் திற்கும் தமிழ்ப் பண்பாட்டின் பெருமைகளை வெளிக் கொண்டுவருவதிலும் எடுத்துக்கொண்ட அரும்பெரும் பணிகளை நினைவு கூர்வதன் மூலம் தமிழர் தம் வாழ்க்கை நெறியினைச் செம்மைப்படுத்தும் வாய்ப்பு ஏற்படுகிறது. அதேவேளை, இளைய தலைமுறையி னருக்கும்,சமூகம் சார்ந்தும்,நாடு தழுவியும் சுவாமிகள் ஆற்றிய பன்முக சேவைகளை அறிமுகப்படுத்துவ தன் மூலம்; ஆரோக்கியமும் இன உணர்வும் மிக்க ஓர் இளைய சமுதாயத்தை உருவாக்க முடியும் என்பதும் இக்கட்டுரைத் தொடர்களின் எதிர் விளைவாகும்.

சுவாமிவிபுலாநந்தர் தம் வாழ்நாள் முழுவதும் மேற்கொண்ட முயற்சிகள்,சேவைகள் என்பன கற்றோ ருக்கு முன்மாதிரியாக அமைந்தவையாகும். சுவாமிகள் தொழில்நுட்பக் கல்லூரி விரிவுரையாளர்,பல்கலைக்க ழகப் பேராசிரியர், ஆய்வாளர், திறனாய்வாளர், ஒப்பி லக்கிய ஆய்வாளர்,

கல்லூரிஅதிபர்,பாடசாலைநிறுவுநர்,பாடசா லைகளின்முகாமையாளர்,கலைச்சொல்லாக்க நிபுணர்,புலவர்,சொற்பொழிவாளர்,தேசியவாதி,சமூ கசீர்திருத்தவாதி,முத்தமிழ் வித்தகர் -எனப் பல்வேறு ஆளுமைகளுடன் செயற்பட்டுத்,தமிழகத்திலும் ஈழத்திலும் அரசாலும் அறிஞர்களாலும் சான்றோர் களாலும் பொதுமக்களாலும் இன,மதவேறுபாடின்றிப் போற்றிப் புகழப்படும் பேறுபெற்ற சான்றோனாக மிகச் சுறுசுறுப்புடன்; இயங்கிய ஒருபேரறிவாளன் ஆவார்.

தமிழர் பண்பாட்டுக் களஞ்சியம் எனப் போற்றப் படும் சிலப்பதிகாரம் முதன் முதலாக டாக்டர் உ.வே. சாமிநாதஐயரால் 1892ஆம் ஆண்டிற் பதிப்பித்து வெளியிடப்பட்டது. அதே ஆண்டிலேயே சுவாமி விபுலாநந்தரும் பிறந்தார் என்பது தெய்வ அருட்செ யலாகும். சிலப்பதிகாரம் கூறும் பண்பாட்டுக் கூறு களாலும், கண்ணகி வழக்குரை என்னும் அரியநாட்டுப் புறக் காவிப் பொருளாலும் கவரப்பட்ட சுவாமிகள் பண்டைத் தமிழர் இசைமரபு, யாழ்வகைகள் என்பன பற்றி ஆராய்ந்து இசைத்தமிழ் இலக்கணமாக யாழ் நூலைப் படைத்தார். சுவாமி விபுலாநந்தர் துறவி யாகி தமிழ் மக்களுக்கும், தமிழ்மொழிக்கும், தமிழ்ப் பண்பாட்டிற்கும் ஆற்றிய அளப ;பெருந்தொண்டு களை நினைந்து 1992ஆம் ஆண்டில் தமிழர் வாழும் பலநாடுகளில் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழா மிகச்சிறப்பாக் கொண்டாடப்பட்டது. மட்டக்களப்பில் சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டுவிழாச்சபையினர்சி றப்புமலர் ஒன்றுவெளியிட்டு,விழாவையும் சிறப்பாக நடத்தினர். அத்துடன் விழாச்சபையினர் சுவாமிகளின் அனைத்து ஆக்கங்களையும் தேடித் தொகுத்து அவற் றைசுவாமிவிபுலாநந்தரின் ஆக்கங்கள்என்றதலைப் பில் மூன்று தொகுதிகளாக வெளியிட்டனர். அதுவரை காலமும் வெளியிடப்படாத சுவாமிகளின் ஆக்கங்கள் பலவெளியிடப்பட்டமை காலத்தின் தேவைகருதிய




பெரும்பணியாகும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் அப்போதுநான் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தமையால்,சுவாமிவிபுலாநந்தர் நூற்றாண்டு விழா வைமிகச் சிறப்பாக அங்கு நடத்தியதோடு,சிறப்புமலர் ஒன்றையும் வெளியிட்டோம் என்பதைக் குறிப்பிடுதல் ஈண்டுப் பொருத்தமாகும்.

புலம்பெயர்ந்து ரொறன்ரோவிலும் இலண்டனிலும் வாழும் தமிழர்களாலும்; சுவாமி விபுலாநந்தர் நூற்றாண்டு விழாக் கொண்டாடப்பட்டது. அதனைத் தொடர்ந்து சுவாமி விபுலாநந்தரின் வாழ்வும் பணியும் தமிழ் மக்களின் கவனத்தைப் பெரிதும் ஈர்க்கத் தொடங்கிற்றெனலாம். சுவாமிகளின் பணிகளைப் பற்றியபல நூல்கள் ஈழம், தமிழகம்,கனடா ஆகிய நாடுகளிலிருந்து வெளிவரலாயின. தாயகத்திற்கு வெளியே ரொறன்ரோவில் முதன் முதலாகச் சுவாமிவிபுலாநந்தர் நினைவாகச் சுவாமிவிபுலாநந்தர் கலைமன்றம் கனடா என்ற அமைப்பு 2003ஆம் ஆண்டு என்னைத் தலைவராகக் கொண்டு உருவாக்கப்பட்டது. கனடாவிலுள்ள பல்வேறு கழக உறுப்பினர்கள், அறிஞர்கள், தமிழ்ப் பற்றாளர்கள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், இனப் பற்றாளர்கள் அனைவரும் ஒன்றிணைத்து விபுலாநந்தர் நினைவாகப் பெருவிழா சிறந்தமுறையில் அதே ஆண்டில் நடத்தப்பட்டது. மாணவர்க ளுக்கு விபுலாநந்தர் பற்றிய அறிவை ஊட்டும் வகையில் எழுத்துப போட்டி, பேச்சுப்போட்டி,பொது அறிவுப் போட்டி ஆகியன நடத்தப்பட்டன. பரிசு பெற்ற மாணவர்கள் இவ்விழாவிற் கௌரவிக்கப்பட்டார்கள்; இவ்விழாவிலவிபுலம்;என்றசிறப்புமலர் வெளியிடப்பட்டது;அப்போது இடம்பெற்றசுவாமிவிபுலாநந்தர் பற்றியபுத்தகக் கண்காட்சியில்;; சுவாமிகள் இயற்றியயாழ் நூல்,மதங்கசூளாமணி மற்றும், அவரது ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்புக்கள்,சுவாமிவிபுலாநந்தர் பற்றிய நூல்கள்,கட்டுரைகள்,அவர் நினைவாகவெளியிடப்பட்டசிறப்புமலர்கள்,அவரதுபுகைப் படங்கள்,சுவாமிகளின் கையெழுத்துப் பிரதிகள், மற்றும் தமிழ்ப் பண்பாட்டுச் சின்னங்கள் என்பனவும் அங்குமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. அக்கண்காட்சியிலேதமிழரின் கலை,கல்வி,பண்பாடு,வரலாறுஎன்பன வற்றுக்குச் சுவாமிகள் ஆற்றியபணிகளைவெளிப்படுத்தும் ஆவணங்களும் வைக்கப்பட்டிருந்தன. அத்துடன் சுவாமியின் பணிகளை நினைவுறுத்தும் வகையில் கிழக்கிலங்கையில் அவ்வாண்டில் தயாரிக்கப்பட்ட ஒளிப்படமும் காண்பிக்கப்பட்டது. இளையோர் தமிழ்ப் பண்பாட்டு விழுமியங்களை அறிந்துகொள்ளவும்,தமிழ் இலக்கியப் பாரம்பரியத்தை உணர்ந்து கொள்ளவும் இக்கண்காட்சி தூண்டுதலாக அமைந்தது எனலாம்.

சுவாமிவிபுலாநந்தர் 19.07.1948 இல் சிவபதம் அடைந்தநாள் முதலாக அவரைப் பற்றிய சொற்பொழிவுகள், கட்டுரைகள், நூல்கள் வெளிவந்துள்ளன. அவரது ஆக்கங்கள் நூல் வடிவம் பெற்றுள்ளன. இசைத் தமிழ் ஆராய்ச்சி நூலான யாழ் நூல் தமிழகத்திலும் கனடாவிலும் மறுபதிப்புப் பெற்றுள்ளது. நாடகத் தமிழ் ஆராய்ச்சி நூலாகிய மதங்கசூளாமணி தமிழகத்திலும் ஈழத்திலும் மறுபதிப்பாக வெளிவந்துள்ளது. தமிழகத்திலும் ஈழத்திலும் இயங்கும் பல்கலைக்கழகங்களில் சுவாமிகளின் ஆக்கங்கள்,பன்முகப் பணிகள் என்பன பற்றி முதுகலை,முனைவர் பட்டத்திற்குரியஆய்வுகளாக மாணவர்களால்மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. ஈழத்துப் பாடசாலைகளிற்; சுவாமிகளதுஆய்வுக்கட்டுரைத் தொகுதிகல்விப் பொதுசாதாரணதரம், கல்விப் பொது உயர் தரம் ஆகியவற்றின் தமிழ்ப்பாடப் புத்தகமாகவும் இடம்பெற்றுள்ளது.

தொடரும்....

## தேடலின் திரவியம்

# குரு என்பவர் யார்?



**(நெகிழ்ச்சி தரும் அருமையான பதிவு)**

ஆன்மிகத் தேடலில் இருப்போர் இக்கேள்வியை கேட்காமல் இருக்க முடியாது...!

இப்பதிவு உங்களுக்கு விளக்கமாக அமையக் கூடும்...!

தேடுதல் உள்ளோர் மட்டும் தொடரவும்..!

**முதலில் குரு என்பவர் யார்?**

1)தன்னை உணர்ந்தவரா?

2)அன்பானவரா?

3)அஷ்ட மகாசித்துகள் பெற்றவரா?

4)அந்த ஆண்டவனையே கண்டவரா?

5)கையில் தடியுடன் முகத்தில் தாடியுடன் காவியும் தரித்து திருநீறணிந்து காடுமலைகளில் கடுந் தவம் புரிபவரா?

6)இல்லை ஜீன்ஸ் அணிந்து மோட்டார் வாகனத்தில் பறந்து பகட்டாக உடையணிந்து மெய்சிலிர்க்கும் ஆன்மிக உரை நிகழ்த்தி அவ்வப்போது சின்னத்திரையில் உங்களுக்கு தரிசனம் வழங்குபவரா?

7)யோகா வகுப்புகள் நடத்தி புதிய கோணத்தில் விளக்கம் தருபவரா?

இந்தக் கேள்விகளுக்கெல்லாம் விடை ஒரு சிறு கதையின் உள்ளே இருக்கின்றது...

முன்னொரு காலத்தில் உலகப் புகழ் வாய்ந்த ஞானம் பெற்ற குரு ஒருவர் இருந்தார்...

அவர் இறக்கும் தருவாயில் இருக்கும் பொழுது, அவரின் சீடர்கள் அந்தக் குருவிடம் ஒரு கேள்வி எழுப்பினார்கள்.

எங்களுக்கெல்லாம் நீங்கள் குருவாக இருக்கிறீர்கள். உங்களுக்கு யார் குரு? என்று கேட்டனர்.

அந்த குரு சிரித்துவிட்டார் எனக்கு ஆன்மீகத்தில் எண்ணற்ற குருமார்கள் இருக்கிறார்கள். ஆனால் குறிப்பிட்டு சொல்ல வேண்டுமானால் மூன்று பேரை கட்டாயம் சொல்ல வேண்டும்.

என் முதல் குரு ஒரு நாய்..

ஒருமுறை நான் ஆன்மீகத்தை தேடி, எல்லாவற்றையும் துறந்து அலைந்து கொண்டிருந்த சமயம். அது ஒரு காடு. அப்போது எனக்கு மிகுந்த தாகம் ஏற்பட்டது அருகிலேயே ஒரு சிறிய நீரோடை இருந்தது.

சரி நீர் குடிக்கலாம் என அதன் அருகே சென்றேன்..

அப்போது அங்கே ஒரு நாய், நீரோடைக்கு போவதும் திரும்புவதுமாக இருந்தது.

உற்று கவனித்தேன் அது மிகவும் களைப்பாக இருந்தது அதற்கும் நிறைய தாகம் போலிருக்கிறது.

ஆனால் நீரோடைக்கு போனதும் அங்கே நீரில் தெரியும் தன் உருவத்தைப் பார்த்து பயந்துபோய் திரும்பி வந்துவிட்டது.

ஆனால் தாகம் துரத்தியது. திரும்பவும் நீரோடைக்கு செல்கிறது . இப்படி போவதும் வருவதும், போவதும் வருவதுமாக இருந்தது.

நாய் களைத்துப் போய் விட்டது. இருந்தும் தாகம் மேலி





டவே அந்த நாய் சரேலென தண்ணீருக்குள் பாய்ந்தது. பயம் தெளிந்தது தாகத்தைத் தீர்த்துக் கொண்டது.

அப்போதுதான் உணர்ந்து கொண்டேன். நம் தாகத்தை தணிக்க விடாமல் செய்வது பயம் மட்டுமே ஆனால் தாகம் மேலிடும் போது நமக்குள் உருவாகும் தைரியமானது பயத்தை உடைத்து விடுகிறது என அறிந்து கொண்டேன் அதனால் அந்த நாய் தான் என் முதல் குரு.

சீடர்கள் வியந்தனர்..

அப்போது இரண்டாவது குரு யார் என அந்த ஞானியை கேட்டனர்..

அவர் சொன்னார் எனது இரண்டாவது குரு ஒரு திருடன்..

என்ன திருடன் குருவாக முடியுமா? என்றனர்..

அவர் புன்னகையுடன் பதில் சொல்லத் தொடங்கினார்.

அந்தக் காட்டில் பசி மிகுதியால் நான் மிகவும் களைப்புற்று சோர்ந்து கிடந்தேன் அப்போது ஒருவர் வந்து என்னை கைத்தாங்கலாக தூக்கி அருகிலிருந்த தன் குடிசைக்கு அழைத்துச் சென்றார்.

எனக்கு உண்ண உணவும், குடிக்க நீரும் தந்தார். நான் நன்றி மிகுதியால் அவரைப் பார்த்தேன்.

' சாமி நீங்க யார் 'என்று என்னை கேட்டார்.

அதைத்தான் தேடி அலைந்து கொண்டு இருக்கிறேன் என பதில் சொன்னேன்.

அவருக்கு அது புரியவில்லை.

சற்று தயக்கமாக 'நீங்கள் யார்' என்று கேட்டேன்.

'நான் ஒரு திருடன்'என பதில் சொன்னார். உங்களுக்கு தயக்கம் இல்லை என்றால் உங்களுக்கு விருப்பம் இருக்கும் வரை இங்கேயே தங்கலாம் என்று கூறினார்.

நானும் வேறுவழியின்றி ஒத்துக் கொண்டேன்.

அன்று இரவு அவர் தன் தொழிலுக்கு கிளம்பினார் மறுநாள் காலையில் வந்தார். என்னப்பா தொழில் எப்படி? ஏதாச்சும் கிடைச்சதா? என்றேன்..

இன்னைக்கு கிடைக்கல சாமி நாளைக்கு கண்டிப்பா கிடைக்கும் என்றார்.

மறுநாளும் தொழிலுக்குச் சென்றார் திரும்பி வந்ததும் மீண்டும் அதே கேள்வியை கேட்டேன் இன்னைக்கு இல்ல சாமி நாளைக்கு கண்டிப்பா கிடைக்கும் என்று பதில் சொன்னார்.

இப்படியே தொடர்ந்து ஒரு மாதம் எனது அதே கேள்வியும், அவரது அதே பதிலும் தொடர்ந்தது.

அன்றுதான் ஒன்றைத் தெரிந்து



கொண்டேன். சாதாரண பொருளை தேடக்கூடிய (திருடக்கூடிய) திருடனுக்கே இவ்வளவு பொறுமையும் நம்பிக்கையும் தேவைப்படுகிறது என்றால்....

மிகப்பெரிய செல்வமாகிய ஞானத்தை தேடக்கூடிய எனக்கு எவ்வளவு நம்பிக்கையும் பொறுமையும் தேவை என்பதை தெரிந்து கொண்டேன்.அதனால் அந்த திருடன் தான் எனது இரண்டாவது குரு...

சீடர்களுக்கு ஆர்வம் அதிகமாகிவிட்டது...

(உங்களுக்கும் தானே)

அப்போ அந்த மூன்றாவது குரு யார்? என்று கேட்டனர்.

அந்த ஞானி சொன்னார் நான் எல்லாவற்றையும் கற்றுக் கொண்ட பிறகு ,ஒரு ஊரில் ஒரு வீட்டில் தங்கி இருந்தேன்.

அப்போது அவ்வீட்டிலிருந்த 5 வயது குழந்தையொன்று வீட்டிலிருந்த விளக்கையே பார்த்துக்கொண்டிருந்தது.

அந்த குழந்தையிடம் என் புத்திசாலித்தனத்தை காண்பிப்பதற்காக..

பாப்பா இந்த விளக்கில் வெளிச்சம் இருக்கிறதே அது எங்கிருந்து வந்தது எனத் தெரியுமா என கேட்டேன்.

அந்த குழந்தை சட்டென விளக்கை ஊதி அணைத்து விட்டு,

'தாத்தா ! இப்போ இந்த வெளிச்சம் எங்கே போச்சோ,

அங்கிருந்துதான் அந்த வெளிச்சம் வந்தது' என பதில் சொன்னது.

ஆஹா!!....

ஞானம் எனக்கு மட்டும் சொந்தம் என கர்வம் கொண்டிருந்தேன்.

அதை தகர்த்த அந்த குழந்தைதான்



என் மூன்றாவது குரு என்றார்.

எனவே குரு என்பவர் ஒரு நபர் அல்ல குரு என்பது ஒரு தன்மை இருளை அகற்றும் மின்னல் கீற்று..

அஞ்ஞானம் போக்கும் அறிவு...!

குரு என்பவர் எப்படி இருக்க வேண்டும் என்று வரையறைகள் எல்லாம் செய்ய முடியாது..!

அப்படி வரையறுப்பது சரியான ஆன்மீக நெறி முறையும் அல்ல.

மகாபாரதத்தில் கிருஷ்ணன் கீதா உபதேசத்தை..

ஒழுக்கத்தில் சிறந்த பீஷ்மனுக்கு கூறவில்லை.

வித்தையில் சிறந்த துரோணருக்கு கூறவில்லை.

பக்தியில் சிறந்த விதுரனுக்கு கூறவில்லை . பின் யாருக்குத்தான் கூறினான் ?

தன்னையே சரணாகதி அடைந்த அர்ஜுனனுக்குத் தான் கூறினார்.

இருப்பதிலேயே நண்பனிடம் சரணாகதி அடைவது தான் இயலாத காரியம்.

ஏனென்றால் நண்பனின் அத்தனை சேட்டைகளும் தான் நமக்குத்தான் தெரியுமே!

அதனால் நண்பனிடம் மட்டும் சரணாகதி அடைவது என்பது இயலாத காரியம்.

(கிருஷ்ணனைப் போன்ற நண்பன் மட்டும் நமக்கு உபதேசித்திருந்தால் என்ன சொல்லியிருப்போம். உன் அட்வைஸ நிருத்துறயா? உன்னைப் பற்றி எனக்கு தெரியாதா?என்றிருப்போம்)

ஆனால் கிருஷ்ணனின் அனைத்து சேட்டைகளையும் அறிந்த பின்பும் (சிசுபாலன் கண்ணனின் சேட்டைகளை பக்கம் பக்கமாக பட்டியலிட்ட பின்பும்) அர்ஜுனன் சரணாகதி அடைந்தான்.

அர்ஜீனன் முழுவதும் ஏற்கும் தன்மையில் இருந்ததனால் கிருஷ்ணனுக்கு வேறு வழியே இல்லை அர்ஜுனனை சீடனாக ஏற்றுக்கொண்டான். கீதை அருளப்பட்டது.

இவ்வளவு ஏன்? ஞானத்திற்கெல்லாம் தலைவனாக இருக்க கூடிய சிவபெருமான் கூட தன் மகனாக இருந்தாலும், மண்டியிட்டு வாய் மூடி தலை குனிந்து தன்னை சீடன் என்ற நிலைக்கு இறக்கிக் கொண்ட பின்புதான் முருகனிடம் உபதேசம் பெறமுடிந்தது.

சம்மட்டி ஓசையை கேட்டு ஞானமடைந்தவரைப் பற்றியும், உடைந்த குடத்தின் ஓசையிலே ஞானமடைந்த பெண் புத்தத்துறவியைப் பற்றிய கதையையும் படித்துள்ளோம் தானே.

ஆகவே இங்கு *ஆன்மீகத்தில் முக்கியமானது குருவின் தகுதி அல்ல சீடனின் தகுதிதான் மிகவும் முக்கியமானது...!*

எவ்வளவு மழை பெய்தாலும் திறந்த பாத்திரத்தைத்தான் மழையால் நிரப்ப முடியும்.

மூடிய பாத்திரத்தை வானமே கிழித்துக்கொண்டு பெய்தாலும் நிரப்ப முடியாது .

தெரியுமா உங்களுக்கு?

உண்மையிலேயே கிரேக்க ஞானி டயோஜனிஸிக்கு ஒரு நாய்தானே குரு.

நியூட்டனுக்கு ஆப்பிள் தானே குரு.

ஆர்க்கிமிடிஸிக்கு தான் குளித்த தண்ணீர்தானே குரு.

உலகின் பெரிய விஞ்ஞானி ஐன்ஸ்டைக்கு நட்சத்திரங்களை பற்றி விளக்கிய குரு சோப்பு நுரைதானே.

அதனால்தான் நதிமூலம் பார்ப்போரின் தாகம் தீர்வதில்லை..

ரிஷிமூலம் பார்ப்போர் ஞானம் அடைவதில்லை..

தவித்தவன் தண்ணீரை தேடி பயணிப்பது போல, தாகம் கொண்டவனின் தொண்டையை நனைக்க தண்ணீரும் பயணப்படுகிறது.

*தன்னை தகுதி படுத்திக் கொண்டவன் தன் பாதையிலேயே தன் குருவைக் காண்பான்...!*


*குருவே சரணம்.....!*

*ஓம் பரப்பிரம்ம பஞ்ச பூத பிரபஞ்ச சக்தியே போற்றி...*

தெளிவு குருவின் திருமேனி காணல்
தெளிவு குருவின் திருநாமம் செப்பல்
தெளிவு குருவின் திரு வார்த்தை கேட்டல்
தெளிவு குரு உரு சிந்தித்தல் தானே

திருமூலர் திமந்திரம்

# உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே



மனிதன் நோயின்றி நீண்ட ஆயுளுடன் ஆரோக்கியமாக வாழ வேண்டுமானால், அவன் மனம் போன போக்கில் வாழமுடியாது. பெறுதற்கரிய இவ்வுடம்பை பெற்றமனிதன் அதனை நன்றாக பேணுவதன் மூலமே இப்பிறவிப்பெருங்கடலை கடந்து முக்தியை அடையமுடியும். உடலின் வன்மை, அதனால் ஏற்படும் நோயெதிர்ப்பு சக்தியின் முக்கியத்துவத்தை கொரனா தொற்றின் பின்னர் உணர்ந்துள்ள நிலையில், உடம்பின் முக்கியத்துவத்தை திருமூலர் திருமந்திரத்தில் பின்வருமாறு கூறியுள்ளார்.

**உடம்பார் அழியின்**
**உயிரார் அழிவர்**
**திடம்பட மெய்ஞ்ஞானம்**
**சேரவும் மாட்டார்**
**உடம்பை வளர்க்கும்**
**உபாயம் அறிந்தே**
**உடம்பை வளர்த்தேன்**
**உயிர் வளர்த்தேனே.**

உடம்பை அழித்தால் அவ்வுடம்பில் இருந்த உயிரும் அழியும். உறுதியான இறுதியான மெய்ஞ்ஞானத்தை அடைய முடியாது.எனவே உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தேன், உயிரை வளர்த்தேன் எனஉடம்பின் முக்கியத்துவத்தை உரைத்துள்ளார்.

இதேபோல், ஏகனாய் அனேகனாய் எல்லா உயிர்களிடத்திலும் இருக்கும் இறைவன் எம்முள்ளே இருக்கின்றான். எனவே அவன் இருக்கும் உடம்பினை நன்றாக பேணவேண்டும் என்கிறார் அடுத்து வரும் பாடலில்

**சித்தமருத்துவர்**
**தியாகராஜா சுதர்மன்**
BSMS, Dip. in Counseling PG. Dip. in Food Nutrition
**மானிப்பாய்.**



உம்பினைமுன்னம்
இழுக்கென்றிருந்தேன்
உடம்பினுக்குள்ளே
உறுபொருள் கண்டேன்
உடம்புளே உத்தமன்
கோயில் கொண்டான் என்று
உடம்பினையான் இருந்து
ஓம்புகின்றேனே.

*இவ்வாறன சிறப்புக்கள் பொருந்திய எமது உடம்பினை நன்றாக பேணவேண்டும் என்றால் நாம் உண்ணும் உணவு எமது உடலுக்கு மாறுபாடு இல்லாது இருத்தல் வேண்டும். அதாவது எமது உடலுக்கு ஊறு விளைவிக்காத, நோய்களை ஏற்படுத்தாததாக இருத்தல் வேண்டும்.*


*இதனை திருவள்ளுவர் திருக்குறலில் பின்வருமாறு கூறுகின்றார்;*

மாறுபாடு இல்லாத
உண்டிமறுத்துண்ணின்
ஊறுபாடு இல்லை உயிர்க்கு.

*அதேபோல் எமது உடம்புக்கு தேவையான அளவினையும், முன் உண்டது செரித்ததை அறிந்தும் உண்போமானால் எமது உடம்பு நீண்ட ஆரோக்கியத்தை பெறும் என்கின்றார் திருவள்ளுவர்.*

அற்றால் அளவறிந்து
உண்க அஃதுடம்பு
பெற்றான் நெடிதுய்க்கும் ஆறு

*இவ்வுடம்புக்கு ஆதாரமனஉணவினைஅறிவோடு உண்டு, உடம்பின் முக்கியத்துவத்தினைஉணர்ந்துஉடம்பினைஆரோக்கியமாகவைத்திருந்துநீண்டஆயுளைப்பெற்றுஇப்பிறவிப்பெருங்கடலைகடந்துஇறைவனைஅடைந்திடுவோம்.*





பாகம்: 2

# சைவசித்தாந்தம் கற்றதும் பெற்றதும்

ஐன்ஸ்டீனை விஞ்சிய சைவசித்தாந்தம் என்று தலைப்பிட்டு, இப்பகுதியை வெளியிடுவோம் என்று நினைத்தேன். பின்னர் சாதரண மானிடரோடு, தத்துவ ஆய்வைத்தந்த சித்தாந்திகளை ஒப்பிடுவதா? அவர்களின் அரிய முடிந்த முடிவான சிந்தாந்தத்தை ஒப்பிடுவது அழகானதா? இப்படியான எண்ணங்கள் தோன்றியமையால் தவிர்த்துவிட்டேன். சரி; ஜன்ஸ்டீனுக்கு இங்கு என்ன சம்பந்தம்? பார்ப்போம்.

முன்னைய பதிவுகளை படித்தவர்களுக்கு இப்பகுதி இலகுவாக விளங்கும். முன்னைய பகுதிகளை படித்திராவிட்டால்; சிதம்பர சக்கரமாக இப்பகுதி தோன்றிவிடும். எனவே முன்னைய பகுதிகளுக்குரிய சொடுக்கிகளை கீழே தந்துள்ளேன்.

கடந்த பகுதியில் இறைவனின் சொரூபநிலையை/இயற்கை இயல்பைப் பார்த்தோம். இறைவனின் இயற்கை இயல்பே சத்து, சித்து, ஆனந்தம் என்னும் சச்சிதானந்தம் என்று பார்த்தோம். சத்து,சித்து,ஆனந்தம் என்றால் என்ன என்பதையும் பார்த்தோம். இப்பகுதியில் சத்து,சித்து,ஆனந்தத்தை விரித்து எப்படி எண்குணம் உடையவனாக இறைவனை சைவசித்தாந்தம் காணுகின்றது என்பதை பார்க்கவுள்ளோம்.

**அதற்கு முதல்;** இறைவனின் சொரூப இயல்புக்கும் ஜன்ஸ்டீனின் இறைகோட்பாட்டுக்கும் உள்ள தொடர்ப்பை தெரிந்து கொண்டால் விஞ்ஞானத்தை மிஞ்சிய நெறி சைவநெறி என்பதை உணர்ந்து



வைத்தியக் கலாநிதி
சிவஸ்ரீசான பிரதாபன் தேசிகர்
தலைவர் இலங்கை சைவநெறிக் கழகம்

கொள்ள ஏதுவாக அமையும்.

ஐன்ஸ்டீன் ஆளுமையுள்ள இறைவன் என்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்கின்றார்.'ஆளுமைத்து வமுடைய இறைவன் இல்லை என நான் உங்களுக்கு நிரூபிக்க முடியாமல் இருக்கலாம். ஆனால் நான் அத் தகைய இறைவனைக் குறித்து பேசுவதாக இருந்தால், என்னைப் பொய்யன் என்றுதான் சொல்லவேண்டும்' என்கிறார்.

சைவசித்தாந்தம் இறைவனின் சொரூப இயல்பை/ இயற்கை இயல்பை அப்படித்தான் காணுகின்றது. ஆனால் ஐன்ஸ்டீனின் கருத்தை கடந்து இன்னும் தெளிவாக இறைவனின் இயற்கை இயல்பை விளக்கு கின்றது.


அனைத்து ஆளுமைகளையும் கொண்ட இறைவனின் இயற்கை இயல்பு(சொரூப இயல்பு) எத்தொழிலும் செய்யாது ஆளுமையற்று இருத்தலே என்கின்றது.

**சிவன் அருவுருவுமல்லன் சித்தினோடு அசித்தும் அல்லன்**
**பவமுதல் தொழில்கள் ஒன்றும் பண்ணிடுவானும் அல்லன்**
**தவமுதலி யோகபோகத் தரிப்பவனும் அல்லன் தானே**
**இவைபெற இயைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே - சிவஞானசித்தியார்**



இப்பாடலையும் அதற்குரிய பொருளையும் கடந்த பகுதியில் பார்த்திருந்தோம். இப்பகுதியில் மீண்டும் ஒருமுறை பார்ப்போம்.

'தனியே சிவபெருமானைப் பற்றிக் கருதினால்; அவர் உருவம்,அருவுருவம்,அருவம் எனும் வடிவங்கள் அற்ற வர். அறிவுள்ள பொருட்களாகவும் அறிவற்ற பொருட்களாகவும் உள்ள எந்த உலகப்பொருட்களாகவும் இல்லை. படைப்பு முதலான தொழில்களைத் தானே செய்பவனாகவும் இல்லை. தவம்,யோகம்,போகம் ஆகிய எதனையும் அவர் மேற்கொள்வதில்லை. இவற்றை ஆன்மாக்களுக்கு வழங்குவதன்றி எதை யும் அவர் தனக்கு ஏற்பதில்லை. இவை அவரோடு பொருந்தினாலும், இவை எவற்றாலும் அவர் பற்றப் படுவதில்லை' என்பதே சைவசித்தாந்த சாத்திர நூலா கிய சிவஞானசித்தியார் இறைவனின் சொரூப இயல் புக்கு தரும் இலக்கணம்.





ஆக; ஐந்தொழில்கள் பண்ணுகின்ற இயல் பையெல்லாம் கடந்து, 'சும்மா' இருக்கின்ற நிலை! 'சிவனே என்று சும்மா இருந்த என் னை...........' என்று நாம் பேச்சுவழக்கில் கையாளுக்கின்றோமே.......அதுதான் சைவசி த்தாந்தம் கண்ட அருமை! அதனால்த்தான் சித்தாந்தம் என்பதன் பொருள் அனைத்தையும் ஆய்ந்தறிந்து சிந்தித்து ஏற்பட்ட முடிந்த முடிவு என் கின்றோம்.

பிரபஞ்சம் படைக்கப்பட்டபோது முதற்சில கணங்க ளில் நடந்த நிகழ்வுகளை ஆராயும் பொருட்டு அமைக் கப்பட்டுள்ள ஜெனிவாவில் உள்ள ஐரோப்பிய அணு



இயற்பியல் ஆராய்ச்சிக்கூடத்தின்(EUROPEAN CENTER FOR PARTICLE PHYSICS RESEARCH&CERN) முகப்பில் ஆறு அடி உயரமுள்ள நடராசர் சிலை நிறுவப்பட்டிருக்கின்றது.ஏன் என்று தெரியுமா? இறைவனின் ஆனந்த தாண்டவ திருவடிவத்தில் பிரபஞ்சப் படைப்பு தொட்டு, ஒடுக்கம் வரையான அனைத்தும் விளக்கப்பட்டிருக்கும் அருமையை விஞ்ஞானிகள் கண்டு வியந்தமையால் ஆகும்.திருவாசகத்தின் திருவண்டப்பகுதியினைக் கண்டு, விஞ்ஞானம் மலைத்துப்போய் நிற்பது சைவரில் பலருக்குத் தெரியாது. உலகம் உருண்டை வடிவானது என்று கூறியதோடு மட்டுமல்லாது, அண்ட பிரபஞ்சங்களின் காட்சியை அழகாக சொல்லிய அருமையோடு, பிரபஞ்ச ஒடுக்கம் -விரிவையும் தெளிவாக விளக்கியுள்ளார். இவற்றை ஏன் நினைவூட்டுகின்றேன் என்றால், சைவசித்தாந்தம் என்பது தத்துவ ஆராய்வின் முடிவு




என்பதை சைவர் யாவரும் உணர்ந்திருக்க வேண்டும் என்பதற்காகவே!

சரி, இறைவனின் இயற்கை இயல்பில்(அதாவது சொரூப இயல்பில்) 'சும்மா' என்று இருந்த சிவப்பரம்பொருள் எண்குணனாக தடத்தநிலையில் தன்னை வெளிப்படுத்துகின்றார். அவ்வாறு எண்குணனாக தடத்தநிலையில் தன்னை வெளிப்படுத்தும் சொரூப இயல்புடைய சிவப்பரம்பொருள் சச்சிதானந்தம் என்று போற்றப்படுவார்.

அதுவென்ன தடத்தநிலை? அடுத்தபகுதியில் அதை விரிவாகப் பார்ப்போம். இப்போது எண்குணங்கள் யாவை என்பதைப் பார்ப்போம்.

தன்வயத்தனாதல் - சுதந்திரம் உடையவனாக இருத்தல். அதாவது பிறர் வயப்பட்டு தொழிற்படாது, அனைத்திலும் சுதந்திரம் உடையவன். இவனது ஆணைவழியே அனைத்தும்.

தூய உடம்புடைமை - உயிரின் இருப்பை எமக்கு அறிய உதவுவது உடம்பு. அதுபோல் இறைவனது இருப்பை அறிந்து கொள்வதற்கு அவனது அருள் உதவுகின்றது. எனவே உவமைகளைக் கடந்த, இப்படிப்பட்டது,இத்தகையது என்ற வர்ணனைகளுக்குள் அடங்காத அருளையே தனது உடலாகக் கொண்டிருப்பவன். அருளே அவனது திருமேனி.

முடிவிலா ஆற்றல் உடையவன் / அளவிலா ஆற்றல் உடையவன் - அறிவித்தாலன்றித் தாமே அறியமாட்டாத உயிர்களையும் அசைவித்தாலன்றி தாமே அசையமாட்டாத பிரபஞ்சங்களையும் ஏககாலத்தில் அறிவித்து, அசைவித்து அனைத்தையும் ஆளுகின்ற ஆற்றல். எச்செயலையும் எக்காலத்திலும் செய்ய வல்



லமை உடைவனாக இருத்தல்.

இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கியவன் - இறைவன் இயல்பாகவே ஆணவம்,கன்மம்,மாயை என்னும் பாசத்துக்குள் அகப்படாதவன். ஆணவம்,கன்மம்,மாயை என்னும் பாசம் இறைவனை அணுகும் திறனற்றவை. இறைவனும் இயல்பாகவே அவற்றில் இருந்து விலகி; தூய்மையானவனாக இருப்பவன்.

பேரருள் உடையவன் - பயன் கருதாது அருள் வழங்கும் தன்மையுடையவன். ஆன்மாக்கள் தங்களைப் பிடித்துள்ள ஆணவம்,கன்மம்,மாயை ஆகிய மும்மலங்களாகிய பாசங்களின் நிமித்தம் அறிவு சுருங்கி, பேரின்பத்தை அனுபவிக்கமுடியாது துன்புறுவது கண்டு; அவற்றுக்கு பாசநீக்கம் செய்து பேரின்பம் அனுபவிக்கச் செய்தல் வேண்டும் என்று எழுகின்ற பெரு இரக்கமே இறைவனின் பேரருள். உயிர்களுக்கு பிறவிகள் தந்து, வினைகளைப் போக்கி, ஆன்மாவை மெதுமெதுவாக பக்குவப்படச்செய்து, பாசங்களிலிருந்து நீக்கி விடுவித்து முக்தி வழங்குகின்ற இறைவனின் ஒப்புவமையற்ற பெரு இரக்கம்.

இயற்கை உணர்வினன் - ஆன்மா கருவி கரணங்களின் துணையினால் அறிவிக்க அறிவது.( ஐம்புலன்களின் துணையோடும் ஐம்பொறிகளின் மூலம் அறிந்து கொள்வது) ஆனால் இறைவன் தன்னியல்பால் அறிவுடையவனாக விளங்குதல். அனைத்தையும் இயல்பாகவே தானே அறியும் தன்மை உடையவன்.

முற்றுணர்வினன் - அறிவு இயற்கையாகவே விளங்குவதுடன்; ஏக காலத்தில் அனைத்தையும் உணருகின்ற முற்றறிவு உடையவன்.அதாவது ஒவ்வொரு பொருளையும் ஒவ்வொன்றாக அறியாமல் எல்லாப் பொருள்களையும் ஒரே நேரத்தில் அறிதல்.

வரம்பிலா இன்பம் உடையவன் / அளவிலா ஆனந்தம் உடையன் - பேரின்பம் உடையனாக விளங்குதல். அதாவது யாதொரு குறையும் இல்லாதவன்.

தன்வயத்தனாதல்,தூய உடம்புடைமை,முடிவிலா ஆற்றல் உடைமை,இயல்பாகவே பாசங்களில் இருந்து நீங்கிய தன்மை ஆகிய நான்கும் இறைவனின் சத்து தன்மைக்குள் அடங்கும்.

முற்றுணர்வு உடைமை, பேரருள் உடைமை, இயற்கை உணர்வுடமை ஆகிய மூன்றும் சித்து தன்மைக்குள் அடங்கும்.


வரம்பிலா இன்பம் உடைமை ஆனந்தத்தன்மைக்குள் அடங்கும்.

எனவே சச்சிதானந்த நிலையாகிய இறைவனின் இயற்கைத்தன்மையை சைவசித்தாந்தம் அழகுற விரித்து தெளிவுபடுத்துகின்றது என்றால் மிகையில்லை!

நிர்க்குணனாய் நின்மலனாய் நித்தியா னந்தனாய்- சிவஞான போதம் அதுசரி, சைவநூல்கள் இறைவனை நிர்க்குணன் என்றும் குறிக்கின்றது. எண்குணன் என்றும் குறிக்கின்றது. குழப்பமாக இருக்கே?

மும்மலப்பிணிப்பால் வருகின்ற சாத்வீகம்,இராசதம்,தாமதம் என்னும் முக்குணங்களைக் கொண்டிருப்பவன் அல்லன் என்ற பொருளிலேயே நிர்க்குணன் என்று சைவநூல்கள் குறிக்கின்றன.

தடத்தநிலையில் எண்குணனாக வெளிப்படும் இறை




www.sivathamiloan.blogspot.com

வனின் எண்குணங்கள் சொரூபநிலையில் வெளிப் படுத்தப்படாது ‘சும்மா’ இருக்கும் சிவமாக சிவப்பரம் பொருள் விளங்கும். இந்நிலையில் சச்சிதானந்தம் என்று போற்றப்படுகின்றார் என்று விரிவாகப் பார்த் தோம்.எம்பெருமான் சிவபெருமான் தன்னுடைய எண் குணங்களை வெளிப்படுத்தி நிற்கும் தடத்தநிலை பற்றி சைவசித்தாந்தம் கற்றதும் பெற்றதும் பகுதி 4 இல் பார்ப்போம்.

இப்பகுதியில் பௌதீகவிஞ்ஞானத்தின் துணையுடன் சைவசித்தாந்த கருத்து விளக்கப்பட்டுள்ளது. முன் னைய சைவசித்தாந்தம் கற்றதும் பெற்றதும் தொடர் களை படிக்காது; இப்பகுதியை படிக்க முனைய வேண்டாம். ஏனெனில் இப்பகுதியின் அருமையை உணர்ந்துகொள்வதற்கு முன்னைய பகுதிகளில் குறிப் பிடப்பட்ட விடயங்களில் ஓரளவு தெளிவு பெற்றிருத் தல் வேண்டும்.

சொற்பதம் கடந்த சொரூபநிலையில் உள்ள சிவபெருமான் ஆன்மாக்களின் மேற்கொண்ட பெருங் கருணை காரணமாக;

தனது எண்குணங்களில் ஒன்றாகிய பேரருள் உடை மையால் தடத்தநிலைகளை பூணுகின்றார்.


தடத்தநிலை என்றால் என்ன? குழப்பம் வேண்டாம்! சும்மா இருக்கும் இறைவனின் இயல்புதான் சொரூப இயல்பு என்று முன்னர் பார்த்தோம். அதாவது சிவனே என்று சும்மா இருக்கின்ற நிலை! தடத்தநிலை என்பது இறைவனின் இயங்குநிலை எனலாம்.

தடத்தநிலைகள் மூன்றுவகைப்படும்.அவையாவன;

1.அருவம்,அருவுருவம்,உருவம் என்னும் மூவகை வடிவம் தாங்குதல்

2.ஐந்தொழில் ஆற்றுதல்

3.ஒன்றாய் வேறாய் உடனாய் நிற்றல்






தாய்ப் பன்றியை இழந்த பன்றிக்குட்டிகளுக்கு தாய்ப்பன்றி வடிவெடுத்து பாலூட்டிய பரமனின் பெருங்கருணை, பாலுக்காக அழுத உபமன்யு குழந் தைக்கு பாற்கடலையே வரவைத்து வழங்கிய பெருங் கருணை, குளத்தில் குளிக்கச்சென்ற தந்தையைக் காணாது தவித்த ஞானசம்பந்தக்குழந்தைக்கு ஞானப் பாலை உமையைக் கொண்டு பொற்கிண்ணத்தினால் ஊட்டிவிட்ட பெருங்கருணை, யாவற்றையும் கடந்த அதிசூட்சுமமான சொரூபநிலையையுடைய சிவபெ ருமான், தடத்தநிலைகளை ஏன் பூணுகின்றார் என் பதை அஞ்ஞானபிடியிலுள்ள நம்மனைவருக்கும் உணர்த்தும் என்பது தெளிவு.

தடத்தநிலைகளின் பொருட்டு; சிவபெருமான் பெருங் கருணையினால் தாதான்மிய சம்பந்தம்,அத்துவித சம் பந்தம் ஆகியவற்றை பூணுகின்றார்.

அது என்ன தாதான்மிய சம்பந்தம்?


தாதான்மிய சம்பந்தம் என்பது; உயிர்களை உய் விக்கும் பொருட்டு மூவகைத் திருவடிவங்களை தாங் கவும்,ஐந்தொழில்களை மேற்கொள்ளவும் சக்தியோடு இறைவன் கொள்ளுகின்ற சம்பந்தம் ஆகும்.

மூவகைத் திருவடிவங்கள் யாவை?

அருவம்,அருவுருவம்,உருவம் என்பவையாகும்.

அருவம் = கண்ணிற்கு புலனாகாது சக்தி வடிவமாக இருந்தே, காரியங்களை செய்வது. இலயசிவன் (நிஷ்கள சிவன்,சத்தர்) என்று அழைக்கபடுவர். சி வபெருமான் ஞானசக்தியுடன் மட்டுமே பொருந்தியி ருக்கும் தன்மையால் அருவ வடிவம் தாங்குகின்றார்.

அருவுருவம் = ஞானசக்தியையும் கிரியாசக்தியையும் சம அளவில் கொள்வதன் மூலம் பூணுகின்ற வடிவம். ஒருமுறை புலனாகியும், புலனாகாமலும் இருப்பது இவ்வடிவமாகும். புலனாகும்போது முகம்,கை,கால்



போன்ற உறுப்புக்கள் ஏதுமின்றி காட்சியளிப்பது. ஒளி, இலிங்கம் ஆகியன அருவுருவத் திருவடிவங்களாகும்.

உருவம் = ஞானசக்தியைவிட கிரியாசக்தியை மிகுவித்து; அதன்மூலம் கண்களுக்கு புலனாகும்வகையில் முகம்,கை,கால் போன்ற உறுப்புகளுடன் தெளிவாகத் தோன்றுவது உருவத் திருவடிவமாகும். தென்முகக்கடவுள்,சோமஸ்கந்தர்,அர்த்தநாதீசுவரர்,நடராசர் போன்ற மகேசுவர மூர்த்தங்கள் இதற்குள் அடங்கும்.

இறைவன் சக்தியுடன் பொருந்துகின்ற தன்மைகளுக்கு ஏற்ப திருவடிவங்களை தாங்குகின்றமையால் தாதான்மிய சம்பந்தம் ஒருமையுள் இருமை எனப்படும். இறை,சக்தி ஆகியன பொருட்தன்மையில் ஒன்றாயினும்;செயற்பாட்டில் இருதிறப்படுவதால் ஒருமையுள் இருமை என்று தாதான்மிய சம்பந்தத்தை அழைப்பர்.

அதாவது சிவமே சக்தி. சும்மா இருக்கும் நிலையில் சிவன் என்றும் இயங்கும் நிலையில் சக்தி என்றும் இறைவன் அறியப்படுகின்றான். பௌதீகவிஞ்ஞானத்தில் இயக்கசக்தி,அழுத்தசக்தி என்று சக்தி பலவாறு வகைப்படுத்தப்படும்.

உராய்வற்ற இலட்சிய தொகுதியில் பந்தின் நிலையை கீழுள்ள படம் காட்டுகின்றது. இங்கு, சக்தியின் தன்மைக்கு ஏற்ப பொருளின் நிலை வேறுபடுகின்றது. அழுத்தசக்தியாக இருக்கும்போது பொருள் இயங்காது நிற்கின்றது. சாய்தளத்தில் கீழ்நோக்கி உருளுகின்றபோது அழுத்தசக்தி குறைவதுடன் இயக்கசக்தி கூடுகின்றது. கிடையான தளத்தை பந்து அடைந்ததும் பெற்ற வேகத்துடன் பந்து உருண்டபடி இருக்கும். இப்போது இயக்கசக்தி மாத்திரமே உள்ளது. எனவே, சக்தியின் வடிவம்மாற பொருளின் இயல்பும் மாறுகின்றது. இதுபோல்த்தான், சக்தியின் தன்மைக்கு ஏற்ப சிவத்தின் திருவடிவங்கள்(அருவம்,அருவுருவம்,உருவம்) ஏற்படுகின்றன.

தாதான்மிய சம்பந்தத்தின் விளைவால் இறைவன் ஆற்றும் ஐந்தொழில்கள் யாவை? விஞ்ஞானம் எங்கனம் இறைவனின் ஐந்தொழில் தத்துவத்தைக் கண்டு வியந்து நிற்கின்றது?அத்துவித சம்பந்தம் என்றால் என்ன? சைவசித்தாந்தத்தின் அத்துவிதத்துக்கும் சங்கரரின் அத்துவிதத்துக்கும்(கேவலாத்துவிதம்) என்ன் வேறுபாடு? மலர இருக்கின்ற தொடர்களில் ஆராய்வோம்.



# ஆதி தமிழ் மொழி தந்த அரிய சித்த மருத்துவம்

**முன்னுரை:**

**சி**த்த மருத்துவம் முதன்மையும் வெகுபழமையும் வாய்ந்ததாகும். அதன் கர்த்தாக்கள் தமிழ் சித்தர்கள். சித்தர்களை பதினெண் சித்தர்கள் எனக் கூறுவர். அதன் பொருள் பதி என்றால் மேல்இ பதின்என்றால் மேலோன்இ மேலோன் என்றால் இறைவன்இ எண்என்றால் எண்ணம்இ இறைவனிடம் எண்ணத்தைச் செலுத்திவிட்டவர்கள்பதினெண் சித்தர்கள். அவர்களில் அறிவியல் பூர்வமாக உடற்கூற்றியலை விளக்கம் தந்த முதல் சித்தர் திருமூலர். அவர் எந்தப் பள்ளியிலும் பயிலாமல்இ எந்த கல்லூரியிலும் மேற்படிப்பு படிக்காமல்இ எந்த பல்கலைக் கழகத்திலும் பட்டம் பெறாமல்இ எந்த ஆராய்ச்சிக் கூடத்திலும் பரிசோதிக்காமல்இ தனது சித்தத்தால் (மனம்) தெளிவு பெற்று மக்களுக்கு தமிழ் மொழியில் பாடல் வடிவில் ஓலைச் சுவடிகளின் வாயிலாக மக்களுக்கு அளித்தார். அதனால் இம்மருத்துவம் சித்த மருத்துவம் எனப் பெயர் பெற்றது. பாடல்களில் உள்ள சொற்களுக்கு அகராதிகள் மூலம் பொருள் உணரமுடியும்.

**அறிவியல் விளக்கம்**

சித்த மருத்துவம் மூலிகைகளை மருந்தாக்கி மனிதனின் வியாதிகளுக்கு கொடுப்பது மட்டுமன்று. உடல் எதனால் எவ்வாறு ஆனது? உடலுக்கு நோய் எதனால் எவ்வாறு வருகிறது. ஆந்த நோயை எதனால் எவ்வாறு நீக்குவது? இவை அனைத்தையும் நன்றாக உணர்ந்து அதன்படி செயல்படுவதுதான் சித்த மருத்துவம். (கடல் சூழ்ந்த பகுதி முதல் கடல் சூழாத நிலம் மற்றும் மலைப் பகுதிகளைக் கொண்ட பூமியில் எவைகள் இருக்கின்றனவோ அவைகள் அனைத்தும் உடலிலும் உள்ளது)



பொதுமறைச் செம்மல்
மருத்துவ மாமணி
சித்த மருத்துவர
எம்.ஏ.உசைன்
சென்னை



## உடல் எதனால் எவ்வாறு ஆனது?

உலகமும் உடலும் கோடிக்கணக்கான அணுக்களாலானது. நூம் உடல் அணுக்களைப் பற்றியும் அவைகளின் செயற்கைச் செயல்முறை பற்றியும் அதன் இயக்கத்தைப் பற்றியும் முதலில் காண்போம். உடல் 96 தத்துவங்களால் ஆனது. அவை அனைத்தும் ஒரு அணுக்குள் அடக்கம். 50இலட்சம் அணுக்கள் கொண்டது ஒரு புள்ளியில் என விஞ்ஞானம் நிரூபிக்கிறது. அந்த ஒவ்வொரு அணுவிலுள்ளும் 96தத்துவங்கள் அடங்கியுள்ளன. அணு கண்ணுக்கு புலப்படாதது. அந்த அரு உருப் பொருள் சலனத்தால் பிண்ட அணுவாக மாறும்போது 96தத்துவங்களும் இயங்கும் சக்தி பெற்று பின் பிண்ட அணுக்கள் பிளந்து பலகோடி அணுக்களாக ஒன்று சேர்ந்து உடலாகும் போது 96தத்துவங்களும் உடலிலிருந்து செயல்ப்படுகிறது. இந்த 96தத்துவங்களின் சேர்க்கை சக்திகளால் உடலிலிருந்து உருப்பெற்றுப் பெருகி பெரிதாகி உடல்பெற்று உடல் அனைத்திலும் பரவி வாழ்ந்து தன் இயற்கை செயலை ஆற்றி தன் இனத்தைப் பெருக்கி முதுமை அடைந்து அழிந்து மீண்டும் 96தத்துவங்களும் அறிவற்ற அணுக்களில் ஐக்கியமாகிறது. பிறகு மீண்டும் பழைய படியே உருவாகிறது.

தத்துவம் என்பது கருவி. உயிர்கள் இன்ப துன்பங்களை அனுபவிக்க துணைசெய்யும் கருவிகளே தத்துவங்கள். அணுக்கள் பஞ்ச பூதம் என்னும் மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் இவைகளால் உடல் உருவாகியுள்ளது. அந்த சம தத்துவங்கள் என்பது எது, எப்படி என்று காணும் போது, 1. அவத்தைகள் - 5(விழிப்பு நிலை, கனவு நிலை, உறக்கம், பேருறக்கம், உயிர்ப்படக்கம்) 2. ஆதாரங்கள் - 6(மூலாதாரம், சுவாதிட்டானம், மணிப்பூரகம், அனாகதம், விசுத்தி, ஆக்ஞை)3.மண்டலம்-3(அக்கினி,ஞாயிறு,திங்கள்)4. மலம் - 3(ஆணவம், கன்மம், மாயை) 5. தோடம் - 3 (வாதம், பித்தம், கபம்) 6. ஈடனை - 3(பொருள் பற்று, புதல்வர் பற்று, உலகப் பற்று)7. குணம் - 3(சத்துவம், இராசதம், தாமதம்) 8. இராகம் - 8(காமம், குரோதம், உலோபம், மோகம், மதம்(கர்வம்), மாச்சர்யம்(உட்பகை), இடும்பை(இகழ்தல்), அகங்காரம்(கோபம்) ) 9. நாடி - 10(இடகலை, பின்கலை, சுலுமுனை, சிகுவை, புருடன், காந்தாரி, அத்தி, அலம்புடை, சங்கினி, புகு) 10. - 10(பிராணன் அபாணன் இவியாணன், உதாணன், சமாணன், நாகன், கூர்மன், கிருகரன், தேவதத்தன், தனஞ்செயன்) 11. அந்தக்கரணன் - 4(மனம் புத்தி, சித்தம், அகங்காரம்) 12. அறிவு - 1(அறிவு (ஆன்மா) 13. கன்மேந்திரியம் - 5(வாய், கால், கை, எருவாய், கருவாய்) 14. கன்மேந்திரியச் செயல் - 5(பேசல், நடத்தல், செய்தல், மலநீர் கழித்தல், விந்து கழித்தல்) 15. ஐம்பொறிகள் - 5(மெய், வாய், கண், மூக்கு, செவி) 16. ஐம்புலன்கள் - 5(ஊறு, சுவை, ஒளி, சுவை, ஓசை) 17. பூதங்கள் - 5(மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம்) 18. ஆசயம் - 5(இரைக்குடல், செரிகுடல், சலவாசயம், மலவாசயம், சுக்கில வாசயம்) 19. கோசம் - 5(அன்னமயம், பிராணமயம,; மனோமயம், விஞ்ஞானமயம, ஆனந்தமயம்) 20. வுணினை - 2(நல்வினை, தீவினை) இவைகளே 96 தத்துவங்கள்.

## ஆதாரங்கள் 6ம் பூதங்கள் 5ம் இருப்பிடம்

**1.மூலாதாரம்**

குதத்திற்கும் குய்யத்துக்கும் இடையில் கொடியாக முக்கோண வடிவில் முதுகெலும்பின் நுனியில் இருக்கும்.

**2.சுவாதிட்டானம்**

சதுர வடிவில் மூலாதாரத்தில் 2 அங்குலத்தின் மேல் பிரிதிவு எனும் மண்ணின் இடமாக உள்ளது.

**3.மணிப்புரகம்**

பிறை வடிவில் சுவாதீட்டானத்திற்கு 6 அங்குலத்திற்கு மேல் பகுதியில் அப்பு எனும் நீரின் பகுதியாக இருக்கும்.

**4.அனாகதம்**

வட்டத்திற்குள் முக்கோண வடிவில் மணிப்பூரகத்திற்கு மேல் 8 அங்குலத்திலுள்ள இதய பீடத்திற்கு அனாகத வீடு என்று பெயர். இது தேயு எனும் நெருப்பின் பகுதியாக இருக்கும்.

**5.விசுத்தி**

அறுகோண வடிவில் அனாதகத்திற்கு 12 அங்குலத்திற்கு மேல் வாயுவுடைய பகுதியாக இருக்கும்.

**6.ஆக்ஞை**

வட்ட வடிவில் விசுத்திக்கு மேல் 14 அங்குலத்திற்கு மேல் வெட்ட வெளிப் பகுதியாக இருக்கும்.

**நாடி**

10 நாடிகளையும் குறுக்கி 3நாடிகளாக்கி வாத பித்த கபம் என்று பெயரிடப்பட்டுள்ளது.

**வாயு- 10**

**1.பிராணன்**

மனிதனுக்கு 24 மணிநேரத்தில் 21600 முறை சுவாசம் நடைபெறுகிறது. இதில் 14400 சுவாசம் மூலாதாரத்தினுள் அடங்கும். மீதி 7200 சுவாசம் வெளியில் சென்று விடும். இவ்வாறு பாழாகும் சுவாச வாயுக்கள் 12 அங்குலம் மேலெழும்பி திரும்பி 8 அங்குலம் ஆகும். மீதி 4 அங்குலம் பாழாகும். இவைகளில் உள்ளது பிராண வாயு. இந்த பிராண வாயுவால் உண்ட உணவு சீரணமாகும். இதன் நிறம் நீலம். வீணாகும் பிராணனையும் உள்ளே செயற்பட வைத்தால் முதுமை இன்றி வாழலாம்.

**2.அபாணன்**

இந்த வாயு சுவாதிட்டானத்திலிருந்து கீழ் நோக்கி செயல்படும். இது மலத்தையும் நீரையும் வெளியேற்றும். இது ஆசனவாயை சுருக்குதல் அன்ன சாரத்தை உறிஞ்சுதல் போன்ற தொழில்களை செய்யும். இதன் நிறம் பச்சை. இது கர்ப்பத்திலுள்ள சிசுவை வெளியில் தள்ளும்.

**3.வியாணன்**

இது தோல் பகுதியிலிருந்து உடலிலுள்ள 72000 நாடியிலும் சென்று உடலில் அசையும் பகுதி அசையாப் பகுதியில் பரவி நீட்டல் முடக்கல் செய்வதுடன் உணர்வுகளை அறிவித்தும் மேலும் உணவின் சத்துக்களை உடலில் எல்லா பகுதிகளுக்கும் எடுத்துச் சென்றும் சேர்க்கும். இது பால் நிறமாகும்.

**4.உதாணன்**

வயிற்றில் ஜீரணத்தை ஏற்படுத்தி உணவின் சத்தைப் பிரிக்கும். மேலும் அச்சத்துக்களை வெளிப்படுத்துதல் கலக்குதல் ஆகியவற்றைச் செய்யும். இதன் நிறம் மின்னல் போன்றது.

**5.சமாணன்**

இது நாபியிலிருந்து பாதம் முதலிய அங்கங்கள் வரை சமமாக இருந்து மற்ற வாயுக்களை கட்டுப்படுத்தும். அறுசுவைகளையும் நீரையும் உணவையும் உடலில் எல்லாப் பகுதிக்கும் ஒரே சீராகப் பரவச் செய்யும்.



இதன் நிறம் புஷ்பராகம்.

**6.நாகன்**

இது சகல கலைகளையும் அறியச் செய்யும். பாடச் செய்வது கண்களை சிமிட்டுவது கண்களைத் திறக்கச் செய்வது ரோமங்களை சிலிர்க்க வைப்பது போன்ற வேலைகளைச் செய்யும். இதன் நிறம் பொன்நிறம்.

**7.கூர்மன்**

இது இமை கொட்டுதல் கொட்டாவி விடல் வாயை மூடச் செய்தல் கண்ணீர் பாயச் செய்தல் ஆகிய வேலைகளைச் செய்யும். இதன் நிறம் வெள்ளை.

**8.கிருகரன்**

சீரண நீரைப் பெருக்கி பசி வேகத்தைக் காட்டும். மேலும் அமர்தல் செல்லுதல் தும்மல் இருமல் முதலியவற்றை உண்டாக்கும். இதன் நிறம் கருமை.

**9.தேவதத்தன்**

இது சோம்பலை முறித்து சுறுசுறுப்பைத் தரும். மேலும் கண்களை பல திசைகளில் திருப்புதல் ஒரு நிலையாக வைத்தல் போன்ற வேலைகளைச் செய்யும். சண்டையில் அடித்தல் திட்டுதல் கோபத்தை உண்டு பண்ணுதல் ஒன்றை தீர்மானித்தல் போன்ற வேலைகளைச் செய்யும். இதன் நிறம் சிவப்பு.

**10.தனஞ்செயன்**

இது உடலை வீங்கச் செய்யும். ஒளியைப் பிறப்பிக்கும். மனிதன் இறந்த போது மற்ற வாயுக்கள் அனைத்தும் சோர்ந்து செயலிழக்கும். ஆனால் தனஞ்செயன் மட்டும் உடலிலிருந்து வீங்கச் செய்து 72 மணிநேரத்திற்குப் பின் கபாலத்தைத் திறந்து கொண்டு வெளிச் செல்லும்.

இவ்வாறாக உடல் உருவாகி செயல்படுகிறது. உடலில் 6 சுவைகளில் உள்ள சத்துக்கள் உலோச் சத்து பாஷானச் சத்து இரத்தின சத்து போன்ற அனைத்துச் சத்துப் பொருள்களும் உடலில் உள்ளது. இவ்வாறாக உடல் அமைந்துள்ளது.



## உடலுக்கு நோய் எதனால் எவ்வாறு வருகிறது?


96 தத்துவங்களை உள்ளடக்கிய அணுக்களால் ஆன உடல் மனதாலும் உடலாலும் இயற்கை விதிகளுக்கு மாறாக செயல்படும் போது அங்கு உடல் ஒவ்வாமை நிலையை அடைகிறது. அப்போது உடல் நோய்வாய்ப் படுகிறது. நோய் காற்று தண்ணீர் இவைகளின் அசுத்தத்தாலும் வருகிறது. வியாதி பலதரப்பட்ட குணங்களைக் காட்டுகிறது. அதை சித்தர்கள் 4448 வியாதிகள் உள்ளதாக அறுதியிட்டு கூறியுள்ளனர். அவைகளில் இப்போதுள்ள நவீன விஞ்ஞானிகளால் நிரூபிக்கப்பட்டவைகள் போக இன்னும் ஆயிரக்கணக்கான வியாதிகள் கண்டுபிடிக்க முடியாமலும் உள்ளன. ஆயினும் இவைகளின் மொத்த எண்ணிக்கையை தமிழ் சித்தர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறிவிட்டனர்.

## நோயை எதனால் எவ்வாறு நீக்குவது?

**நோய் நாடி நோய் முதல் நாடி அதுதணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல் (குறள்)**

உடலில் உள்ளது என்ன நோய். அந்நோயின் மூலகாரணம் என்ன. அது எந்த மருந்தால் எவ்வாறு குணப்படுத்துவது என்பதை முதலில் அறிய வேண்டும். நோயை அறிந்து கொள்ள வாத பித்த கப நாடிகள் உதவுகின்றன. இம்மூன்று நாடிகளும் ஆணுக்கு வலது பெண்ணுக்கு இடது கையின் மணிக்கட்டின் கீழ் பெருவிலுக்கு ஒரு அங்குலத்திற்கு கீழே நமது மூன்று விரல்களை வைத்து சிதானமாக அழுத்திப் பார்க்கும் போது நோயாளியின் கையிலிருந்து நாடித்துடிப்பை நாம் உணரலாம். இந்நாடித் துடிப்பின் வேகத்தை மாத்திரை என்று சொல்லப்படுகிறது. வாதம் 1 மாத்திரை பித்தம் ½ மாத்திரை கபம் ¼ மாத்திரை என்று வரையறுக்கப்பட்டுள்ளது. அளவால் உணரும் போது முழுக் கோதுமை அரைக்கோதுமை கால்கோதுமை அளவிற்கு உணரலாம். இதில் வாதநாடி வாதபித்த நாடி வாதகப நாடி என்று வாதத்தில் மூன்றாகவும் பித்தநாடி பித்த வாதநாடி பழத்த கபநாடி என்று பித்தத்தை மூன்றாகவும் கப நாடி கபபித்த நாடி கபவாத நாடி என்று கபத்தில் மூன்றாகவும் உணர்த்தப்பட்டுள்ளது. இவைகள் நமது மூன்று விரல்களினால் பதமாக அழுத்திப் பார்த்து உணர்வால் அறிய வேண்டி இருப்பதால் சரியான முறையில் தெரிந்து செயல்ப்பட அதிக அனுபவம் தேவை. இப்படி நாடியின் மூலம் நோயை அறிவது வார்த்தையால் நோயை அறிவது நாவின் நிறத்தைப் பார்த்துநோயை அறிவது தேகஸ்பரிசத்தினால்நோயை அறிவது தேக நிறத்தினால்நோயை அறிவது மலத்தைப் பார்த்துநோயை அறிவது சிறுநீரைப் பார்த்துநோயை அறிவது கண்களைப்பார்த்துநோயை அறிவது நீர்ச்சீலை மற்றும் நெய்ச்சீலை மூலம்நோயை அறிவது தீபக் குறியால் நோயை அறிவது போன்ற பலதரப்பட்ட முறைகளால் வியாதியை அறிந்து அதற்கேற்ப நோயாளியின் வயது நோய் வந்திருக்கும் காலம் நோயாளியின் பலம் நோயாளியின் குடும்ப சூழ்நிலை இவைகளையும் அறிந்து அதற்குத்தக்க வகையில் சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதே சித்த மருத்துவ சிகிச்சை முறைகள் ஆகும்.

வாத பித்த கப நாடிகளைக் கொண்டு உடலில் மூன்று பாகமாக பிரிக்கப்பட்டுள்ளது. வயிறும் அதற்குக் கீழ்ப் பகுதியும் வாதப் பகுதி என்றும் மார்புப் பகுதி பித்தப் பகுதி என்றும் கழுத்தும் அதற்கு மேலுள்ள பகுதி கப பகுதி என்றும் இவ்வாறு அறிவியல் பூர்வமாக உடற்கூறுகளும் நோய் நிர்ணயமும் குணப்படுத்தும் விதமும் முறையும் சித்த மருத்துவத்தில் முறைப்படுத்திக் கூறப்பட்டுள்ளது. அதேபோல் மருந்துகளைச் செய்யும் போதும் எந்த மருந்து மூலப்பொருளுக்கு எந்த மூலப்பொருள் எதிர்வினைச் செய்யும் எந்தெந்த மூலப்பொருள் இணைந்து செயற்படும் என்பதை சத்துரு மித்துரு என்று வகைப்படுத்தப்பட்டுள்ளது. அதன்படி



என்று சைவ சித்தாந்த நூல்கள் கூறுகிறது. அதையே இறைப்பொருள் என்று அதற்கு மனிதன் உருவங்களைக் கொடுத்து அந்த உருவங்களுக்கு சிவன் சக்தி என்று பெயரிட்டு அதை வணங்க ஆரம்பித்து விட்டனர்.

அணுவில் அணுவாய் இறைவன் உலகில் எல்லாப் பாகங்களிலும் வியாபித்துள்ளான் என்பது பொதுமறை. ஆனால் அதற்கு உருவத்தினை மனிதன் தந்ததால் சித்தர்கள் கூறிய உண்மையான இறை தத்துவத்தை உலகிலுள்ள அனைத்து மக்களும் அறிய வாய்ப்பில்லாமல் போய்விட்டது. சித்தர்களின் நோக்கம் உருவமற்ற இறைவனை அணுவுக்குள் அணுவானவனை கண்களால் காணமுடியாது. உணர்வால்தான் அறிய முடியும். அதற்காக மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை வணங்குங்கள் என்று பெரியோர்கள் கூறியுள்ளனர். மனத்தூய்மையற்ற தொழுகையை அழுக்குத் துணியை தூக்கி வீசி எறிவது போல் உனது முகத்தில் வீசி எறிகிறேன் என்று இறைமறையாம் திருக்குர்ஆனில் இறைவன் கூறியிருப்பதாக பெரியோர்கள் வாயிலாக கேள்வியுறுகிறோம். இதையே சிவஞான போதம் எனும் நூலைத் தந்த மெய்கண்டார் பின்வருமாறு கூறுகிறார்.

அறிந்து சுத்தி செய்ய வேண்டிய மூலப் பொருட்களை முறைப்படி சுத்தி செய்து சரியான முறையில் மருந்துக்களை தயாரித்து பத்திரப்படுத்தி நோயாளிகளுக்கு உள்ளுக்கு சாப்பிடவோ மேல் பிரயோகமாகவோ நசியமாகவோ கலிக்கமாகவோ பயன்படுத்தினால் நோய் நீங்கி சுகம் பெறுவான் என்பதே சித்த மருத்துவ நியதி.

**முடிவுரை:**

சித்த மருத்துவத்தைப் பற்றி அறிவியல் பூர்வமாக கூறினோம். சித்த மருத்துவம் எதற்காக வந்தது என்பது ஒரு பெரிய கேள்வி? சித்த மருத்துவம் உடலைப் பெற்ற மனிதன் அதனுள் இருக்கும் இறைவனை ணறிய வேண்டும் என்பதற்காகவே வந்தது. சித்தர்கள் மருந்துக்களை சொல்லி கடைசியில் மானிடர் பிழைப்பதற்கு சொன்னேன் என்று கூறுகின்றனர். அதாவது சித்த மருத்துவன் மருத்துவம் செய்து பணம் பெற்று அதனால் வாழ்க்கையில் வசதிகளை அடைந்து வாழ்வதற்காக சொல்லவில்லை. மனிதன் சூழ்நிலை காரணமாக உடல் நோய்வாய்ப்படுவான். அதன் காரணமாக பிறப்பின் பயனின்றிச் சாவான். அப்படி நோய்ப்பட்டவன் சித்த மருத்துவ முறையில் சிகிச்சை பெற்று சுகமடைந்து மீண்டும் தன்னுள் இருக்கும் இறைவனை தான் அறிந்து சுகம் பெறவேண்டும் என்பதற்காகவே மானிடர் பிழைப்பதற்குச் சொன்னேன் என்கின்றனர். உலகிலுள்ள அனைத்தும் அணுக்களால் ஆனது என்று கண்டோம். அந்த அணுக்களுள் 96 தத்துவங்கள் அமைந்துள்ளதென அறிந்தோம். மேலும் அந்த அணுவில் அணுவாகி பிரிக்க முடியாத ஒன்றாக உயிரும் (ஆத்மா) சக்தியும் உள்ளது. அணுக்களை நாம் புறக் கண்களால் காணமுடியாது. அந்த பிரிக்க முடியாத ஒன்றாகிய உயிரையும் சக்தியையும்தான் சிவசக்தி

**பூசை எனப்படுவது**
**பூவொடு பானியோ? யாதெனில்**
**ஆசை கோபம் அகந்தை நீக்கியே**
**நீச்ச ஐம்பொறிகளை நெஞ்சத்துள் இருத்தியே**
**ஈசனை இதயத்துள் காண்டலே என்கிறார்.**

ஈசன் என்று அவர் கூறுவது இறைவனை இலக்கணத் தமிழ் பொருளில் கூறினாரே அன்றி எந்த உருவத்தையும் அல்ல.

இதற்காகவே சித்த மருத்துவத்தை மேற்கண்ட விஞ்ஞான ரீதியாக மக்களுக்கு சித்தர்களில் ஒருவர் திருமுலர் அவர்கள் முறைப்படுத்தி தந்துள்ளார்கள். சித்த மருத்துவத்திலுள்ள பயன்பாடுகள் அனைத்தையும் பல சித்தர்கள் நமக்குப் பாடல் வடிவில் தந்துள்ளனர். அவர்களில் மிகச்சிறந்தவராக வைத்திய அகத்தியர் காணப்படுகிறார். ஆக சித்த மருத்துவம் மனிதனின் வியாதியைப் போக்க மட்டுமல்லாமல் உடலை பக்குவமாக வைத்திருந்து அதனுள் இருக்கும் இறைவனை அறியவே. இதைக் கூறுவது நம் பழந்தமிழே. நாமும் இதை உணர்ந்து செயல்படுவோம் என்று கூறிமுடிக்கிறேன்.



# கல்வியின் மகிமை

ஆரம்பத்தில் இருந்து மனித சமுதாயத்தில் கல்வியும் வாழ்ந்து வந்துள்ளது. மனிதராக பிறந்த ஒவ்வொருவரும் கல்வி வளர்ச்சியில் பல்வேறு கால கட்டங்களிலும் தமக்கு பொருத்தமானதை, தேவையானதை கற்றுக்கொண்டு வந்துள்ளார்கள்.இன்றைய சமூகம் விரைவில் மாறிக்கொண்டு வருகின்றது. கல்வியினால் வாழ்க்கை முறைகள் செயற்பாடுகள் ஆகியன குறுகிய கால இடைவெளியில் மாறி விடுகின்றன. நாம் கற்றவற்றில் சில விடயங்கள் சில வருடங்களின் பின்னர் எமது வாழ்க்கைக்கு பயன்படாது போகும் அளவிற்கு சமூகம் மாறிக் கொண்டு இருக்கின்றது. இதற்காக மாறி வரும் விஞ்ஞான தொழிநுட்ப முறைகளுக்கு பொருத்தமான கல்வியை மாணவர்கள் கற்க வேண்டி இருக்கின்றது. இதனால் கல்வி சமூக மாற்றத்துக்கு உள்ளாகிறது.

கல்வி கற்பிக்கப்படும் இடமென்பது விதைகளை பதப்படுத்தும் இடம் எனக் கூறலாம். ஒரு தலைமுறையை அவர்களின் திறன்களை கண்டறிந்து, அவர்களின் தாழ்வுமனப்பான்மையிலிருந்து விடுவித்து, சமூக அநீதிக்கெதிராக தம் குரலை உயர்த்தும் நேர்மையான குடிமக்களை உருவாக்கும் இடம் என அறுதியிட்டு கூறலாம். சமுகத்துக்கான நேரத்தை மூலதனமாக்கி, அறிவை ஆயுதமாக்கும் அடிப்படை சாதனமே கல்வி. எனவேதான், நமது முன்னோர்கள் நமது சமுகத்தை கட்டமைக்க கல்வியை பயன்படுத்தினர். ஆணும் பெண்ணுமாய்



**திருமதி.**
**பவானி சற்குணசெல்வம்**
**(நெதர்லாந்து)**



இணைந்து கல்வி அறிவை பெற்றால் மட்டுமே அதனை, சமூகத்துக்கான முழுமையான வளர்ச்சி என நாம் உறுதிப்படுத்தமுடியும்.

சமுதாயத்தின், சமுக–அரசியல்–பொருளாதார தளங்களுக்கு அடிப்படையாக அமைவது கல்வியும் பண்பாடும் மட்டுமே. நேற்றைய குழந்தைகளான பெற்றோர்களும், நாளைய தலைவர்களான இன்றைய குழந்தைகளும் தங்களுடைய வாழ்வியல் சூழலோடு தங்களைப் பொருத்திக்கொண்டு முழுமையான வளர்ச்சி காண்பதற்கு கல்வியை கற்றுத்தருகின்ற பள்ளியும், பண்பாட்டை சொல்லித்தருகின்ற குடும்பமும் சமூக கட்டமைப்பில் முக்கிய பங்காற்றுகின்றன.

சமுகத்தின் அடிப்படை அலகுகளாக திகழுகின்ற மனிதர்கள் தமது வாழ்வைச் சார்ந்து தீர்க்கமான முடிவெடுப்பதற்கும், வாழ்வின் சிக்கலான தருணங்களில் தீர்வு காண்பதற்கும் கல்வியும்– பண்பாடும் உதவிக்கரமாக திகழுகின்றன. இதனால் சமுகத்தில் அவர்களின், முழுமையான திறனும், சுயசார்புத்தன்மையும், சுயமதிப்பீடும், மாற்றுச் சிந்தனையும் வளர்வதற்கு உதவிபுரிகின்றன.

கல்வியின் முக்கியத்துவத்தையும், சமுகத்தின் இயங்கியலில், அதற்கான அவசியத்தையும் அறிந்துகொள்ள, இலக்கியங்கள் அதற்கான தரவுகளை நமக்கு முன்னிறுத்துவதை நாம் காணமுடியும். சங்ககாலத்துக்கு பிறகு, சமுகத்தை நேர்ப்படுத்துவதற்கும், அதனை கட்டமைப்பதற்கும் சமயக் கல்வியாக முன்னிருத்தப்பட்டிருப்பதையும் அறிந்து கொள்ள முடியும். நமது சமுகக் கட்டமைப்பில், சமயக் கல்வியானது, செயலாற்றும் தன்மையையும், நல்லொழுக்கத்தையும் சமுக அடித்தளங்களாக உருவாக்கியது.

சமூதாயத்துக்கான விழுமியங்களை உருவாக்குவதிலும், சமுக மூலதனங்களான ஒற்றுமை, சகிப்புத்தன்மை, ஒருவரையொருவர் சார்ந்து வாழ்தல், நட்புணர்வு ஆகியவற்றை சமுக கட்டமைப்பிற்குள் பலப்படுத்துவதிலும் கல்வியின் பங்களிப்பு முதன்மையானது மட்டுமல்ல; முக்கியமானதும் கூட. நமக்கான சமுகத்தை நேர்மையாக்குவதிலும், நல்லொழுக்கத்திலும், ஆழமான நற்சிந்தனையையும், அகலமான அறிவையும் உறுதிப்படுத்த கல்வி மிக அவசியம் என்பதை மறுக்க முடியாது.

மேலும், ஒரு மனிதன் வாழ்வின் மிகப்பெரிய உச்சத்துக்கு சென்றாலும், எதிர்பாராத சூழலில் வாழ்வின் விளிம்பு நிலைக்கு செல்ல நேர்ந்தாலும், இறுதி வரையில் அவனுக்கு/அவளுக்கு உறுதுணையாக இருப்பது கல்வி மட்டுமே.

சமுதாயத்தில் காணப்படும், கல்லாமை, அறியாமை, இல்லாமை, இயலாமை, முயலாமை போன்ற ஆமைகளை விரட்டி விட்டு, சமுகத்தை நீதியான சமூதாயமாக, நேர்மையான சமூதாயமாக இயங்க வைப்பதற்கு கல்வி மட்டுமே அடித்தளமாக அமையும்.

மற்றவர்களுக்கான நலனை முன்னிறுத்துவதும், அதற்காக செயல்படுவதுமே கற்றலினாய பயன்களுள் ஒன்றாகக் குறிப்பிடலாம். மேலும், கற்றதன்பயன் மனிதத் தன்மையோடு வாழ்தல் என்பதை,

கல்வி என்பது, நமது பிள்ளைகளின் மூளைக்குள் புதிதாக எதையும் திணிப்பது அல்ல; மாறாக, இந்தச் சாதிய சமூகம் அந்தக் குழந்தைகளின் மூளைக்குள் திணித்திருக்கும் சாதிய நம்பிக்கைகளை அகற்றிவிட்டு, அவர்களைச் சுயசிந்தனை உடையவர்களாக மாற்றுவது என்பதே. ஏனெனில் சமூகம் திணித்திருக்கும் பல நம்பிக்கைகள் மூட நம்பிக்கைகளாகவே உள்ளன என்பது வெள்ளிடை மலையாகும்.

கல்வி என்பது வேலை வாய்ப்பு பெறுவதற்கான கடவுச்சீட்டு எனபதைப்போன்ற ஒரு விளிம்புநிலை புரிதல் இங்குள்ளது. மாறாக நமது சமுகக்கட்டமைப்பில் சுதந்திரம்–சமத்துவம்–சகோதரத்துவம் எனும் முக்கோண கோட்பாட்டின் அரசியலை, சமுகத்தின் இயல்பாக நிறுத்துவதே கல்விதான். இந்த அரசியல் தத்துவத்தை சமுகம் உள்வாங்காமல் இருப்பதற்கு நமது இயலாமை மட்டுமே காரணமாகும். தனிமனித பலவீனத்தை அகற்றி, தனி மனிதர்கள் சமுகத்தோப்பாக மாற்றும் பணியை கல்வி மட்டுமே முன்னெடுக்கிறது. எனவேதான் ஆதிகாலத்தில் இருந்து, இன்றைய சூழல் வரையில் கல்விக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கப்பட்டது. எனவே கல்வியை அனைவருக்கும் சாத்திய மாக்குவோம்.





டாக்டர்.(திருமதி)எஸ்.கேசவன் (PhD)
தலைவர்,
இந்து நாகரிகத் துறை,
கிழக்குப் பல்கலைக்கழகம்,
மட்டக்களப்பு, இலங்கை.

# இலங்கையின் சைவ, பௌத்த சமூக நல்லுறவின் அடையாளம்

## முதலாவது தமிழ் பௌத்த துறவி வண.பொகவந்தலாவை ராகுல தேரரை அடிப்படையாகக் கொண்ட ஆய்வு



### அறிமுகம்:

இலங்கையில் நிலவும் பிரதானமான சமய நெறிகளுள் சைவம்,பௌத்தம்,கிருத்தவம்,இசுலாம் ஆகியன குறிப்பிடத்தக்கன. பௌத்த மத வரவிற்கு முற்பட்டது சைவம் என்பதற்குப் பல வரலாற்று ஆதாரங்கள் பெருமளவில் கிடைக்கின்றன. இதனைப் பேராசிரியர் சி.க. சிற்றம்பலம், பேராசிரியர்சி.பத்மநாதன் போன்றோர் ஆய்வுகள் ஊண்டு நோக்கத்தக்கது.இன்றைய சூழலிலே மக்களின் வறுமை, வாழ்வியல் பிரச்சினைகளைக் காரணமாக வைத்துமதமாற்றும் போக்கினையும் காணமுடிகிறது. ஒரு சமயத்தவர் மற்றைய சமயத்தைச் சாடுவதையும் வெளிப்படையாகக் காணலாம். எனவே அனைத்துச் சமயங்களுக்கிடையேயும் சமரசத்தைப் பேணுவதனூடாக சமுகநல்லுறவை மேம்படுத்தமுடியும்இவர் சைவ,பௌத்த மதங்களுக்கு உரித்துடையவர் என்பதால் அது குறித்து ஆராய்வது இவ் ஆய்வுக் கட்டுரைக்கு அரண் சேர்க்கும்.இத்தகையதோர் சூழ்நிலையிலே வண.பொகவந்தலாவை ராகுல தேரர் அவர்களது அளப்பரிய பணி பற்றி ஆய்வு செய்வதே இவ் ஆய்வுக் கட்டுரையின் முக்கிய நோக்கமாகும்.



சிவபாலன் மயூரன் BA(Hons)

### இலங்கை வரலாற்றில் சைவம், பௌத்தம்

இலங்கையின் வரலாற்று ஆரம்ப காலங்களிலே சைவமும், பௌத்தமும் ஒன்றையொன்று தழுவிய நிலையில் தம்மை வளர்த்து வந்திருந்தன. பிற்பட்ட காலங்களில் பல பூசல்கள் காரணமாக அத்தொடர்பில் பாரிய விரிசல்கள் ஏற்படலாயின. எனினும் இலங்கையிலே தற்போதும் இன,மத காழ்ப்புணர்வுகள் இழையோடிய வண்ணமுள்ளன. ஆங்காங்கே நடைபெறும் சம்பவங்கள் இதற்குச்

சான்றாகின்றன. இவ் இன,மத காழ்ப்புணர்வுக ளைத் தீர்ப்பதற்கு சிங்களவருக்குத் 'தமிழ்' பரீட்ச யமின்மையும், தமிழருக்குச் 'சிங்களம்' பரீட்சய மின்மையும் காரணமாகின்றன எனலாம். மொழி தெரியாத காரணத்தினால் இனங்களுக்கிடையிலான புரிதல்கள் இல்லாதுள்ளன. இந்நிலையில் வண.பொக வந்தலாவை ராகுல தேரரது பணி குறிப்பிடத்தக்க அம்சமாக விளங்குகிறது.ஏனெனில் இவர் இருமொழி களிலும் தேர்ச்சி பெற்று விளங்குவதோடு இரு மொழி களிலும் பிரசங்கங்கள் ஆற்றுபவர்.

## சுமய நல்லுறவும் வண.பொகவந்தலாவை ராகுல தேரரும்

வண.பொகவந்தலாவை ராகுல தேரரதுசைவஇ பௌத்த சமய நல்லுறவினை மேல்வருமாறு வகைப் படுத்தி நோக்கலாம்.

**01.வாழ்க்கைப் பின்னணி**

1.1. குடும்பப் பின்னணி
1.2.பள்ளி வாழ்க்கை
1.3. பௌத்த துறவறம்

**02. ஆளுமைகள்**

2.1. சர்வ மத குரு
2.2. பூசகர்
2.3. கவிஞர்
2.4. கலைஞர் (பரத நாட்டியம்)
2.5. விக்கிரக அலங்காரம்
2.6. ஓதுவார்
2.7. மடப்பள்ளி வேலை

**03. பௌத்த துறவறத்தின்பின் சைவப் பணிகள்**

3.1. சைவ ஆலயங்களில் பிரசங்கங்கள்
3.2. பிரதோஷத்தில் சிவலிங்க அபிஷேகம்
3.3. நவராத்திரியைக் கொண்டாடுதல்
3.4. தைப்பொங்கலைக் கொண்டாடுதல்
3.5. அறநெறி நடாத்துதல்
3.6. கூட்டங்களில் சைவம் பற்றிப் பேசுதல்
3.7. தமிழ்ப் பாலர் பாடசாலைகளை நடாத்துதல்
3.8. தமிழ் இளைஞர்இ யுவதிகளுக்கு வேலை வாய்ப்பைப் பெற்றுக் கொடுத்தல்

**04.இன, மத ஒற்றுமைக்கு இவர் கூறும் வழிமுறைகள்**

**05. தர்ம போதனைகள்**

**06. வெளிநாட்டுப் பயணங்கள்**

## 01.வாழ்க்கைப் பின்னணி

### 1.1. குடும்பப் பின்னணி

இரத்தினபுரி பலாங்கொடையைப் பூர்வீகமாகக் கொண்ட கோயில்ப் பூசகரான பிரம்மஸ்ரீ கந்தசாமி சுப்ரமணியம், சரோஜாதேவி தம்பதியினருக்கு மூன்றா வது ஆண்பிள்ளையாக 1988ஆம் ஆண்டுவைகாசி மாதம் பதினாறாம் திகதி பலாங்கொடை ராசகல பிரதே சத்தில் திருஅவதாரம் செய்தார். அக்குழந்தைக்கு மகேந் திரன் என்ற பெயரைச் சூட்டி மகிழ்ந்தனர். இவரே பின்னாளில் வண.பொகவந்தலாவை ராகுல தேரரா னார்.

### 1.2. பிள்ளைப் பருவம்

வண.பொகவந்தலாவை ராகுல தேரர் தன்னுடைய பிள்ளைப் பராயத்திலேயே தாய்இதந்தையர் மீது மிகுந்த பாசமுள்ளவராகத் திகழ்ந்ததனால் பாலர் வகுப்புக்குச் செல்லவில்லை.இளமைக் காலமிருந்தே வறுமை புரையோடிய போதும் பத்தாவது வயதில் தந்தையை இழந்த காரணத்தால் இவரது வாழ்க்கை இருண்ட காலத்திற்குள்ளானது. தாயின் தலைமைத்து வக் குடும்பமாதலால் தாய்ப் பாசம் அதிகமாயிற்று.

### 1.3. பள்ளி வாழ்க்கை

தரம் ஒன்று தொடக்கம் நான்கு வரை ராசகல தமிழ் வித்தியாலயத்தில் கற்றார். இக்கல்லூரியானது இவ ரது வீட்டிலிருந்து 5கிலோமீற்றர்தூரமாகும். சிறு வய திலேயே இத்தூரத்தை நடந்தே கடக்க வேண்டியிருந் தது. தன்னுடைய ஏழாவது வயதில் பிராமணர்க்குரிய உபநயனச் சடங்கு மேற்கொள்ளப்பட்டது. இதனால் மகேந்திரன் என்று இருந்த இவர்வண.மகேந்திர சர்மா ஆனார்.

ஐந்தாம், ஆறாம் தரங்கள் சிசில்டன் தமிழ் வித்தியா லயத்தில் தொடர்ந்ததன் பின்தரம் ஏழு தொடக்கம் பத்து வரை பலாங்கொடை இந்துக் கல்லூரியிலும் கற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படலாயிற்று. தரம் எட்டுப் பயிலும் போது இந்தியாவிற்குச் சென்று வரு தலை வழக்காகக் கொண்டிருந்தார். அச்சந்தர்ப்பத்தில் மதுரை மீனாட்சி அம்மன் கோவில் குருகுலத்தில் கற் றார். க.பொ.த சாதாரண தரம் மற்றும் க.பொ.த உயர் தரம் முதலான வகுப்புக்களை வெலிமட தமிழ் மகா வித்தியாலயத்தில் தொடர்ந்தார். மேற்கொண்டு உயர் கல்வியைத் தொடராமைக்கு வறுமை காரணமாயிற்



று.க.பொ.த உயர் தரத்தின் பின் இந்திய குருகுலத்தில் 03 வருடங்கள் இருந்தார்.

### 1.4. பௌத்தத் துறவறம்

வண.பொகவந்தலாவை ராகுல தேரர்அவர்கள் தனது சிறு பராயத்திலிருந்தே சமுக சேவையில் நாட் டமுள்ளவராகத் திகழ்ந்துள்ளார். அதனால் இல் லற நினைப்பே இருக்கவில்லை. பூசகராக இருந்த காலங்களிலும் பௌத்த துறவிகள் போலவே ஆடை அணிந்திருப்பார். (படம் - 01,02) அது போன்று இயல்பாகவே உள்ளார்ந்த தேடல் மிக் கவராக இருந்ததனால் ஆன்மிகம் தொடர்பான ஆராய்ச்சி பௌத்த துறவியாக பரிமாணமடையக் காரணமாயிற்று.

சர்வ மதகுருக்கள் சங்கத்தில் இவர் இந்து மத குருவாக விளங்கியிருந்தார். சர்வ மத கூட்டங்களில் பலபௌத் தத் துறவிகளின் தொடர்பும் கிடைக்கலாயிற்று. அத் தோடு; ஒலுகன்தோட்ட இகலமண்டாவல ஸ்ரீ சுதர்மா விகாரையின் பௌத்தத் துறவிகளோடு ஏற்பட்ட நெருங்கிய தொடர்பும் பௌத்தத் துறவறம் பூணக் கார ணமானது.

#### பலாங்கொடை கருமாரி அம்மன் பூசகர்

பலாங்கொடை கதிரேசன் கோயிலில் பூசாரியாக இருந்த இவர்2010ஆம் ஆண்டுபூட்டப்பட்ட நிலை யிலிருந்த பலாங்கொடைகருமாரி அம்மன் கோவி லினைத் திறந்து பூசை வழிபாடுகளை நித்தியமாக நிகழ்த்தலானார். அத்தோடு கோயிலில் பளிங்கு கற் கள்(Marble),நீர்வசதி(Water supply),குருக்கள் தங்குமிடம் என்பன அமைக்கக் காரணமானதோடு மக்களையும் கோவில் வழிபாட்டில் ஆற்றுப்படுத்தி யிருந்தார். எனினும் மக்களிடையே ஏற்பட்ட கருத்து வேறுபாடுகளின் காரணமாக இவர் ஒதுங்க சங்கற் பம் பூண்டு2016ஆம் ஆண்டு ஆவணி பதினான்காம் திகதி கோவிலில் பூசையினை முடித்துவிட்டு அம்பா ளின் சந்நிதானத்திலே கோயில்த்; திறப்பை வைத்த பின்னர் வீடு திரும்பினார்.

வண.உடகரவிட்ட சுகுன நந்த தேரர சந்திப்பும் பௌத்த துறவறம் பூணுதலும் வண.மகேந்திர சர்மா வாக இருந்தவர் பௌத்தம் தொடர்பாகத் தேடலானார். இவ்வேளையில் வண.உடகரவிட்ட சுகுன நந்த தேரர் விடுத்த வேண்டுகோளின்படி ஒலுகன்தோட்ட இகல



மண்டாவல ஸ்ரீ சுதர்மா விகாரைக்கு வந்து பௌத்த துறவறம்பூண விரும்புவதாகக் கூறினார். எனினும் வண.உடகரவிட்ட சுகுன நந்த தேரர் இவ்விகாரை யில் மூன்று மாதங்கள் தங்கியிருந்து நன்றாக யோசி க்கும்படி கூறினார். அந்த மூன்று மாதங்களில் பௌத்த மதம் தொடர்பாக ஏராளமாகத் தேடி னார். கார்த்திகை மாதம் துறவறம் உறுதி எனத்தேர்வு செய்த வண.மகேந் திர சர்மா பதினா றாம் திகதி மார்கழி 2016இல் காலை மு.ப.10.10மணியள வில் காவியுடை உடுத்தினார். பின் னர் இருபத்தியோ ராம் திகதி ஆடி மாதம் 2018இல் குருத்துவ பட்டமளிப்பு 'உபசம்பதா' நடைபெற்றது. (இதனை 'கோடியாக் சங்வர சீல'- ஒருகோடி சீலங்களைப் பாதுகாத்தல் என்பர்) (படம் - 03,04,05,06) அன்றிலிருந்து இற்றைவரை அவ்வி காரையின் இரண்டாவது விகாரைப் பொறுப்பாளராக உள்ளார்.



## 02. ஆளுமைகள்

### 2.1. சர்வமதகுரு



சைவசமய பூசகராக இருந்தபோது சர்வமத குருமார் சங்கத்தில் இந்துமத குருவாகத் திகழ்ந்தார். சந்திரிக்கா அம்மையார் சனாதிபதியாக இருந்த காலத்தில் இவர் சர்வமத குரு

சான்றிதழைப் பெற்றுள்ளார்.(படம் - 07) பின்னர் 2015ஆம் ஆண்டில் சர்வமத ஒன்றுகூடல், மக்கள் சந்திப்பு, அரச விழாக்களில் இந்துமத குருவாகக் கலந்துகொண்டார்.(படம் - 08)சர்வமத ஒன்றுகூடலின் போது வண.ஞானசாரதேரரையும் சந்தித்தார்.(படம் - 09,10)

### 2.2. பூசகர்



இந்திய குருகுலக் கல்வியை நிறைவு செய்த பின் ஹட்டன் டிக்கோயா வனராஜா பிள்ளையார் (இது நூற்றாண்டுப் பழமையானது.) கோவிலின் பூசகராக 09 வருடங்கள் பணியாற்றினார். (படம் - 11) அதன் பின் பலாங்கொடை பின்னவல ஸ்ரீ கருமாரி அம்மன் கோவிலின் பிரதான பூசகராக 05 வருடங்கள் கடமையாற்றினார்.

பூசகராக இருந்த போது பலதிருமணங்களை முன்னின்று நடாத்தியிருந்தார்.மக்களைப் பல வழிகளில் சமயப் போதனைகளை எடுத்துக்கூறி நல்வழியின்பாற் ஆற்றுப்படுத்தினார். இதனால் இவருக்கு ஸ்ரீ கருமாரி அம்மன் தேவஸ்தானத்தின் ஆலய பரிபாலன சபையால் 2013ஆம் ஆண்டு 'ஆலய இறைப்பணி சேவைக்கான நற்சான்றிதழ்' வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.(படம் -12) கும்பாபிஷேகத்தினை முன்னின்று நடாத்தியமையால் அதே ஆலயத்தால் 2012ஆம் ஆண்டு 'இளஞ்சுடர்' பட்டம் சூட்டப்பட்டது.(படம் - 13)

### 2.3. கவிஞர்



இவர் தமிழ்க் கவிதை புனைபவராகவும் இருந்துள்ளார். மலையகத்தின் அழகு, இயல்பாக இயற்கை மீது கொண்ட விருப்பு என்பன இவரைக் கவிபாட வைத்தது. பல கவிதைப் போட்டிகளில் கலந்துகொண்டுபரிசில்களையும் பெற்றிருந்தார். சான்றாக தேசிய இலக்கிய விழா 2016 இல் ‘மலை அன்னையின் இயற்கை அழகு’ என்ற தலைப்பில் திறந்த பாடல் ஆக்கப் போட்டியில் கலந்து இரண்டாம் இடத்தைப் பெற்றமையைக் குறிப்பிடலாம். தேசிய 2016இல் நடைபெற்ற தேசிய இலக்கிய விழாவில்'மலை நாட்டின் சுபாவம்’ என்ற தலைப்பில் திறந்த கவிதைப் போட்டியில் முதலாம் இடத்தையும் பெற்றார்.

### 2.4. கலைஞர் (பரதநாட்டியம்)

இந்துக் கலைகளுள் ஒன்றான நடனக் கலையையும் கற்றார். குருவாக நடன ஆசிரியர் திருமதி. லலிதாம்பிகையைக் கொண்டதோடு அவரின் தலைமையில் அரங்கேற்றமும் செய்யப்பட்டது.

### 2.5. விக்கிரக அலங்காரம்

நித்திய, நைமித்திய, காமிய கிரியைகளின் போது விக்கிரகங்களை அழகுபடுத்துவதில் கைதேர்ந்தவர். இதனால் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தால் 2013 ஆம் ஆண்டில் 'அலங்கார வித்தகர்' பட்டம் கிடைக்கப் பெற்றமை குறிப்பிடத்தக்கது.மாலை கட்டுதல், சாத்துப்படி போன்ற வேலைகளிலும் தேர்ச்சி மிக்கவர்.

### 2.6. ஓதுவார்

குருக்களாக இருந்த சந்தர்ப்பத்தில் தேவார, திருவாசகங்களை முறைபட ஓதும் ஓதுவாராக விளங்கினார். திருவாசகத்திலும் சிவபுராணத்தை பக்திரசம் கனியப் பாட வல்லவர். ஹட்டன் வனராஜா பிள்ளையார் கோவிலில் இருக்கும் போது சகலகலாவல்லி மாலை போன்ற பக்திப் பனுவல்களையும் பாட வல்லாராகத் திகழ்ந்துள்ளார். மக்களையும் பாடுவதற்குப் பழக்கியுள்ளார்.

### 2.7. மடப்பள்ளி வேலை


கோவில்களில் மடப்பள்ளியானது நைவேத்தியப் பொருட்களைத் தயார் செய்யும் இடமாகும். மடப்

பள்ளி வேலைகளில் கலந்து கொள்ளும் அவர் தயிர்ச்ச ாதம், புளிச்சாதம் என்பவற்றைத் திறம்படச் செய்வார். பிரசாதங்களான பொங்கல், கடலை, உழுந்து வடை போன்றவற்றையும் சுவையாகச் செய்ய வல்லவர்.

### 03. பௌத்த துறவறத்தின் பின் சைவ சமயப் பணிகள்

பௌத்த துறவறத்தின் பின்னரும் பல சைவ சமயப் பணிகளை வண.பொகவந்தலாவை ராகுல தேரர்; அவர்கள் ஆற்றி வருகின்றார். அவற்றைப் பின்வரு மாறு நோக்கலாம்.

#### 3.1.சைவ ஆலயங்களில் பிரசங்கங்கள்



**பொன்.ஜெயரூபன்(தே.க.நி),**
**அடியார் விபுலாநந்தா (உலக சைவ திருச்சபை- கனடா),**

**டாக்டர். (திருமதி)எஸ்.கேசவன்**
**இவர்களுடன் வண.பொகவந்தலாவை ராகுல தேரர்**

துறவியாகிய பின்னரும்வண.பொகவந்தலாவை ராகுல தேரர் இலங்கையின் சகல பாகங்களிலுமுள்ள சைவ ஆலயங்களுக்குச் சென்று வருகிறார். ஆலயப் பழைமை,அதன் வரலாறு என்பவற்றை அறியும் ஆர் வமுள்ளவராய்த் திகழ்கிறார். பௌத்தத்திற்கு முன்னரே சைவம் நிலவியது எனக் கூறும் இவர்சைவம் தாய்ச்;சம யம் என்கிறார். சைவம் மேன்மை பெற்றுவிளங்கும் இடங்களை பார்வையிடுவதிலும் தன் கவனத்தைச் செலுத்தி வருகிறார்.சான்றாக பொலநறுவைச் சிவ ஆலயத்தை பார்வையிடச் சென்றமையைக் குறிப்பிட லாம்.(படம் - 14)ஆலய தரிசனம் செய்வதோடு மட்டு மல்லாமல் ஆலயங்களில் சைவப் பிரசங்கங்களை ஆற் றுகின்றார். இவருடைய நோக்கம் மதம் மாற்றுவதல்ல. மனிதனை மனிதநேயத்தோடு வாழ வழிகாட்டுவதே. எனவே 'மாதா, பிதா, குரு, தெய்வம்','மனிதன் மனித னாக மனித தர்மத்துடன் வாழ வேண்டும்''தாய்மையின் மேன்மை''போன்ற தலைப்புக்களில் சைவ ஆலயங் களிலே சொற்பொழிவுகளை ஆற்றிவருகிறார்.

#### 3.2.பிரதோஷத்தில் சிவலிங்க அபிஷேகம்



பிரதோஷம் என்பது சிவனுக்குரிய விரதமாகும். இவ் விரத காலத்தில் சிவனை வழிபடுவது உகந்தது. இவ ரது விகாரையிலிருந்து இறக்குவானை என்ற கிராம மானது 25 கிலோ மீட்டர் தூரத்தில் அமைந்துள்ளது. அக்கிராமத்தில் உள்ளவர்கள் சைவ சமயத்தைப் பின்பற்றி வருபவர்கள். மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்கள். இவர்களது வறுமையை வைத்து சில கிருத்தவ மத போதகர்கள் அங்கு சென்று கல்வி யறிவற்ற அப்பிரதேச மக்களின் மனதினை மாற்றிய தோடு மதத்தையும் மாற்றினர்.இதனைக் கண்ணுற்ற வண.பொகவந்தலாவை ராகுல தேரர் அவ்விடத்திற்குச் சென்று சைவ மக்களுக்கு சைவ சமயம் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்தியதோடு சிவனுக்குரிய பிரதோஷ நன்னாளிலே அவ்வூரில் சிவனின் அருவுருவத் திருமேனி யான சிவலிங்கத்தை ஸ்தாபித்து சிவனுக்கு அபிஷேகம் செய்தமை இவரின் துறவறத்தின் பின்னதான சைவப் பணிகளில் குறிப்பிடத்தக்கதாகும்.

#### 3.3.நவராத்திரியைக் கொண்டாடுதல்

இந்துக்களுக்கே உரிய பண்டிகையான நவராத்திரி விரதமானது உலகவாழ் இந்துக்களால் உணர்வுபூர் வமாக அனுட்டிக்கப்படுகிறது. பௌத்த துறவியான இவர் விகாரையில் இருந்த வண்ணம் இவ் நவராத்திரி யைக் கொண்டாடியுள்ளார். அச்சந்தர்ப்பத்தில் வைக் கப்பட்ட முச்சக்திகளின் திருவுருவப் படத்தை தனது அறையிலே வைத்திருக்கின்றார்.



# சிங்கள மன்னன் பொறித்த தமிழ்க் கல்வெட்டு!

மட்டக்களப்புக்குத் தெற்கே 80 கிமீ தொலைவில் அமைந்திருக்கும் அழகான சிறிய கிராமம் திருக்கோவில். அல்லது, இலங்கையின் புகழ்பெற்ற சுற்றுலாத்தளமான அறுகம்பைக்கு வடக்கே 40 கிமீ தொலைவில் இது அமைந்திருக்கிறது. இவ்வூரின் கடலோரத்தில் அமைந்திருக்கும் திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயம், இலங்கையின் மிகப்புராதனமான கோவில்களில் ஒன்று. அதை மட்டக்களப்பின் முதற்பெரும் தேசத்துக் கோவில் என்பார்கள்.



திருகோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலுக்குள் நுழைந்து, நீங்கள் இடப்பக்கம் திரும்பினீர்களென்றால், உள்வீதி மதிலோடு இணைந்தபடி அடைத்துக் கட்டப்பட்டுள்ள ஓர் சிறிய அறையைக் காணலாம். எட்டிப்பார்த்தீர்களென்றால் அங்கு கட்டுமானப் பொருட்களும் சில விக்கிரகங்களும் இருக்கும். அவை கடந்த 2018இல் இடம்பெற்ற குடமுழுக்கின் போது அகற்றப்பட்ட, பின்னப்பட்ட விக்கிரகங்கள். அப்படியே இன்னும் கஷ்டப்பட்டு எட்டி அறையின் மேற்குப்புறமாக பார்த்தீர்களென்றால், மூலையில் தரைக்கு கொங்கிரீட் பரவி அதில் நடப்பட்டுள்ள கற்றூண்களையும் பலகைக்கற்களையும் காணலாம். உற்றுப்பார்த்தால் அவற்றில் தேய்ந்து போன எழுத்துக்களையும் பார்க்க முடி




எழுத்தாளர்

**துலாஞ்சன்**

உதவிப் பிரதேச செயலாளர், வெருகல்

யும். இன்று பண்டகசாலையாக பயன்படும் இந்த அறையில் நாட்டப்பட்டிருக்கும் ஒரு தூண் தான் தம்பிலுவில் கல்வெட்டு.


காலனித்துவ கால ஆவணங்களில் இலங்கையின் தொல்பொருட்கள், மரபுரிமை நகரங்கள், பாரம்பரியச் சொத்துக்கள் பற்றிய குறிப்புக்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் கிடைத்தாலும், அவை பற்றிய நவீன முறையிலான கற்கைகள், 1850களுக்கு பின்பே ஆரம்பமாகின. இந்தப் பின்னணியில், பிரித்தானியக் குறிப்புக்களில் திருக்கோணமலை மாவட்டத்திலும் பொலனறுவை மாவட்டத்திலும் அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறிப்பிடப்படும் தமிழ்க் கல்வெட்டுக்களைத் தவிர்த்தால்இ இலங்கைக் கல்வெட்டியலில் முதன்முதலாக விரிவாக ஆராயப்பட்ட தமிழ்க் கல்வெட்டு என்று தம்பிலுவில் கல்வெட்டைச் சொல்லலாம். இக்கல்வெட்டைக் கண்டறிந்தவர் பிரித்தானிய அலுவலர் ஹியூஜ் நெவில். கண்டறியப்பட்ட ஆண்டு 1885.

1847இல் பிறந்த ஹியூஜ் நெவில், தன் 17ஆவது வயதில் பிரித்தானிய நீதியரசரின் தனிப்பட்ட செயலாளராக இலங்கை வந்தவர். இலங்கையின் பல பாகங்களிலும் சிலோன் நிர்வாக சேவை எழுதுநர், மாவட்ட நீதிபதி, உதவி அரசாங்க அதிபர் போன்ற பதவிகளை வகித்த நெவில், மிகச்சிறந்த புலமையாளர். தொல்பொருளியல், கல்வெட்டியல், வரலாறு, இனவரைவியல், சமூகவியல், மானுடவியல், விலங்கியல், தொன்மவியல், புவியியல் என்று அவரது புலமைசார் பங்களிப்பின் பட்டியல் நீண்டது. சிங்களம், தமிழ், வேடர் மொழி என்பவற்றில் நல்ல சரளம் பெற்றிருந்த நெவில், தன் அறிவுசார் கண்டறிதல்களை, ‘தப்ரபேனியன்’ எனும் ஆய்வேடொன்றில் பிரசுரித்து வந்தார். அதில் தான் ‘சிலோனில் தமிழ்க் கல்வெட்டு’ என்ற தலைப்பில் வெளியாகியிருந்தது தம்பிலுவில் கல்வெட்டு.

இந்தக் கல்வெட்டு, திருக்கோவிலை அடுத்து அமைந்திருக்கும் தம்பிலுவில் கிராமத்தின் கண்ணகி அம்மன் கோவிலில் கிடைத்தது. 1885களில் மண்ணாலான ஓலைக்குடிசையாக இருந்த அந்த அம்மன் கோவிலின் ஒரு சுவரோடு இணைத்துக் கட்டப்பட்டிருந்தது இக்கல்வெட்டு. அதைப் பிரித்தெடுத்து சுத்தம் பண்ணிய நெவில், அதில் மயில் பொறிக்கப்பட்டிருந்ததைக் கண்டு, இது ஒரு முருகன் கோவிலுக்குரியது என்ற முடிவுக்கு வந்திருந்தார். எனவே அருகில் இருந்த திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி கோவிலுக்கு இக்கல்வெட்டு எடுத்துச் செல்லப்பட்டு வைக்கப்பட்டது. தற்போதும்இ இக்கல்வெட்டு திருக்கோவில் சித்திரவேலாயுத சுவாமி ஆலயத்திலேயே வைத்துப் பேணப்படுகின்றது.

தம்பிலுவில் கல்வெட்டு சுமார் ஐந்தடி உயரமான கற்றூண் ஒன்றாகும். அதன் ஒருபுறம் திரிசூலமும் மறுபுறம் மயிலும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. ஏனைய இருபக்கங்களிலும் முப்பத்தெட்டு வரிகளில் கல்வெட்டு பொளியப்பட்டிருக்கிறது. கல்வெட்டு வாசகத்தின் ஆரம்பத்தில் சூரியனும் சந்திரனும் பொறிக்கப்பட்டிருக்கின்றன. சூரியன் சந்திரன் உள்ளவரைஇ கல்வெட்டு சொல்லும் செய்தி நின்று நிலவவேண்டும் என்பது இதன் பொருள்.

## கல்வெட்டு வாசகம் இது தான்



ஸ்ரீ சங்கபோதி பற்மரான திறிபுவனச் சக்கிறவத்திகள் ஸ்ரீ விசயவாகு தேவற்கு ஆண்டு பத்தாவதில் தை மாதம் உய தியதிஇசிவனான சங்கரர்க் கோவிலுக்குக் கொடுத்த வோவில். இன்த தன்மத்துக்கு அகித்தம் சேதோனாகில் கெங்கைக் கரையில் காரம்பசுவைக் கொந்ற பாவத்தை கொள்ளக் கடவராகவும்’

‘ஸ்ரீசங்கபோதி வர்மரும் திரிபுவனச் சக்கரவர்த்தியுமான ஸ்ரீ விஜயபாகு தேவரின் பத்தாவது ஆட்சியாண்டில் வரு

கின்ற தை மாதம் இருபதாம் திகதிஇ சிவனான சங்கரர் கோவிலுக்கு வோவில் கொடுக்கப்பட்டது. இந்த அறச்செயலுக்கு யாரும் தீங்கு செய்தால் அவர்கள் கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தை அடைவாராக˜ என்பது இக்கல்வெட்டின் பொருள்.

இக்கல்வெட்டு கூறுகின்ற விசயவாகு தேவர் யார் என்பதில் பல வாதப்பிரதிவாதங்கள் எழுந்துள்ளன. ஆய்வாளர் அமரர்.க.தங்கேஸ்வரி அவர்கள் இக்கல்வெட்டு சொல்லும் விசயவாகுஇ பதின்மூன்றாம் நூற்றாண்டில் இலங்கை மீது படையெடுத்த கலிங்க மாகோன் என்கின்றார். பல்கலைக்கழக வரலாற்றறிஞர்களான சி.பத்மநாதன்இ கா.இந்திரபாலாஇ ஏ.வேலுப்பிள்ளைஇ செனரத் பரணவிதான உள்ளிட்டோர் இவனைக் கோட்டை மன்னன் ஆறாம் விஜயபாகு (1510 1521) என்கின்றனர். பெற்ற தந்தையை மூன்று மகன்மார் மண்ணாசைக்காகக் கொலை செய்த ˆவிஜயபாகு கொள்ளை˜ என்ற துயர் மிகுந்த வரலாற்றுச் சம்பவத்தில் கொல்லப்பட்டவன் இவனே.

கல்வெட்டைப் பொறித்தது ஆறாம் விஜயபாகு தான் என்பதற்கு பேராசிரியர் பத்மநாதன் கொடுக்கும் வலுவான ஆதாரங்கள் இரண்டு. ஒன்றுஇ இக்கல்வெட்டு பொலனறுவைக் காலக் கல்வெட்டுக்கள் போல் மன்னனை கிரந்தம் கலந்து ‘விஜயடீபாஹூ’ என்று குறிப்பிடாமல்இ அவன் பெயரைத் தமிழ்ப்படுத்தி ‘விசயவாகு’ என்று குறிப்பிடுகின்றமை. இதே மன்னனின் கொழும்பு அருங்காட்சியகத் தமிழ்க் கல்வெட்டும்இ இதே போல இவனை ‘விசயவாகு தேவர்’ என்றே அழைக்கிறது.

இரண்டாவது ஆதாரம் இக்கல்வெட்டின் வரிவடிவம். இன்றைய தமிழ் எழுத்துக்களின் வரிவடிவ வளர்ச்சி பெரும்பாலும் 16ஆம் நூற்றாண்டளவில் முற்றுப்பெற்றுவிட்டது. இன்றும் ஓரளவு எளிதாக வாசிக்கும் நிலையிலுள்ள இக்கல்வெட்டு 16ஆம் நூற்றாண்டுக்கு முந்தியதாக இருக்கமுடியாது என்கிறார் அவர். அந்த வாதங்கள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையே.

நூறாண்டுகளுக்கு முன் ˆஆழழெ பசயிட ழக டீயவவடிஉயடழய˜ எனும் நூலை (1921) எழுதிய கனகரெட்ணம் முதலியார்இ இங்கு தானம் கொடுக்கப்பட்ட வோவில் தனது காலத்தில் வேவில் என்று அழைக்கப்பட்டதையும்இ திருக்கோவிலுக்குத் தெற்கே சுமார் நான்கு மைல் தூரத்தில் அது இருப்பதையும் குறிப்பிட்டுள்ளார். நெவிலும் இப்படியே சொல்வதை அவரது குறிப்பில் உறுதிப்படுத்த முடிகின்றது.

ஆனால் இன்று வோவில் என்றால் என்னவென்று யாருக்குமே தெரியாது. இந்நிலையில்இ அதை இனங்காணக் கைகொடுத்தது 1695இல் வரையப்பட்ட ஒரு இடச்சு வரைபடம். அதில்இ திருக்கோவிலுக்குத் தெற்கே ஒரு நீர்நிலை வரையப்பட்டு, அது போவில் மடு என்றும்இ அதற்கும் தெற்கே ‘டீழறறடைடிணியவ வர’ போவில்பற்று என்ற இடமொன்றும் காட்டப்பட்டுள்ளன. அருகே இடச்சு மொழியில் றய வநச’ என்று எழுதப்பட்ட வரிகள் காணப்படுகின்றன. ‘தம்பிலுவில்: இங்குள்ள ஒரு பெரிய நீர்நிலை’ என்பது இதன் பொருள். எனவே தம்பிலுவில் கல்வெட்டில் சிவனான சங்கரர்க் கோவிலுக்கு தானம் கொடுக்கப்பட்ட வோவில் ஒரு நீர்நிலை என்பது தெரியவருகிறது. கோவிலுக்கு அல்லது கோவில் சார்ந்தோருக்கு, நீர்நிலைகளைஇ அல்லது அவற்றால் பாசனம் செய்யப்படும் வயல் வெளிகளைக் கல்வெட்டு பொறித்து தானம் கொடுப்பதுஇ அந்தக்கால வழக்கம்.

சங்கமன்கண்டி அருகே மனுநேய கயவாகு மன்னனால்இ முப்பத்திரண்டு மதகுகளுடன் இருபத்தாறு ஏரிகளை இணைத்து பெரும் ஏரி அமைத்து விவசாயத்துக்கு வழங்கப்பட்ட குறிப்பொன்றுஇ மட்டக்களப்புப் பூர்வ சரித்திரம் நூலிலும்

4 THE TAPROBANIAN. [OCTOBER, 1885.

## TAMIL INSCRIPTIONS IN CEYLON.

I propose to edit from time to time in this Journal such Tamil inscriptions as may be discovered in Ceylon. I now give one conveying land to the Sivanâna Sankâkara Kovil, now known as Thiru Kowil in the Batticaloa District. I propose to number such inscriptions consecutively to allow of easy reference.

No. 1.

This inscription is on two sides of a square stone post about five feet or so in length, but evidently broken off where it originally entered the ground. On the other sides are an elaborate Bhairava sûla, and a peacock vâhanam supporting the asthram, or emblem of the god. These will be described more fully in a description of the temple. I found this pillar built into the mud wall of a small Amman Kowil, in the adjacent village of Tambilivil, where it was arranged so as to exhibit the uninscribed side, with the Bhairava sûla or trident. I have since removed and erected it in the portico of the temple. The inscription runs :

(a) Sri Sañka Pothi Paruma Râṇa Thiṛipuvaṇas Sakkra-vaththikal Sri Viṣaya Vâku Thevarku âṇdu paththâvathil thâi mâtham 20 thiyathi

(b) Sivaṇâṇa Sañkâkara Koyilukku koduththa Vovila ithai thaṇmaththukku akitham se(y)thânâkil Keñkaik karaiyil kârâm pasuvaik konṛa pâvathaik kolla kadavârâkavum.

This must be translated :

On the twentieth day of the month of January of the tenth year of Deva Sri Wijaya Bâhu (of the family) of the Tri-bhuwana Chakravartis (descended from the) Paruma Râna Sri Sanga Bô, Bowila (Vovila) was given to the temple of Sivanâna Sankâkara. Should any one do anything in his power prejudicial to this, let him acquire the sin of killing a Kârâm cow on the banks of the Ganges.

NOTES.

Vovila is now called in Tamil Vêvil and is a tract of fields some four miles south of the temple, the Sinhalese name of which I have ascertained to be Bowila. Sivanâna Sankâkara was an ancient benefactor of the temple, which is dedicated to Kathirai-ândavan, or Kathiragam Deva, a form of Skanda. A Kârâm cow is literally one of the 'red' colour, or dun, but evidently was also the generic name of a peculiar breed.

With this inscription should be compared that of Sri Sanga Bo Sri Wijaya Bâhu at Dondra, published by Professor Davids in the *Journal R. A. S.* (Ceylon) 1870-71, dated Saka 1432, and in the fourth year of his reign. If the Bowila grant is by the same king, our grant must be of Saka 1438. It is, however, possible our grant is by Wijaya Bâhu VI. A.D. 1398 to 1410; and it may also be by Wijaya Bahu III. A.D. 1240 to 1267. Had our grant been by the Wijaya Bahu of Saka 1432, it is quite unlikely it would have omitted the Saka year.



காணப்படுகின்றது. இன்று குறித்த பகுதியில் உவர்நீரேரியாகக் காணப் படும் 'தாண்டியடிக் களப்பே' இந்த 'வோவில்' ஏரி ஆகலாம்.

ஒருவேளை கல்வெட்டுச் சொல் லும் 'சிவனான சங்கரர் கோவில்' என்பது இன்றைய தம்பிலுவில் கண்ணகி அம்மன் ஆலயத்தின் அமைவிடத்தில் இருந்து பின் அழிந்தும் போயிருக்கலாம். பேரா சிரியர்கள். கா.இந்திரபாலாவும் சி.பத்மநாதனும் இந்தச் சந்தேகத் தையே வெளிப்படுத்தியிருக்கிறார் கள். எனவேஇ கல்வெட்டில் மயில் பொறித்திருப்பதால், அதை முருகன் கோவிலுக்குரியதெனச் சொல்வது எத்தனை உசிதமானது என்பதை ஆராயவேண்டும். திருக்கோவில் முருகன் அப்போது மட்டக்களப்புத் தேசத்தின் பெருந்தெய்வம் என்ப தால், அவனால் காக்கப்படுவதைக் குறிக்கவும் மயில் பொறிக்கப்பட் டிருக்கலாம். மயிலை கோட்டை அரசின் அல்லது அப்போதைய மட்டக்களப்புச் சிற்றரசின் குலச்சி ன்னம் என்று கருதவும் இடமுண்டு.

ஆனால் இந்த ஊகத்துக்கு எதிரான இன்னொரு சான்றும் கிடைக்கிறது. திருக்கோவில் ஆலயத்தில் இன்று பேணப்படும் நான்கு கல்வெட்டுக் களில் ஒன்று சதுரப்பலகை வடி வில் கிடைக்கும் திருக்கோவில் கல்வெட்டு. 'திருக்கோவில் சித்திர வேலாயுதசுவாமி கோவில்' என்ற பெயரை முதன்முதலில் குறிப்பிடு கின்ற மிகப்பழைய ஆவணம் அது தான்.

'ஸ்ரீமத் சங்கபோதி வர்மரான திரிபுவனச் சக்கரவர்த்திகளான சிவஞான சங்கரிகள் ஸ்ரீ விசய வாகு தேவர்க்கு யாண்டு ௰வதில் தை மாசத்தில் திருக்கோயில் சி த்திரவேலாயுத சுவாமி கோவில்கு கிழக்கு கடல் குணர் மேற்கு...'என்ற வரிகளின் பின் அது சிதைந்திருக் கிறது. வரிவடிவம்இ கல்வெட்டு வாசகம்இ பொறித்த மன்னன் முதலிய பல விடயங்களிலும் தம் பிலுவில் கல்வெட்டை ஒத்த இக் கல்வெட்டில் வருகின்ற 'சிவஞான சங்கரிகள்'என்பதை தம்பிலுவில் கல்வெட்டில் வரும் 'சிவனான சங்கரரோடு' ஒப்பிடலாம்.

பேராசிரியர் பத்மநாதன் இதற்கு வேறுவிதத்தில் விளக்கமளிக்கி றார். சிவஞான சாகரி என்பது விஜயபாகு தேவரின் பட்டம் என்றும் கல்வெட்டைப் பொறித் தவர் சிவஞானசாகரி என்பதை, சிவஞான சங்கரி என்று தவறாகப் பொறித்துவிட்டார் என்றும் அவர் சொல்கிறார். தன் வாதத்துக் குத் துணையாக அவர் சொல்வ துஇ ஆறாம் பராக்கிரமபாகுவின் முன்னேஸ்வரச் சாசனமொன்று அம்மன்னனை 'சைவஞான மகோததி' என்று அழைப்பதாகும். மகோததிஇ சாகரம் இரண்டுமே பெருங்கடலைக் குறிக்கும். சிங்கள மன்னர்கள் பௌத்தம் சார்ந்த தானங்களில் 'சங்கபோதி' என்றும்இ சைவம் சார்ந்த கொடை களில் இப்படி 'சிவஞானப்பெருங் கடல்' என்றும் தம்மைக் குறிப்பிட் டிருந்தால்இ அதில் வியப்பதற்கு ஒன்றுமில்லை என்கிறார் அவர்.

இதில் குழப்பமூட்டுவது என் னவென்றால் தம்பிலுவில் கல் வெட்டை வாசித்த யாருமே திருக் கோவில் கல்வெட்டையும் சே ர்த்துப் படித்து இந்த இரு கல்வெட் டுகளிலுமுள்ள இந்த இரு ஒத்த செ ாற்களையும் ஒப்பிட்டுப் பார்த்த தில்லை. 'சங்கரி' என்று முடிகின்ற ஆண்பால் பெயர்களைக் கொண் டிருந்த மட்டக்களப்பு வன்னியச் சிற்றரசர்கள் பற்றி ஐரோப்பியர் குறிப்புகளில் காணக்கிடைக்கிறது. இக்கல்வெட்டுஇ அது பொறிக்கப் பட்ட காலத்தில் ஆண்ட கோட்டைப் பேரரசன் விஜயபாகுவையும்இ அவனுக்குக் கீழ் இருந்த உள்ளூர் மட்டக்களப்புச் சிற்றரசன் சிவஞான சங்கரியையும் குறிப்பிடலாம் என் பது ஒரு ஊகம்.

அல்லது தம்பிலுவில் கல்வெட்டி லுள்ள சிவனான சங்கரர் என்ப தையும் சிவஞான சங்கரி என்றே வாசித்துஇ அது ஒரே மன்னனின் பட்டமே என்று அமைதி காண லாம். இவ்வாறு வாசிப்பதே சரி என்றால்இ இரண்டு கல்வெட்டுமே சந்தேகமின்றி திருக்கோவில் சித்தி ரவேலாயுத சுவாமி கோவிலுக்கு ரியது தான் என்று உறுதிப்படுத்த முடியும்.

சரி, இந்தக் கல்வெட்டில் அப்படி என்ன முக்கியத்துவம் இருக்கிறது? வெறுமனே ஒரு நீர்நிலையை தானம் செய்வதைச் சொல்லும் ஒரு கல்வெட்டைக் கொண்டாட வேண் டியதன் அவசியம் தான் என்ன?

அவசியம் இருக்கிறது. இந்தக் கல்வெட்டின் முதலாவது முக்கி யத்துவம் ஒரு சைவக்கோவி

லுக்கு இந்தக் கொடையைத் தமிழில் பொறித்த மன்னன் விஜயபாகு எனும் சிங்கள அரசன் என்பது. இரண்டாவது முக்கியத்துவம்இ கோட்டை அரசனின் கை, கிழக்குக்கரையின் எல்லை வரை ஓங்கியிருந்தது என்பது.

போர்த்துக்கேயர் காலத்துக்குப் பிந்தைய ஆவணங்களின் படிஇ கீழைக்கரையின் மட்டக்களப்பு வன்னிமைச் சிற்றரசுகள் கண்டி அரசின் கீழ் திறைசெலுத்தி வரும் சிற்றரசுகளாகவே இருந்து வந்தன. அதற்கு முன் அவை என்னவாக இருந்தன என்ற விபரம் நமக்குக் கிடைக்கவில்லை. அந்த வரலாற்றைக் கட்டி எழுப்புவதற்குஇ தொன்மங்களின் தொகுப்பான மட்டக்களப்புப் பூர்வ சரித்திரத்தை மட்டும் நம்புவது நம்மைத் தவறாக வழிநடத்திவிடும்.

பொலனறுவை அரசு காலத்தில் கிழக்கு உரோகணமாக இருந்த மட்டக்களப்பு நாடுஇ முதலாம் விஜயபாகுவிலிருந்து ( 1072 -1110) மகா பராக்கிரமபாகு (1123-1186) வரையான மன்னர்களின் ஆட்சிக்குக் கட்டுப்படாமல் கிளர்ச்சி செய்து கொண்டே இருந்தது என்பதுஇ மகாவம்சத்திலிருந்து தெரிகிறது. பின்பு தெற்கே நகர்ந்த தம்பதெனியாஇ கம்பளை சிங்கள அரசுகளின் காலங்களில் இங்கு யார் ஆண்டார்கள் என்பது சரியாகத் தெரியவில்லை. நம் ஊகம் சரி என்றால்இ சோழராட்சியின் எச்சங்களான வன்னியர்கள் அப்போது சுதந்திரச் சிற்றரசர்களாக இங்கு இருந்து வந்தார்கள் என்று கொள்ளலாம்.

ஆனால் போர்த்துக்கேயக் குறிப்புகளில் ஒருதுப்புக்கிடைக்கிறது. கோட்டை அரசனுக்கானகட்டியத்தில்அவனதுஆளுகைக்குட்பட்டஇடங்கள்குறிப்பிடப்படும்போதுஇ அவற்றில் ஒன்று அவனை 'மட்டக்களப்பு அரசன்' என்று குறிப்பிடுகிறது. இந்தக் குறிப்பு கிடைக்கும் காலத்தில் கண்டி அரசு முற்றாக வலுப்பெற்று எழவில்லை என்பதால்இ அப்போது மட்டக்களப்பு சிற்றரசு கோட்டை அரசின் கீழ்



இருந்ததாக நாம் நம்பலாம். இந்த நம்பிக்கையை உறுதிப்படுத்த நமக்குக் கிடைக்கும் இன்னொரு சான்று தான் தம்பிலுவில் கல்வெட்டு.

கோட்டை அரசானதுஇ விஜய பாகுவின் மாயாதனு (சிங்களத்தில் மாயாதுன்னை) முதலிய மூன்று மைந்தர்களால்இ சீதாவாக்கைஇ இறைகமம்இ கோட்டை என்று மூன்றாகத் துண்டாடப்படுவதற்கு முன்புஇ அதன் கிழக்கு எல்லைஇ வங்காள விரிகுடா வரை நீண்டிருந்ததையே தம்பிலுவில் கல்வெட்டுச் சொல்கின்றது. இக்கல்வெட்டைப் பொறித்து குறைந்தது ஐந்தாண்டுகளுக்குள் விஜயபாகு மன்னன் கொலை செய்யப்படுகிறான். அப்போதைய கோட்டை அரசின் கிழக்கு அந்தத்தில் அவன் காலத்தில் இக்கல்வெட்டு பொறிக்கப்பட்டதற்கான காரணம்இ அரசியல் குழப்பங்கள் நிறைந்த அந்தக் காலத்தில்இ போர்த்துக்கேயருக்கோ தன் மக்களுக்கோ ஏதோ செய்தியைச் சொல்லத் தான் என்று தோன்றுகிறது. அதை இன்றுள்ள தலைமுறையினருக்கும் சொல்ல முயன்றுகொண்டிருக்கும் இந்த முப்பத்தெட்டு வரிகளைக் கொண்டாடுவதில் என்ன பிழை?

மாத்துறைக்கு அருகே தெவிநுவரையில் கிடைத்த சிங்களக் கல்வெட்டின் படி, ஆறாம் விஜயபாகு 1510இல் முடிசூட்டியிருக்கிறான். எனவே தம்பிலுவில் கல்வெட்டுக்கு இந்த 2020ஆம் ஆண்டோடு வயது 500 ஆண்டுகள் பூர்த்தியாகி விட்டது. இன்னும் திருத்தமாகச் சொன்னால் 2020 பெப்ரவரி மூன்றாம் திகதி. விசயவாகு தேவர்க்கு ஆண்டு பத்தாவதில் தை மாதம் 20ஆம் திகதி.

காற்றுப் புகாத ஒரு அறையில்இ கொங்கிரீட்டைக் கொட்டி அதில் இனிமேல் என்றுமே வாசிக்கமுடியாதபடி நட்டு வைத்துப் பாதுகாக்கிறோம் ஒரு பெருஞ்சொத்தை! அறம் மட்டுமல்லஇ அறச் செயலைப் பொறித்த சாசனமும் புனிதமானதே. 'இந்த தர்மத்துக்கு அஹிதம் செய்தானாகில் கெங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற பாவத்தை அடையக் கடவராகவும்' என்று இந்தக் கல்வெட்டு சபிப்பது யாரை? வீண்பெருமை மாத்திரமே பேசிக்கொண்டுஇ ஆனால் பெருமைக்குக் காரணமான பொக்கிஷங்களைக் கேட்பாரற்று குப்பையாகப் போட்டு வைக்கும் நம் ஒட்டுமொத்த தமிழ்ச் சமூகத்தையுமே அல்லவா?

# மணி ஐயர் என்னும் 'மணி பாகவதர்'

## ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்



**தியாக. மயூரகிரிக் குருக்கள்**
**யாழ்ப்பாணம்**

**யா**ழ்ப்பாணத்து வண்ணார்பண்ணையில் 1918ல் பிறந்தவர் ஸ்ரீ சிவசுப்பிரமணிய ஐயர்.

மகாசைவ மரபில், காசிவாசி செந்திநாதையர், தொல்காப்பியக் கடல் கணேசையர் வழி வந்தவர் இவர். இசைப்புலமையும் நடன, நாடக ஆளுமையும், கேட்டோர் வியக்கும் பேச்சாளுமையும் கொண்டவராக இவர் திகழ்ந்தார். தமிழ், சம்ஸ்கிருத, ஆங்கில மொழிப்புலமையும் கொண்ட ஐயரவர்கள் இல்வாழ்வில் இணைந்து கொண்டு தந்தையான போதும், ஒரு பிரபல சொற்பொழிவாளராகத் திகழ்ந்தார்.


இலங்கைக்கு அப்பால் மலேசியா, தமிழகம் என்று பல இடங்களிலும் தொடர்ச்சியாக ஐயரவர்களின் உரை நிகழ்ந்து வந்தது. மணி ஐயர் என்று அழைக்கப்பட்ட இவர்கள் இசையோடு கூடிய உரையாகிய கதாப்பிரசங்கத்தை பக்க வாத்தியங்களுடன் நிகழ்த்தும் ஆளுமைச் சிறப்பால் 'மணி பாகவதர்' என அழைக்கப்பட்டார்.

இவர்களது கதாப்பிரசங்கத்தை கேட்க பல நூறு மக்கள் பல மணி நேரம் காத்திருப்பராம். ஐயரவர்களது திருச்செந்தூரில் ஸ்கந்தசஷ்டி காலப் பிரசங்கம் மிகப்பிரசித்தி பெற்றது. ஐயரவர்கள் மதுரை திருஞானசம்பந்தர் ஆதீனம் சென்ற போது அங்கே துறவறம் மேற்கொண்டு 1966ல் 'ஸ்ரீ மத் சுவாமிநாத தம்பிரான்' என்ற பெயர் பெற்றார்.

1500 ஆண்டுகளுக்கு முன் திருஞானசம்பந்தப்பெருமான் மதுரைக்கு எழுந்தருளிய போதிருந்த மடமே அவரது பாரம்பரியமாக இன்றும் மதுரையாதீனமாக திகழ்கிறது.இந்த ஆதீன 233ஆவது சன்னிதானமான ஸ்ரீலஸ்ரீ சம்பந்த சரணாலய சுவாமிகள் துறையூர் அரசனின் தொழுநோயை விபூதியிட்டு நீக்கியவர்.

1865ஆம் ஆண்டு வரை மதுரை மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் கோயில் மற்றும் இராமேஸ்வரம் இராமநாதசுவாமி கோயில் ஆகியனவும் இந்த ஆதீன கட்டுப்பாட்டிலேயே சிறப்புற்றிருந்துள்ளன.

இராமநாதபுரம் பாஸ்கரசேதுபதி மகாராஜாவின் ( 1873- 1903) குருவாக இந்த ஆதீனசந்





நிதானங்களே திகழ்ந்துள்ளனர். மருதபாண்டியச் சகோதரர் இந்த ஆதீன திருஞானசம்பந்தர் எழுந்தருள வெள்ளித்தேர் சமர்ப்பித்துள்ளனர்.

அப்பொழுது (மணி ஐயர் காலத்தில்) மதுரையில், 291ஆவது பட்டம் சன்னிதானமாக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்ததேசிக பரமாசாரியர். அவர் பூர்வாசிரமத்தில் இலங்கை- கொழும்பில் வாழ்ந்தவர்.

இவர் 1955ல் உருவாக்கிய ஹிந்து தர்ம பிரசார சங்கம் செய்த பணிகள் பற்பல.. சைவ வைணவ பெரியவர்களை ஒன்றிணைத்து இந்து ஒற்றுமையை நிலைநாட்ட இவர்கள் பெருமுயற்சி செய்தார்கள்.

ஆரம்ப காலங்களில் மதுரை ஆதீனத்தில் திருஞானசம்பந்தர் வழி மகாசைவர்களே ஆதீன சன்னிதானமாக விளங்கி வந்தார்களாம். அந்த பாரம்பரிய கூறுகள் சில இன்று வரை அங்குள்ளன என்பர்.

எனவே சிவபெருமானின் திருவுளக் குறிப்பினை உணர்ந்த அப்போதைய மதுரை மகாசன்னிதானம் விரைவிலேயே, தம் குருவான 'சுவாமிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரயர்' என்ற நாமத்தை சூட்டி மணிபாகவதரை யாழ்ப்பாணத்து நல்லூரில் திருஞானசம்பந்தர் பேரில், சைவாதீனத்தை ஸ்தாபிக்கச்செய்தார்.

பல சவால்களுக்கு மத்தியில் நல்லை ஆதீனத்தை உருவாக்கி, முதலாவது குரு மகாசன்னிதானமாக ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் விளங்கினார். தொடர் இசை சொற்பொழிவுகளாலும், நூல் வெளியீடுகளாலும், ஆற்றுப்படுத்தல்களாலும் சன்னிதானம் தனித்தகைமை கொண்டு திகழ்ந்தார்.

ஈழத்தில் தமிழ்நாட்டு ஆதீன மரபுகளை ஒட்டி அமைக்கப்பெற்ற முதலாவது ஆதீனம் இதுவே! வேதிய மரபில் வந்த சன்னிதானம் நாவில் வேதமும் கீதையும் ஆகம செய்திகளும் திருமுறையும் புராண இதிகாசமும் யாவும் மடை திறந்த வெள்ளம் போல் இசையோடு வருவதை அனுபவித்தவர்கள் இன்றும் வியக்கிறார்கள்.

1981ல் மகாசமாதியடைந்த சன்னிதானம் அவர்களது குரு மூர்த்தம் நல்லூர் திருவீதியில் திகழ்கிறது. தற்போது குறித்த நல்லையாதீனத்தில் 2ஆவது குரு மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக பரமாசாரியர் விளங்கி வருகிறார்.

**சுவாமிநாத தேசிகர் திருவடிகள் வாழ்க!**



# மாதோட்ட நன்னகர்

ஈழத்திருநாட்டின் வடபுல மேற்குக் கரையில் சைவத் தமிழர்களின் புராதனத்தையும், தொன்மையையும் வெளிப்படுத்தும் அடையாளங்களில் மாதோட்ட நகரமும் அங்கு எழுந்துள்ள திருக்கேதீச்சர ஆலயமும் முக்கியமான வரலாற்றாதாரம் என்பதனை அறிதியிட்டுக் கூறமுடிகின்றது.

இந்தவகையில் மாதோட்ட நன்னகரமானது ஈழத்தின் மிகப் புராதன காலத்தில் சிறப்புற்று விளங்கிய துறைமுக நகரமாகும். அதாவது புராதன காலத்தில் ஏனைய இடங்களை விட துறைமுக நகரங்களே சிறப்புற்று காணப்பட்டன. வணிகக் கப்பல்கள் பல வந்து செல்லும் துறைமுகங்களை அண்டிய பகுதியில் பெருவணிக்கர்கள் குடியேறி, பெரும் வணிகமும் இடம்பெற்றமையால் செல்வச் செழிப்பு மிகுந்த இடங்களாக காணப்பட்டது.

இந்தவகையிலே மாதோட்டத்திலும் மாந்தைத்துறைமுகம் காணப்பட்டமையினால் இவ்விடம் பெரு நகரமாக காணப்பட்டமையினை வரலாற்றாதாரங்கள், தொல்பொருள் சான்றுகள், வரலாற்றுக் குறிப்புகள், கர்ணபரம்பரைக் கதைகள் என்பவற்றில் இருந்து அறிய முடிகின்றது.

அந்தவகையில் மாதோட்டத்தின் தோற்றம் பற்றி நோக்கும் போது கி. மு 3100 ஆண்டுகால மிகப் பழமை வாய்ந்தது. அந்தவகையில் கி. மு 3084 இல் இராவண மகாராஜன் வாழ்ந்து வந்தார். இம்மாதோட்டப் பெருந்துறை நகரில் இராவணன் மாமன் மயன் என்பவன் வாழ்ந்து வந்தான். அவனுடைய மகன் மகாதுவட்டா இங்குள்ள ஆலயத்தை வழிபட்டமையால் இவ்விடம் மகாதுவட்டா புரம் என அழைக்கப்பட்டதாகவும், அதுவே பின்னர் மாதோட்டம் என மருவி இன்றுவரை அழைக்கப்படுகிறது.

இம் மகாதுவட்டாபுரம் என்ற பெயர் ஆதி தொட்டு வழங்கிவந்து, பின்பு கி. மு 8 ஆம் நூற்றாண்டிலே திரிந்து மாதோட்டம் என்ற பெயர் மிகுதியாக வழங்கி வரலாயிற்று

மேலும் மாதோட்டம் என்ற பெயர் வரக் காரணத்தை நோக்கின்

இந்தப் பெருநிலப் பிரதேசம் மகா-திடல் அமைந்திருந்த பகுதியும், பெரிய தோட்டம் என்று அழைக்கப்பட்ட பெயர் மகாதோட்டம் என



**சைவத்தமிழ் வித்தகர்**
**சந்திரலிங்கம் றமேஸ்**
**ஆசிரிய ஆலோசகர்**

மாற்றப்பட்டது. மகா - தோட்டம் என்றிருந்தது மா- தோட்டம் என்று வைக்கப்பட்டது

மாதோட்ட மானது அருவியாற்றின் கிளை நதியான பாலாவி ஆறு பாய்ந்தோடி மாந்தைக் கடலுடன் சங்கமிக்கும் முகத்துவாரத்தின் பெருநிலப்பரப்பாகும். எனவே சிறந்த நீர்வளமும், நிலவளமும், ஒருங்கே அமையப்பெற்ற இடமாக காணப்படுகின்றது. இதனால் இங்கு செந்நெல் வயல்களும், மாமரம், வாழை, பலா என பல பயன்தரு மரங்களையும், வண்ணமலர்ச் சோலைகளுடைய பெரிய தோட்டங்கள் இங்கு காணப்படுகின்றமையினை அறிய முடிகின்றது. குறிப்பாக,

**மாவின் கனி தூங்கும் பொழில்**
**மாதோட்ட நன்னகர் ...... எனவும்,**
**மாவும், பூகமும், கதலியும் நெருங்குமா**
**தோட்டநன் னகர்........ எனவும்,**
**வாழை யம்பொழில் மந்திகள் களிப்புற**
**மருவிய மாதோட்டங்...... எனவும்,**
**வண்டு பண்செய்யு மாமலர்ப் பொழில் மஞ்ஞை**
**நடமிடு மாதோட்டம்......... எனவும்,**

சம்மந்தரும், சுந்தரரும் பாடுவதுல் இருந்து மாதோட்டம் இயற்கை வளம் நிறைந்த நீர்வளமும், நிலவளமும் ஒருங்கே காணப்பட்ட செழுமை மிகு இடமாகும். இதனாலேயே மாதோட்ட நன்னகர் என இவ்விடம் அன்று நாயன்மார்களால் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் மாந்தைத் துறைமுகமும் இங்கு காணப்பட்டதனால் ஏராளமான கப்பல்கள் வந்து செய்வதனால் சிறப்புற்று விளங்கும் வணிக பட்டினமாகவும் காணப்படுகின்றது. இதனை வங்கம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர் ....... எனவும்,

வையம் மலிகின்ற கடல் மாதோட்ட நன்னகர் ..... எனவும், சுந்தரமூர்த்தி நாயனார் பாடுவதில் இருந்தும் அறிய முடிகிறது. குறிப்பாக மாதோட்டத்துக்கு அண்மையில் வங்காலை என்னும் ஓர் கிராமம் உள்ளது. இது ஆரம்ப காலத்தில் வங்கம் - கப்பல், காலை- தங்குமிடம், என பொருள் கொள்ளப்பட்டு, கப்பல்கள் தயங்குகிற இடம் என்பதனாலே இது வங்காலை எனப் பெயர் பெற்றது.

மாதோட்ட துறைமுகத்தில் கடல் வாணிபம் மாசந்தை போல் முதன்மை வர்த்தக கேந்திர நிலையமாக விளங்கிற்று மா- பெரிய, சந்தை- பொருள்களை விற்றலும், வாங்கலுமான பரிவர்த்தனை நிகழுமிடமாக இத்துறைமுகம் விளங்கிற்று. இதனால் மாதோட்ட நகர் மாந்தை நகர் எனவும் பெயர் பெற்றது.

இவ்வாறு நிலவளமும், நீர்வளமும், வணிகமும் இடம்பெற்றமையாலும் சிவன் திடமாய் உறைகின்ற திருக்கேதீஸ்வரம் என்ற பாடல் பெற்ற சிவத்தலமும், பாவம் வரையறுக்கும் பாலாவி தீர்த்தமும் காணப்படுகின்ற புண்ணிய புராதன இடமாக மாதோட்ட நன்னகர் காணப்படுகிறது.





# வானவன் மாதேவி ஈச்சரம்

தகவல் :–
வித்தியா கலாபமணி
கீர்த்திஸ்ரீ. எஸ்.ரமேஸ்



பொலநறுவையில் (ஜனநாதபுரம்) பெருநகரமாக விளங்கும் மன்னம்பிட்டியில் மகாவலி கங்கைக்கு அருகாமையில் வரலாற்றை மெய்ப்பிக்கும் வண்ணம், வானவன் மாதேவி ஈச்சரம் காட்சியளிக்கிறது.

இராஜராஜசோழச் சக்கரவர்த்தியின் மனைவியும், இராஜேந்திர சோழனின் தாயுமாகிய வானவன் மாதேவி இறந்த பின்னர் அவர் நினைவால், இராஜேந்திர சோழனால் கட்டப்பட்ட சிவன் ஆலயமாகும். தஞ்சை பெரிய கோயில் கட்டப்பட்ட பின்னர், அடுத்த கோயிலாக வானவன் மாதேவி சிவன் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இதற்காக சகல கட்டிடக் கலைஞர்களும் இந்தியாவிலிருந்தே வரவழைக்கப்பட்டனர்.

இவ் ஆலயத்தில், 1000 வருடங்கள் பழமைவாய்ந்த கருவறையில் லிங்கம், பலிபீடம், நந்தி என்பன இன்றும் அருள்பாலித்து வருகின்றன.

இராஜேந்திரன் காலத்தில் கொண்டு வந்து குடியமர்த்தப்பட்ட தமிழ் மக்களின், வம்சாவளியினர் 1500 ற்கும் மேற்பட்ட குடும்பத்தினர் இன்று, சிறப்பான முறையில் தமிழ் மொழியை பாதுகாத்து வாழ்ந்து













வருகின்றனர். பொலநறுவைக்கு இதைவிட இன்னுமொரு சிறப்பு வரலாறும் இருக்கிறது.

கண்டியின் கடைசி தமிழ் மன்னன் கண்ணுசாமி என்னும், ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தான் பரிவாரங்களுடன் மட்டக்களப்புக்குச் செல்வதற்கு பொலநறுவைக்கு ஊடாகவே பாதை அமைத்து பயணம் மேற்கொண்டான். மட்டக்களப்பில் பல கோயில்களுக்கு தனது மந்திரிகளை அனுப்பி உதவிகளையும் திருப்பணிகளையும் இப்பாதையுடாக செய்து வந்தான். தற்பொழுதும் கம்பீரமாக விநாயகப்பெருமானை கோபுரத் தளமாகக் கொண்டிருக்கும் தேற்றாத்தீவு பிள்ளையார் கோயிலுக்கு கண்டி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கன் தன் பரிவாரங்களுடன் சென்று திருப்பணி வேலைகளில் ஈடுபட்டு, வழிபட்டு வந்தமை பொலநறுவைக்கு இன்னுமொரு சிறப்பைத் தேடிக் கொடுத்தது. அது மட்டுமல்லாது, தனது பிரதிநிதிகளை தேற்றாத்தீவு பிள்ளையார் கோயிலுக்கு வருடா வருடம் அனுப்பி வைத்து மரியாதை செலுத்துவதை வழக்கமாகக் கொண்டிருந்தான்.

பொலநறுவை என்னும் ஜனநாதபுரம், வானவன் மாதேவி ஈச்சரத்தின் வரலாற்றுப் பதிவுகள் சிவஒளியின் அடுத்து வரும் இதழில் விரியும்.





# எழுந்து வரும் வரலாறு

## மதுரை நாயக்கர் வம்ச மாரியம்மன் கோவில்

**கண்டி இராச்சியத்தின் இறுதி மன்னன் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ( கண்ணுசாமி நாயக்கர்) வரலாறு "சிவஒளி" வைகாசி இதழ் தொடக்கம் மாதாந்தம் வெளிவரும், கண்ணுசாமி என்னும் தமிழ் மன்னனின் வீரம் செறிந்த ஆட்சி பற்றியும், காட்டிக்கொடுப்புகளாலும், தமிழன் என்னும் ஓர் காரணத்தினாலும் வெள்ளையரினால் வீழ்த்தப்பட்ட இராசதானி பற்றி ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் ஆறாவது தலைமுறை வெளிச்சத்திற்கு கொணடு வருகிறது.**







வித்தியா கலாபமணி
கீர்த்திஸ்ரீ. எஸ்.ரமேஸ்
(அகில இலங்கை சமாதான நீதிவான்)
அதிபர், குருணாகல் இந்துத் தமிழ் ம.வி,
மன்னர் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் சேயோன் மாரியம்மன் ஆலய பரிபாலன செயலாளர்.




குருணாகல் நீர்கொழும்பு வீதி மதுரை நாயக்கர் அரச வம்ச மாரியம்மன் கோவில் குருணாகல் மாநகரில் நீர்கொழும்பு வீதி அம்மன் கோவில் மாவத்தையில் அமைந்துள்ள ஆலயமே மதுரை நாயக்கர் அரச வம்ச மாரியம்மன் கோவில். இந்த ஆலயம் 1903 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டது. முக்கியமாக இலங்கை இறுதி மன்னர் ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் (கண்ணுச்சாமி நாயக்கர்) வம்சத்தவர்களால் அமைக்கப்பட்டு இன்று வரை அந்த வம்சத்தவர்களால் பரிபாலிக்கப்பட்டு வருகின்றது.

இந்த ஆலயத்தை உருவாக்கியவர் ஸ்ரீ விக்கிரம ராஜசிங்கனின் பேரனான பெருமாள் நாயக்கர் ஆவார். இந்த ஆலயத்தை




உருவாக்கியமைக்கு சுவையான கதையொன்று உள்ளது.

1903 ஆம் ஆண்டு இன்றைக்கு 117 வருடங்களுக்கு முன் பெருமாள் நாயக்கருக்கு மகள் ஒருவர் பிறந்துள்ளார். அவருக்கக மாரியம்மா எனப் பெயரிட்டார். மிகுந்த மகிழ்வுற்ற அவருக்கு ஒரு பேரிடி காத்திருந்தது. அந்தக் குழந்தையின் பார்வையில் ஏதோ குறைபாடு இருப்பதை அவரால் கண்டு கொள்ள முடிந்தது.

மனமுடைந்து போனார் அவர். மூத்த பிள்ளைக்கு இந்த நிலையா என மனம் வருந்தினார். அந்த நாட்களில் வைத்தியம் இல்லை இறைவனே துணை என எண்ணினார். நாயக்கர் மதுரையைச் சார்ந்தவர்கள். மதுரை மீனாட்சி அம்மனிடம் வேண்டுதல் செய்தார். என் மகளுக்கு குறைபாடு தீர்ந்தால் குருணாகல் நகரில் கோவிலொன்றைக் கட்டுவதாக நேர்த்தி வைத்தார்.

தினமும் குழந்தையைக் கவனித்தார். கைகளால் ஒலி எழுப்பினால் நேராகப் பார்த்துக் கொண்டிருந்த அக் குழந்தை சிறிது நாட்களில் ஒலி வந்த திசையை நோக்கத் தொடங்கியது. அகமகிழ்ந்துள்ளார் பெருமாள் நாயக்கர். பிள்ளைக்கு ஒரு வயது கூட இல்லை ஆனால் தான் நினைத்தபடி கோவிலை அதே வருடம் எழுப்பினார். பெருமாள் நாயக்கரின் தம்பி முத்து நாயக்கர் ஆலய அலுவல்களைக் கவனித்தார்.

அது மட்டுமல்ல ஒவ்வொரு வருடமும் பெருமாள் நாயக்கர் மதுரை மீனாட்சியம்மன் ஆலய திருவிழாவுக்குச் சென்று பிரசாதம் கொண்டு வந்து ஆலயத்தின் முன் வைப்பார். அதைப் பெற அந்நாளில் பத்தர் கூட்டம் அலை மோதுமாம். பண்டைய நாட்களில் ஹஸ்திசைவபுரம் என அழைக்கப்பட்ட நதரம் குருணாகல்.

1970 களில் இந்த ஆலயத்தை வெளியார் சிலர் திருப்பணி செய்வதாகக் கூறி சொந்தமாக்கப் பார்த்தனர். இது 2010 வரை தொடர்ந்தது. 1969 வரை மாரியம்மா உயிர் வாழ்ந்தார். 1969 சரியாக விஜயதசமி தினத்தன்று தன் 66 ஆவது வயதில் உயிர் நீத்தார். அவருக்கு எட்டுப் பிள்ளைகள். வெளியார் இதை சொந்தமாக்க 2010 ஆம் ஆண்டுவரை முயன்றனர். வெள்ளையர்களுடனே பயமில்லாமல் போரிட்ட நாயக்கர் இவர்களுக்கா பயப்படுவார்கள்? 2011 இல் மீண்டும் தன்வாசமாகிக் கொண்டனர்.

மாரியம்மாவின் கடைசி மகள் அமெரிக்காவில் வாழ்ந்து வருகின்றார். அவரும் உறவினர்களும் சேர்ந்து ஆலயத்தை புனரமைத்து 2017 04 09 ஆம் தினம் கும்பாபிடேகம் நடைபெற்றுள்ளது. இன்று இது புதிய கோவிலாக உருவாகியுள்ளது. தினமும் 3 நேரப் பூசை நடைபெறுகின்றது. 1903 ஆம் ஆண்டில் இருந்து இதுவரை 117 வருடங்களாக நூற்றாண்டைக் கடந்து மாரியம்மன் அருளாட்சி புரிகின்றார். இன்று மன்ன ஸ்ரீ விக்கிரம இராஜசிங்கனின் 6 ஆம் வம்சத்தினர் ஆலயத்தைப் பரிபாலிக்கின்றனர்.

**தொடர்ந்து வரும்....**

# புதியதோர் உலகம் செய்வோம்



அர்த்தமுள்ள
இந்துமதம் – அதில்
ஆயிரம் ஆயிரம் அர்த்தங்கள்
அன்பேசிவம் அதுவே பலம்

தொன்னெறி அறங்கள்
துலங்கிடும் ஞான
உண்மைகள் அனைத்தும்
உணர்ந்து
அன்புடன் அருளும்
அமைந்த நல்வாழ்வை
அறநெறி வழியில் அமைக்க
அனைவரையும் இணைத்து
முழுமை பெறும்
முயற்சியே வாழ்க்கை

## கேகாலை மாவட்டத்தில் வளரச்சி பெற்ற அறநெறிப் பள்ளிகள்



**திருமதி. கோமதி பாலசுப்பிரமணியம்**
**அறநெறிப்பள்ளி அதிபர்.**

எனும் அடிப்படையில் வரக்கா பொல பிரதேசத்தில் அழகிய விந் தியமலை அடிவாரத்தில் வடபத் திரகாளித் தாயும்இ அஷ்டலிங்க சிவனும் வீற்றிருக்கும் அற்புத ஆலயமாம் ஸ்ரீ வடபத்திரகாளி யம்மன் எனும் புனித ஸ்தலத்தின் கீழ் அமையப் பெற்றிருக்கும் ஸ்ரீ காளிகாம்பாள் அறநெறிப் பாடச ாலை கடந்த பத்து வருடங்களாக ஆன்மீகம் சிறக்கவும் ஆக்கத்தி றன்கள் வளரவும் ,அறப்பணி வளரவும், கல்வி நிலை உய ரவும், மிகச் சிறந்த முறையில் இயங்கி வருகின்றது. வருடாவ ருடம் தேசிய மட்ட போட்டிக ளில் ஆக்கத்திறன் போட்டிகளில் பரிசில்களை வென்று தனக் கென ஓர் தனி இடத்தை மிளிர வைத்துள்ளது. இது மட்டுமன்றி சமூகப் பணியாக சிறுவர் தினம், முதியோர் தினம் ,அன்னை யர் தினம் ,சித்திரை வருடப் பிறப்பு இதைப் பொங்கல் விழா, குரு பூசை தினங்கள் மற்றும் வைத்திய சேவைமுகாம் எனப் பலவித செயற்பாடுகளையும் சிறந்த முறையில் திட்டமிட்டு நடாத்தி, பள்ளிக்குச் சென்று பாடம் கற்காதவர்களைக் கூட பரந்த உலகில் பல பாடங்களைக் கற்கத் தூண்டி,அனைவரையும் கௌரவித்து புத்துணர்வூட்டு வதோடு,ஆலயத்தை மைய மாகக் கொண்டு வாராவாரம் அன்னதானப் பணிகளையும் மிகச் சிறந்த முறையில் ஆற்றி வருகிறது. இவ் அறநெறிப் பாட சாலைக்கு திருமதி. கோமதி பால சுப்பிரமணியம் ஆகியநான் அதி பராக பணியாற்றுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.



**சிறிய செயல்களை உண்மையுடன் செய்தால் பெரிய செயல்களை செய்ய வாய்ப்பு தேடிவரும்**

என்பது போல, ஸ்ரீ காளிகாம்பாள் அறநெறிப் பாடசாலையின் அளப்பறிய அறப்பணியின் தனித்துவச் சிறப்பால் கேகாலை மாவட்ட அனைத்து அறநெறிப் பாடசாலைகளையும் ஒன்றிணைக்கவும், கிராமப்புறங்களில் புதிய அறநெறிப் பாடசாலைகளைகளை ஆரம்பிக்க வழிகாட்டி பலவித உதவிகளை வழங்கவும் இகேகாலைமாவட்டஅறநெறபாடசாலைகளின் ஒன்றியத்தின் தலைவராகவும் பணிசெய்ய இறைவன் துணைபுரிந்துள்ளான்.

முகவரி இல்லாதகடிதம் குறிப்பிட்ட இடம் போய் சேராதுஎன்பதற்கு இணங்க கேகாலை மாவட்ட அனைத்து அறநெறிப் பாடசாலைகளையும் வளர்த்தெடுப்பதற்காக இசெயலில் தூய்மையும் நேர்மையும் கொண்டு ,யானையின் பலம் தும்பிக்கைஇமனிதனின் பலம் நம்பிக்கை என்பதற்கிணங்க ஒன்று பட்டு கேகாலை மாவட்ட அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியம் அமைக்கப்பட்டு இன்று பலநல் உள்ளங்களின் உதவியோடு,

**''அன்பர் பணிசெய்ய எனை ஆளாக்கிவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பராபரமே''**

எனும் தாயுமானவர் கூற்றின் படி அறநெறிப் பாடசாலை மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் சமயஇசமூகஇகல்விஇகலைப் பணிகளைதிட்டமிட்டுநடாத்திவருகிறது.

**''எண்ணங்கள் நல்லவை ஆனால்,**
**செயல்கள் நல்லவை ஆகும்''**
**''திட்டமிடுவோம் செயற்படுவோம்,**
**வெற்றிபெறுவோம்''**

## கேகாலைமாவட்ட அறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்தின் திட்டங்கள்

1. **சமயப் பணி**
2. **கல்விப் பணி**
3. **சமூகப் பணி**
4. **கலை கலாச்சாரப் பணி**

என நான்கு வகையில் திட்டமிட்டுள்ளோம் சமயப் பணியெனும்போது, அறநெறிப் பாடசாலைகள் ஆலயங்கள், வீட்டில் சமயம் எனும் அடிப்படையில் திட்டமிடப்படுகின்றது. கல்விப் பணிஎனும் போது, சமயக் கல்வியை மட்டுமல்லாமல் தாய்மொழி,ஆங்கிலம்,கணிதம்,தொழில் நுட்ப அறிவு என்பவற்றையும் யாவருக்கும் பெற்றுக் கொடுக்க தீர்மானிக்கப்படுகின்றது.

சமூகப் பணியெனும்போது, உதவி தேவைப்படும் உள்ளங்களுக்கும் றோர், அநாதைகள் ,அகதிகள், நோயாளிகள் ஆகியோருக்கும் கல்வி, மருத்துவம்,தொழில், இருப்பிடம், உணவு, உடை என்பவற்றை பெற்றுக் கொடுக்கும் நோக்கில் திட்டமிடப்படுகின்றது. குலை ,கலாச்சாரப் பணிஎனும் போது, எமது இந்துப் பண்பாட்டு கலை ,கலைச்சாரங்களை சிதைய விடாமல் முழுமை பெற வழி வகுப்பதுடன ;,கிராமியகலைகள், இசை ,நடனம் ,வாத்தியம்,பண்ணிசை,என்பனவற்றையும் வளர்த்தெடுக்கும் முகமாக தீர்மானிக்கப்படுகின்றது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட திட்டங்கள் யாவும் செவ்வனவே செயல்களாக மலர்ந்து, கேகாலை மாவட்டம் எங்கும் மணம் கமழ உதவும் உள்ளங்களுக்கு நேசக்கரம் நீட்டி, மனஉறுதி இருந்தால் உலகம் உனது காலடியில் என்றவாறு ,புதியதோர் உலகம் செய்யபுறப்படுவோமா? புதுமைகாண்போமா?

**நல்லன எண்ணுதல் வேண்டும்**
**எண்ணியது முடிதல் வேண்டும்**
**திண்ணிய நெஞ்சம் வேண்டும்**
**தெளிந்தநல் அறிவும் வேண்டும்**
**என்ற பாரதியார் கூற்றுக்கிணங்க**

கேகாலை மாவட்டஅறநெறிப் பாடசாலைகள் ஒன்றியத்தின் ஊடாகமேலும் பலபல அறப்பணிகளை செய்ய ஆண்டவன் துணைபுரிவாராக!

மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

# இறையும் இசையும்

## மெய்கண்ட சாத்திரங்கள் கூறும் வாழ்வியற் தத்துவங்கள்








"இளங்கலைமணி" சுரேந்திரா– நரேந்திரா
போதனாசிரியர் (வாய்ப்பாட்டு)
நடன, நாடகத்துறை,
சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம்,
கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை.


### முன்னுரை:

இறைவழிபாடுகளில் மனிதன் தன்னை ஈடுபடுத்திக் கொண்டு அன்றாட கருமங்களை மேற்கொள்கிறான். அவனது பழக்கவழக்கங்கள், இறை நம்பிக்கைகள் என்பவற்றை அறநூல்களும், அறம் சார்ந்த இலக்கியங்களும் அவனுக்குப் போதித்துக் கொண்டே இருக்கின்றன. அந்த வகையில் வாழ்விற்கு வழிகூறும் நூல்களாக மெய்கண்ட சாத்திரங்களும் விளங்குகின்றன. மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கு ஆகும். அவை திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார், சிவஞான போதம், சிவஞான சித்தியார், இருபா இருபஃது, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினா வெண்பா, போற்றிப்பஃறொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மை நெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்பனவாகும்.




மெய்கண்ட சாத்திரங்கள் இறைவனையும், இறைத் தத்துவங்களையும் நமக்குக் கற்றுத்தருகின்றன. வாழ்வியற் கூறுகளையும், தத்துவங்களையும் எமக்கு அறிவுறுத்துகின்றன. சைவ சித்தாந்த சாத்திரங்கள் பதினான்கு ஆகும். தமிழர்களின் தொன்மை மிகு தத்துவங்கள் எனப் போற்றப்படுகின்றன இந்த சாத்திரங்கள். 12ம் நூற்றாண்டில் இரண்டு சாத்திரங்களும், 13ம் நூற்றாண்டில் நான்கு சாத்திரங்களும், 14ம் நூற்றாண்டில் எட்டு சாத்திரங்களும் தோற்றம் பெற்றன.

சைவ சித்தாந்தத்தை விளக்கும் நூல்களில் சிறப்பானதாகக் கருதப்படுவது மெய்கண்டார் எழுதிய சிவஞானபோதம் ஆகும். இதனுடன் சேர்த்து பல

ஆசிரியர்களால் எழுதப்பெற்ற 14 நூல்கள் சைவ சித்தாந்த தத்துவ விளக்க நூல்களாகும். இவற்றுள் தலையாய சிவஞானபோதத்தைத் தழுவி இவை மெய்கண்ட சாத்திரங்கள் என அழைக்கப்பட்டன.

**உந்தி களிறு உயர் போதம் சிந்தியார்**
**பிந்திருபா உண்மை பிரகாசம் – வந்தவருட்**
**பண்புவினா போற்றிக்கொடி பாசமிலா நெஞ்சுவிடு**
**உண்மை நெறி சங்கற்பமும் முற்று**

என வரும் வெண்பா குறிக்கிறது.

**பதினான்கு சாத்திரங்களும்**
**அவற்றினை இயற்றியோர்களும்**

1. திருவுந்தியார் – திருவியலூர் உய்யவந்த தேவ நாயனார்
2. திருக்களிற்றுப்படியார் – திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார்
3. சிவஞானபோதம் – மெய்கண்ட தேவ நாயனார்
4. சிவஞானசித்தியார் – திருநறையுர் அருள்நந்தி தேவ நாயனார்
5. இருபா இருபஃது – அருள் நந்தி சிவாச்சாரியார்
6. உண்மை விளக்கம் – திருவதிகை மனவாசகங்கடந்தார்
7. சிவப்பிரகாசம் – உமாபதிசிவாச்சாரியார்
8. திருவருட்பயன் – உமாபதிசிவாச்சாரியார்
9. வினாவெண்பா – உமாபதிசிவாச்சாரியார்
10. போற்றிப்பஃறொடை – உமாபதிசிவாச்சாரியார்
11. உண்மைநெறி விளக்கம் – உமாபதிசிவாச்சாரியார்
12. கொடிப்பாட்டு – உமாபதிசிவாச்சாரியார்
13. நெஞ்சுவிடுதூது – உமாபதிசிவாச்சாரியார்
14. சங்கற்ப நிராகரணம் – உமாபதிசிவாச்சாரியார்

**திருவுந்தியார்**

மெய்கண்ட சாத்திரங்கள் பதினான்கினுள் முதலாவதாக வைத்துப் போற்றுப்படுவது திருவுந்தியாராகும். இந்நூலை இயற்றியவர் திருவியலூர் உய்ய வந்த



தேவ நாயனார் ஆவார். இவர் இந்நூலின் 45 செய்யுட்களில் தனது அனுபவத்தை கூறுகின்றார். அவர் கடவுள், உயிர், உலகம், என்னும் முப்பொருளின் இலக்கணத்தையும் பயன்களையும் அவற்றை அடையும் நெறிகளையும் பற்றிக் கூறுகிறார். இந்நூல் கடவுளின் தன்மை செயல் அருள் என்பவற்றைச் சிறப்புறக் கூறுகின்றது. அதாவது கடவுள் எல்லாம் கடந்தவர், அருள் வடிவானவர்,ஐந்தொழில்களைச் செய்பவர் எனக் கூறுகின்றது. மேலும் இறைவனுக்கும், உயிர்களுக்கும் இடையலான தொடர்பு பற்றியும் விளக்குகின்றது. உயிர்கள் பாசமாகிய மூன்று மலங்களால் கட்டுண்டவை, பாசம் நீங்கிய இடத்து இறைவனுடன் சேர்ந்து முத்திநிலை எய்தும் தன்மையது என உயிர் பற்றி விளக்குகின்றது.

**திருக்களிற்றுப்படியார்**

சித்தாந்த சாத்திர நூல்களுள் இரண்டாவதாக அமைந்துள்ள நூல் திருக்களிற்றுப் படியார் ஆகும். இதன் ஆசிரியர் திருக்கடவூர் உய்யவந்த தேவ நாயனார் ஆவார். இவர் திருவியலூர் உய்யவந்த தேவ நாயனாரின் மாணாக்கரின் மாணவர்.

நூறு வெண்பாக்களைக் கொண்ட இந்நூல் திருவுந்தியாரின் கருத்துக்களைத் தெளிவு படுத்தும் வகையில் அமைந்துள்ளமை சிறப்பாகும். தில்லையில், பொன்னம்பலத்திலுள்ள திருக்களிற்றுப் படியில் இந்நூல் வைக்கப்பட்ட காரணத்தால் திருக்களிற்றுப்படியார் எனப் பெயர் பெற்றது. இதில் அறுபத்து மூன்று நாயன்மார்களின் வரலாறுகளில் இருந்து உதாரணங்கள் கூறி வல்வினை, மெல்வினை ஆகிய சிவனறங்கள் என்பன



விளக்கப்பட்டுள்ளன. மேலும் சாத்திர விளக்கங்களை உவமைகள் மூலம் விளக்கியுள்ளமையும் காணலாம்.

இதில் இறைவன், ஆன்மா, இறைவனை அடையும் நெறி (சாதனம்), முத்தியடைந்த ஆன்மா என்பன பற்றி கூறப்பெற்றுள்ளது. சாதன நெறிகளாக சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நான்கும் விளங்குகின்றன. மெல்வினை வல்வினை எனும் இரு வகைச்சிவனறங்களுள், இறைவனை எண்ணி புசை செய்தல், தியானஞ் செய்தல், பாடுதல், ஆடுதல் என்பவை மெல்வினையைச் சார்ந்தது. சிறுத்தொண்டர் பிள்ளையை அரிந்தமை, சண்டீசர் தந்தையைக் கொண்றமை போன்ற செயல்கள் வல்வினையைச் சார்ந்தவை ஆகும். இறைவனை அணைந்தோரான அடியவர் இலக்கணம் பற்றியும் சிறப்பான எடுத்துக் காட்டுக்கள் மூலம் காட்டப்பட்டுள்ளன.

**சிவஞான போதம்**

பதினான்கு சாத்திரங்களுள் தலைசிறந்ததாக வைத்து எண்ணப்படுவது சிவஞானபோதமாகும். இதில் சித்தாந்த உண்மைகள் பற்றி விரிவாகவும் விளக்கமாகவும் அமைக்கப்பெற்றுள்ளது. இந்நூலை இயற்றியவர் திருவெண்ணெய் நல்லூரைச் சேர்ந்த மெய்கண்ட தேவராவார்.இவர் பரஞ்சோதி மாமுனிவரின் மாணாக்கர் ஆவார்.

இந்நூல் 12 சூத்திரங்களாலும் 81 வெண்பாக்களாலும் அமைக்கப்பெற்றது. இதன் உரைநடைப் பகுதி மேற்கோள்களையும், ஏதுக்களையும் கொண்டமைந்தது. இந்நூல் பிரமாணவியல், இலக்கணவியல், சாதனவியல், பயனியல் என்னும் நான்கு பகுதிகளாகப் வகுக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு இயலிலும் 3 சூத்திரங்கள் இடம் பெற்றுள்ளன.

பிரமான இயலானது பதி, பசு, பாசம் ஆகிய மூன்றும் உண்மையானவை என்று கூறுகின்றது. இந்நூலில் முதற்சூத்திரம் இறைவன் உண்மையானவர் என்றும், அவர் எல்லாவற்றையும் ஒடுக்கி மீளத்தோற்றுவிக்கும் ஆற்றலுள்ள சிவன் என்றும் கூறுகிறது. இரண்டாவது சூத்திரம் இறைவன் ஆன்மாக்களுடன் அத்துவிதமாக நின்று அவைகளுக்கு வினைப்பயனை ஊட்டும் முறையையும், ஆன்மாக்களுக்கு மல பந்தத்தால் பிறப்பு, இறப்பு நிகழும் முறையையும் கூறுகிறது. மூன்றாவது சூத்திரம் உயிரின் இயல்புகளைத் தானே அறிவதன்றி உணர்த்த உணர்வது உடற்காரணங்கள் கூடியிருப்பினும் அவற்றிற்கு வேறாய் நின்று அறிவது பற்றி கூறுகின்றது.

இலக்கண இயலின் முதலாவது சூத்திரம் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்பவை பற்றியும், அவை தொழிற்படும்போது அவற்றின் நிலை பற்றியும் விளக்கு கின்றது. இரண்டாவது சூத்திரம் உயிர்களின் தன்மை, இறையின் தன்மை என்பன பற்றிக் கூறுகின்றது. இவ்வியலின் இறுதிச் சூத்திரம் உயிர்ப் பொருள், உயிரற்ற பொருட்களின் இலக்கணம் பற்றிக் கூறுகின்றது.

மூன்றாம் இயலான சாதனவியலின் முதல் சூத்திரம் உயிரின் சிறப்பிலக்கணத்தைக் கூறுகின்றது. இரண்டாம் சூத்திரம் இறைவன் உயிர்களை ஆட்கொள்ளும் நிலைபற்றி விளக்குகிறது. அவ்வாறு இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட ஆன்மாவானது ஐந்தெழுத்தோதி ஞான நிலையில் நிற்றல் வேண்டும் என்று மூன்றாஞ் சூத்திரம் கூறுகின்றது.

இறுதியான பயனியலின் முதலாஞ் சூத்திரம் ஞானம் பெற்ற உயிர் இறையோடு நிற்றலால் பாசம் நீக்கம் பெறும் என்று கூறுகின்றது. அப்போது இறைவன் உயிர்களுக்கு முத்தியளிப்பான் என்கிறது. இரண்டாஞ் சூத்திரம். இவ்வாறாக முத்தி பெற்றோரின் இலக்கணம் பற்றி இறுதி சூத்திரம் கூறுகிறது.

**சிவஞான சித்தியார்**

இந் நூலைச் செய்தவர் அருள் நந்தி சிவாச்சாரியார்.இவர் சிவஞானபோத நூலாசிரியரான மெய்கண்ட தேவரின் மாணவர் ஆவார். சிவஞான போதத்தின் வழி நூலாகவே இந்நூல் அமைந்துள்ளது. இது சுபக்கம், பரபக்கம் என்னும் இரண்டு பிரிவுகளைக் கொண்டது. இதில் சிவஞானபோதத்தின் அவையடக்கப் பாடலை அடிப்படையாகக் கொண்டு தோன்றியது. பரபக்கமாகும். சிவஞான போதத்தின் 12 சூத்திரங்களையும் பன்னீரு அதிகாரங்களில் விரிவாகக் கூறுவது சுபக்கமாகும்.

பரபக்கம் 301 செய்யுட்களால் அமைந்தது இது ஆகமப்பிரமானங்களை ஒப்புக்கொள்ளாத சமயங்கள் பற்றியும் அவற்றின் பிரிவுகள் பற்றியும் விரிவாகவும் தெளிவா

கவும் கூறி அவை சித்தாந்தத்துடன் முரன்படுவதை மறுத்துச் சித்தாந்தத்தை நிலைநிறுத்தும் வகையில் அமைந்துள்ளது. சுபக்கம் 328 செய்யுட்களைக் கொண்டு அமைந்தது. இப்பகுதியில் சிவஞான போதப்பொருள் மட்டுமே விரிவாகக் கூறப்படுகின்றது.

**இருபா இருபஃது:-**

இந்நூலின் ஆசிரியர் சிவஞான சித்தியரை இயற்றிய அருள் நந்தி சிவாச்சாரியாராவார். இது தம் குருவாகிய மெய்கண்டாரை முன்னிலையாக்கி, வினாவுதல் போன்று, அவர் விடை கூறுதலர் போன்று சித்தாந்தக் கருத்துக்களை 20 செய்யுட்கள் மூலமாகக் கூறுகின்றது. ஆணவத்தின் எட்டு இயல்பையும் பற்றிக் கூறுகின்றது.

**உண்மை விளக்கம்**

இந்நூல் மெய்கண்டாரது மற்றொரு மாணவரான மனவாசகங்கடந்தார் என்பவர் இயற்றியது. முப்பத்தாறு தத்துவங்கள் பற்றியும், பதி, பசு, பாசம், இருவினை என்பனவற்றின் இயல்பு பற்றியும், ஐந்தெழுத்தின் உண்மை பற்றியும் இதில் தெளிவாக விளக்கிக் கூறப்பட்டுள்ளது. இவை பற்றி ஆசிரியர் விடையளித்து விளக்குவது போன்று 53 வெண்பாக்களால் அமைந்தது தவிர, முத்தி பற்றிக் கூறும் போது அதிலும் இறை உயிர், உலகம் எனும் 3 பொருள்கள் உண்டு என்கிறது.

**சிவப்பிரகாசம்**

மறைஞான சம்மந்தரின் மாணாக்கரான சிவாச்சாரியாரால் இயற்றப்பட்டது. இந்நூல் சிவஞானபோதத்தின் சார்பு நூலாக அமைந்துள்ளது. திருக்கயிலாய பரம்பரை பற்றியும் சைவ நூல்களின் இயல்பு பற்றியும் தீட்சை வகைகள் பற்றியும் இந்நூல் பாயிரம் எடுத்துரைக்கின்றது. அவையடக்கச் செய்யுளில் நூல்களை ஆராய்ந்து உண்மை தெரியும் முறை சிறப்பாகக் கூறப்பட்டுள்ளது.

இந்நூலாநது 100 செய்யுட்களாலானது. இதில் சைவ சித்தாந்த அத்வைதநிலை, ஆணவம், கன்மம், வினைப்பயன், மாயையின் பிரிவுகள் ஆகியன பற்றி விளக்குகிறது. மேலும் பிற சமயங்களின் முத்தி பேதங்கள் பற்றிக் கூறுவதுடன் அவற்றிற்கு மேலானதாக சித்தாந்த முத்தி விளங்குகின்றது என நிரூபிக்கின்றது.



**திருவருட்பயன்**

இந்நூல் உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய எட்டு நூல்களுள் இரண்டாவதாக அமைந்துள்ளது. 100 குறள் வெண்பாக்களால் இயற்றப்பட்டது. பதிமுதுநிலை, உயிரவை நிலை, இருள்மலநிலை, அருளதுநிலை, அருளுருநிலை, அறியுநெறி, உயிர் விளக்கம், இன்புறுநிலை, ஐந்தெழுத்து அருள் நிலை, அணைந்தோர் தன்மை என ஒவ்வொன்றும் பத்து குறள்கள் கொண்ட பத்து அதிகாரங்களாகப் பகுக்கப்பட்டுள்ளன.

பதிமுதுநிலை, உயிரவைநிலை, இருள்மலநிலை என்பன முறையே பதி, பசு, பாசம் உண்மைகளை விளக்குவன. அருளது நிலை திருவருளின் தன்மையையும், அருளுருநிலை ஆன்மாக்களுக்கு அருளும் பொருட்டு இறைவன் கொள்ளும் திருவுருவையும், அறியுநெறி ஆன்மாவானது உண்மைப் பொருளை (இறை) உணரும் நிலையையும் உயிர் விளக்கம் இறைவனை உணரும் போது ஆன்மா நான், எனது என்ற நிலை அற்று நிற்பதையும், இன்புறு நிலை ஆன்மா சிவப்பேற்றை அடையாத ஆன்மாக்கள் திருவைத்தெழுத்தை ஓதி முத்தி பெற முடியும் என்பது பற்றியும், அணைந்தோர் தன்மை சிவப்பேறு (முத்தி) அடைந்தோர் நிலையைப் பற்றியும் விளக்கிக் கூறுகின்றன.

**வினாவெண்பா**

உமாபதி சிவாச்சாரியாரின் சித்தாந்த அட்டகத்தில் மூன்றாவதாக காணப்படும் நூல் வினா வெண்பா ஆகும். இது 13 பாக்களால் ஆனது உமாபதி சிவாச்சாரியார் தம் குருவாகிய மறைஞான சம்மந்தரைமுன்னிறுத்தி, அவரிடம் சாத்திர உண்மைகளை கேட்டுத் தெளிவு பெறும் முறையில் ஆசிரியரே வினாவி தெளிவுபடுத்தும் வகையில் அமைக்கப்பட்டது.

இந்நூல் முறையே இருண்மலநிலை,



கேவல சகல சுத்த இயல்பு, ஞான தரிசனம், சுத்தத்துவ தரிசனம், திருவருட்தரிசனம், பாசநீக்கம், அத்துவித அநுபவம், பதிநிலைமை, விஞ்ஞானகலர் பிரளயாகலர் நிலை, பசு நிலைமை, சிவஞானப்பேறு, சிவபோகம் என்பன பற்றி பன்னிரு வெண்பாக்களில் கூறியதுடன் இந்நூலின் பயன் பற்றி இறுதி வெண்பாவின் மூலம் விளக்கும் வகையில் அமைந்துள்ளது.

### போற்றிப் பஃறொடை வெண்பா

இந்நூலாசிரியர் உமாபதி சிவாச்சாரியார் ஆவார். தொண்ணூற்றைந்து கண்ணிகளால் அமைக்கப்பெற்ற நூலாகும். இது உயிர் தொழிற்படும் முறையை உணர்த்தி தமக்குச் சிவஞானம் தந்து சிவாநுபவம் அளித்த குருவை பஃறொடை வெண்பாவினால் வாழ்த்திப் பாடியதாகும்.

இந்நூல் இறைவனின் பர நிலை, ஐந்தொழிலாகிய பொது நிலை, ஆணவத்தின் இயல்பு மாயா காரியங்கள், உயிர்களின் இன்ப துன்ப நிலை, இம்மை மறுமைப் பயன்கள் இருவினையொப்பு என்பன பற்றிக் கூறுகிறது. மேலும், சகலர், பிரளயாகலர், விஞ்ஞானகலருக்கு இறைவன் அருளும் முறை பற்றியும் உயிர்கள் சிவஞானம் பெற்றுச் சரியை முதலிய நெறிகளின் அமைந்த கலிவெண்பாவால் அமைந்தது மறைஞான சம்பந்தரையே சிவபெருமானாகக் கருதி வழிபடும் நூலாசிரியர் நிலையை இதில் காணலாம்.

உலகாயத்தம் முதலிய சமயங்களின் பொருந்தாமை, சித்தாந்த சைவத்தின் தனிச்சிறப்பு, சிவனின் முழுமுதற் தன்மை, சிவனுக்குரிய தசாங்கம் எனப்படும் பத்து உறுப்புக்களின் விளக்கம், சிவனின் அருட்கருணையால் உயிர்கள் அடையும் இன்பம், சிவன் திருவுலாக் கொண்டருளும் செயல், சிவன் கொலு வீற்றிருக்கும் சிறப்பு என்பன பற்றிக் கூறும் வகையில் அமைந்துள்ளது.

### உண்மை நெறி விளக்கம்

உமாபதி சிவாச்சாரியார் தசகாரியங்களான தத்துவரூபம், தத்துவ தரிசனம், தத்துவ சுத்தி, ஆன்மரூபம், ஆன்ம தரிசனம், ஆன்ம சுத்தி, சிவரூபம், சிவதரிசனம், சிவயோகம், சிவபோகம் என்பன பற்றி விரிவாக ஆறு திருப்பாட்டுக்களில் கூறுகின்றது. சிவப்பிரகாசம் என்ற நூலிலும் ஆசிரியர் தசகாரியங்கள் பற்றிக் கூறுகின்றார்.

### சங்கற்ப நிராகரணம்

உமாபதி சிவாச்சாரியார் இயற்றிய நூல்களில் எட்டாவதாகவும் இறுதியாகவும் வைத்துப் போற்றப்படுவது சங்கற்ப நிராகரணம் ஆகும். சங்கற்பம் - கொள்கை அல்லது கோட்பாடு, நிராகரணம் - மறுத்துரைத்தல். என்பதாம் அதாவது, மாயாவாதமும் அக்ச்சமயங்கள் பலவும் கூறும் கொள்கைகளை எடுத்துக் கூறி அவற்றை சித்தாந்தத்தின் அடிப்படையில் நிராகரிக்கும் வண்ணம் அமைந்தது இந்நூல்.

இந்நூலில் மறுக்கப்பட்ட சமயங்கள் மாயாவாதம், ஐக்கியவாதம், பாடாணவாதம், பேதவாதம், சிவசமவாதம்,ஈசுவர அவிகாரவாதம், நிமித்த காரண பரிணாமவாதம், வைவவாதம் (சுத்தசைவம்) என்பனவாகும்.

### முடிவுரை

திருவியலூரர் உய்ய வந்த தேவ நாயனார் முதல் உமாபதி சிவாச்சாரியார் வரை இயற்றிய மெய்கண்ட சாத்திர நூல்கள்நிறைந்த இறை,ஆன்ம தத்துவங்களையும்,மனிதாபிமான கருத்துக்களையும், இறை தத்துவங்களையும் எடுத்துக் கூறுகின்ற சாத்திர நூல்களாகப் போற்றப்படுகின்றன. மனித வாழ்வியலுக்கு அவை கூறும் தத்துவங்கள் மிகவும் இன்றியமையாததாக கொள்ளப்படுகிறது.

கடவுள், உயிர், உலகம், என்னும் முப்பொருளின் இலக்கணத்தையும், பயன்களையும், அவற்றை அடையும் நெறிகளைப் பற்றியும், கடவுளின் தன்மை, செயல், அருள் என்பவை பற்றியும், கடவுள் எல்லாம் கடந்தவர், அருள் வடிவானவர், ஐந்தொழில்களைச் செய்பவர் எனவும் இறைவனுக்கும், உயிர்களுக்கும் இடையிலான தொடர்பு பற்றியும், உயிர்கள் பாசமாகிய மூன்று மலங்களால் கட்டுண்டவை, பாசம் நீங்கிய இடத்து இறைவனுடன் சேர்ந்து முத்தி நிலை எய்தும் தன்மையது என உயிர் பற்றியும் திருவுந்தியார் முதல் சங்கற்பநிராகரணம் வரையான மெய்கண்ட சாத்திர நூல்கள் விளக்குகின்றது. எனவே மனிதனில் மனிதம் வாழவும், சனாதன தர்மமாகிய இந்து தர்மம் நிலைக்கவும், மனித வாழ்வியலுக்கு வழிகூறவும் மெய்கண்ட சாத்திரங்கள் எழுந்தன என்று கூறி வாழ்விற்கு வழிகூறும் மெய்கண்ட சாத்திரங்கள்எனும்இந்த ஆய்வுக்கட்டுரையை நிறைவு செய்கிறேன்.

### உசாத்துணைகள்

**தமிழ் இலக்கிய வரலாறு, ஜனகா பதிப்பகம் - 1997**



## தென்னிலங்கைக் காட்டில்

# சிவ, நாக வழிபாடு நிலவிய மகுல் மகா விகாரையும், அங்கு கண்ட சிவபூமியின் அரிய பொக்கிசமும்

**சி**வ பூமியின் சுவடுகளைத் தேடி தென்னிலங்கைக்கு பல தடவைகள் சென்றுள்ளேன். அப்படிச் சென்ற இடங்களில் ஒன்றுதான் மகுல் மகா விகாரை. இது யாள வன விலங்குகள் சரணாலயத்தின் தென்பகுதியில் அமைந்துள்ள தெனியஹெைன என்றழைக்கப்படும் அடர்ந்த காட்டின் மத்தியில் அமைந்துள்ளது.

அன்று காலை கதிர்காமத்தில் இருந்து திஸ்ஸமகராமைக்குச் சென்றேன். அங்கிருந்து கிரிந்தைக்குச் செல்லும் வழியில் யோதவெவ குளம் அமைந்துள்ளது. அந்த குளத்தில் அருகில் சித்துள் பவ்வைக்கு செல்லும் சந்தியிலிருந்து காட்டுக்குள் செல்ல வேண்டும்.

திஸ்ஸ மகாராமையில் இருந்து கிரிந்தைக்குச் செல்லும் பேரூந்தில் ஏறி யோதவெவ குளத்தின் அருகில் இறங்கினேன். யோதவெவ குளம் மிகவும் பழமை வாய்ந்த குளமாகும். பாதை ஓரத்தில் காணப்பட்ட குளத்தின் துருசு மிகப்பழமை வாய்ந்த கல்லில் அமைக்கப் பட்டிருந்தது. அவற்றைப் பார்த்து விட்டு குளத்திற்குச் சென்றேன். இப்பகுதிக்கு கிராம வாசிகள் சிலர் குளத்தில் குளித்துக் கொண்டிருந்தனர். நானும் குளத்தில் இறங்கி முகத்தைக் கழுவி விட்டு, அவ்விடத்தில் இருந்து 50 மீற்றர் தூரத்தில் உள்ள யோதவெவ சந்திக்குச் சென்றேன்.

இச்சந்தியில் இருந்து 13 கி.மீ தூரத்தில் மகுள் மகா விகாரை அமைந்துள்ளது.






**என்.கே.எஸ்.திருச்செல்வம்**
வரலாற்று ஆய்வாளர்
இலங்கை

அங்கு சிவபூமியின் சுவடுகள் உள்ளனவா என்பது பற்றியும், அங்குள்ள மலைக் குகைகளில் இந்து சமயம் தொடர்பாக பொறிக்கப்பட்டுள்ள பிராமிக் கல்வெட்டுக்கள் பற்றியும் ஆராய்ந்து வர வேண்டும் என்பதே அன்றைய எனது பயணத்தின் நோக்கமாக இருந்தது

காவந்தீசன் எனும் காக்கைவண்ணன் விகார மகாதேவியை திருமணம் முடித்த பின் தனது மாகம இராச்சியத்திற்கு வந்து கொண்டிருந்த போது இங்கு ஒரு நாள் தங்கி இருந்ததால் இவ்விடம்மகுள் மகா விகாரைஎனப் பெயர் பெற்றதாக இப்பகுதி மக்களால் கர்ண பரம்பரையாகக் கூறப்படுகிறது.

யோதவெவ சந்தியில் நின்ற முச்சக்கர வண்டி ஒன்றை மகுல் மகா விகாரைக்குச் சென்று பார்த்துவிட்டு மீண்டும் திஸ்ஸ மகாராமைக்கு வரவேண்டும் எனக் கூறி, அதற்கான தொகையைப் பேசிக்கொண்டு, மகுல் மகா விகாரை நோக்கிப் பயணமானேன்.

மூன்று கி.மீ தூரத்தில் உத்தகந்தர எனும் கிராமம் காணப்பட்டது. அதுவரை வீடுகள் காணப்பட்டன. அக்கிராமத்தின் முடிவு வரை நல்ல தார் பாதை அமைக்கப் பட்டிருந்தது. அதன் பின் வீடுகளைக் காணவில்லை. கிரவல் பாதையும், காடும் ஆரம்பமானது. கிரவல் பாதையில் முச்சக்கர வண்டி புழுதியைக் கிளப்பிக் கொண்டு பறந்தது. பற்றைகளும், சிறிய மரங்களும், இடையிடையே வெளிகளும் காணப்பட்டன. சுமார் 3 கி.மீ தூரம் வரை இந்த சிறிய காடு காணப்பட்டது. 7 வது கி.மீ தூரத்தில் இராணுவ முகாம் கடவை அமைந்திருந்தது. முச்சக்கர வண்டி சாரதி இறங்கிச் சென்று அங்கிருந்த இராணுவ சிப்பாயிடம் மகுல் மகா விகாரைக்குச் செய்வதாகச் சொல்லி, தனது வண்டியைப் பதிவு செய்து விட்டு வந்தார். முகாமை அடுத்து பாதையின் இரண்டு பக்கங்களிலும் யானைகள் வருவதைத் தடுக்க மின்சார வேலிகள் அமைக்கப் பட்டிருந்தன.

முச்சக்கர வண்டியின் சிங்கள


யாள காட்டில் உள்ள தாரா லிங்கம்

சாரதி இளைஞர் என்னோடு பேசிக் கொண்டே வந்தார். அவ்விடத்தில் இருந்து யாள காடு தொடங்குவதாகக் கூறினார். மகுல் மகா விகாரைக்கு இன்னும் 6 கி.மீ தூரம் உள்ளதாகவும் கூறினார். இந்த இடத்திற்கு தனியாக யாரும் வருவதில்லை, பேரூந்தில், அல்லது சொந்த வேன்களில் சித்துள்பவ்வைக்கு சுற்றுலா வருபவர்கள் மட்டுமே வருவார்கள். அபூர்வமாக சில வெள்ளைக் காரர்களைக் கூட்டிக் கொண்டு சென்றுள்ளேன். ஆனால் எமது நாட்டவர் என்றால் தனியாக வந்தது நீங்கள் மட்டும் தான் என்று கூறினார்.

பாதையின் இரு மருங்கிலும் சிறிய மரங்களும், உள்ளே பெரிய மரங்களும் காணப்பட்டன. ஜன சஞ்சாரமே இல்லை. மகுல் மகா விகாரை மற்றும் அங்குள்ள மலைக்குகைகள், கல்வெட்டுக்கள் பற்றிக் கேட்டேன். தனக்குத் தெரியும் என்றார். நண்பர்களோடு மூன்று தடவை இவ்விடத்திற்கு வந்து சென்றதாகச் சொன்னார். தான் எல்லா இடத்திற்கும் என்னைக் கூட்டிக் கொண்டு போய் காட்டுவதாகவும் கூறினார், கிரவல் பாதை சில இடங்களில் குன்றும், குழியுமாக இருந்தது. எனவே குறிப்பிட்ட வேகத்தில் தான் வண்டி சென்று கொண்டிருந்தது.

எனது கையடக்கத் தொலைபேசியில் கூகுள் மேப்பில் இடத்தைப் பார்த்துக் கொண்டே வந்தேன். சுமார் 20 நிமிடங்களின் பின் மலைப்பாங்கான அந்தப் பகுதியை அடைந்தோம். பாதையின் இடது பக்கம் மலைப் பாறைகள் தெரிந்தன. அதை அடுத்து இடையிடையே மரங்கள் அமைந்த வெளி காணப்பட்டது. அதுதான் மகுல் மகா விகாரை. சாரதி வண்டியை ஓர் மரத்தின் கீழ் நிறுத்தினார். இதுதான் மகுள்மகா விகாரை, காவந்தீச மன்னன் விகார மகாதேவியை திருமணம் முடித்த பின் மாகமைக்கு வரும்போது தங்கிச் சென்ற இடம் தான் இது எனக் கூறினார்.

வண்டியை விட்டு இறங்கிப் அந்த இடத்தை நோட்டமிட்டேன். இடது பக்கம் ஓர் சிறிய குளம், அதை அடுத்து சிறிய தூபி, முன்பக்கம் தட்டையான மலைப் பாறை, மலைப்பாறையின் முன் பக்கம் இரண்டு நீர்ச்சுனைகள், பாறையின் பின்பக்கம் சுமார் 100 அடி உயரமான மலை, வலது பக்கம் மலைச் சாரலில் உள்ள குகைகளுக்குச் செல்லும் பாதை.

முதலாவதாக மலைக் குகைகளுக்குச் சென்று பார்த்து விட்டு, பின்பு தூபிக்குச் செல்லலாம் என்று எண்ணினேன். வலது பக்கமாக குகைகளுக்குச் செல்லும் பாதை வழியே சாரதி கூட்டிச் சென்றார். சற்று உயரமான பாதை வழியே முன்னேறினேன். போகப்போக மயான அமைதியாகக் காணப்பட்டது. வண்டுகள் கத்தும் சத்தம் மட்டுமே கீ என்று கேட்டது. தூரத்தில் ஓர் கற்குகை தெரிந்தது. யானைகளின் எச்சங்கள் ஆங்காங்கே காணப்பட்டன. யானைகள் அதிகம் உலவும் இடம் அது.

ஆர்வத்துடன், உற்சாகமாக நடந்து சென்றேன். இப்படிப்பட்ட காடுகளுக்கு பல தடவை தனியாகச் சென்றுள்ளேன். தைரியமாகவும், உற்சாகமாகவும் இருக்கும், எள்ளளவும் பயம் இருக்காது. இறைவன் எனக்குக் கொடுத்த கொடை தான் தைரியம். நான் ஆய்வு செய்வதற்காக பயணத்

தைத் தொடங்கும் போது சிவசிவா என மனதில் நினைத்துக் கொள்வேன். சிவன் என் அருகிலேயே வருவது போல இருக்கும். பல இடங்களில் அந்த அனுபவத்தை உணர்ந்துள்ளேன். மிகவும் சுறுசுறுப்பாக காடுகளின் உள்ளே செல்வேன். மலைகளில் விரைவாக ஏறுவேன். இன்றும் அப்படித்தான். வேகமாக முன்னேறிக் கொண்டிருந்தேன். முதலாவது குகையை அடைந்தோம். குகையின் மேற்பகுதியில் வெட்டப்பட்டிருந்த கற்புருவத்தின் கீழ் பிராமி எழுத்துக்களில் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது. முதலாவது கல்வெட்டைக்



கண்ட மகிழ்வோடு அதைப் புகைப்படம் எடுத்துக்கொண்டேன்.

மேலும் மேல் நோக்கிச் சென்றேன். அடுத்த கற்குகை தென்பட்டது. அதுதான் பிரதான பெரிய குகை. முன்பக்கம் மண்சுவர் எழுப்பப் பட்டு, நடுவில் மரக்கதவு போடப்பட்டிருந்தது. மூன்று ஜன்னல்கள் இருந்தன. அவ்விடத்தில் நின்ற குரங்குகள் இரண்டு மரத்தில் தாவி ஏறி ஓடின. கதவைத் திறந்து கொண்டு உள்ள சென்றேன். வௌவால்கள் கீச்சிட்டுக் கொண்டு வெளியே பறந்தன. எலிகளின் சத்தம் கேட்டது. எலி, வௌவால், குரங்கு, காட்டுப்பூனை ஆகியவற்றின் எச்சங்களின் நாற்றம் மூக்கை முட்டியது. குகையின் உள்ளே புத்தபகவான் படுத்த நிலையில் சுதைச் சிலையாகக் காணப்பட்டார். பகவானை வணங்கி விட்டு வெளியே வந்தேன். அந்தக் குகையின் மேற்பகுதியிலும் பிராமிக் கல்வெட்டு காணப்பட்டது. இவையெல்லாம் உயரமான மலையின் அடிவாரத்தில் உள்ள கற்குகைகள்.

அங்கிருந்து மலையின் இடது பக்கம் உள்ள செங்குத்தான மலையடிவாரத்தில் இருந்த பற்றைகளையும், மரங்களையும் விலக்கிக் கொண்டு அடுத்த குகையை நோக்கி முன்னேறினேன். மலையின் செங்குத்தாத சாரலில் குழிவான இடத்தில் மூன்று தேன் கூடுகள் தொங்கிக் கொண்டிருந்தன. சற்று தூரத்தில் அந்தக் குகை இருந்தது. அதில் கல்வெட்டு உள்ளதா என ஆராய்ந்தேன். காணவில்லை. அதை அடுத்து அதன் பக்கத்தில் இன்னுமோர் குகை காணப்பட்டது. அந்தக் குகையில் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது. அவற்றைப் புகைப்படம் எடுத்துக் கொண்டிருந்தேன். திடீரென நாங்கள் வந்த பற்றைகளின் பக்கம் இருந்து சரசரவென சத்தம் கேட்டது.

யானையா? குரங்குகளா? சத்தம் வந்த பக்கம் இருவரும் திரும்பிப் பார்த்தோம். பின்னேரம் இரண்டு மணிக்குப் பிறகு யானைகள் நடமாடத் தொடங்குமாம். தூபியின் அருகில் உள்ள குளத்திற்கு யானைகள் நீர் குடிக்க வருமாம். சாரதி சென்னார். நேரத்தைப் பார்த்தேன். பகல் ஒரு மணி. யானைகள் வரத் தொடங்கும் நேரம். பற்றைகள் அசைந்தன. பார்த்துக் கொண்டே இருந்தோம். யனையுமல்ல, குரங்குகளுமல்ல, மனிதர்கள். மூன்று பேர் எங்களை நோக்கி வந்தார்கள்.

வாட்டசாட்டமான ஒருவர், சாதாரமான ஒருவர், மெலிந்த ஒருவர். அருகில் வந்தபோது மூவரில் ஒருவர் சாரதிக்கு பழக்கமானவர் என்று தெரிந்தது. நண்பர்கள் மூன்று பேரை சித்துள்பவ்வைக்கு கூட்டிக் கொண்டு வந்தாராம். த்ரீவீல் ஒன்று நிற்பதை பார்த்தார்களாம். ஆட்கள் இருக்கிறார்கள் எனவே நாமும் இந்தத் தூபியைப் பார்த்து விட்டு போவோம் என்று வந்தார்களாம். தூபி அருகில் யாரையும் காணவில்லை, ஆனால் தூரத்தில் மலையடிவாரத்தில் கதைக்கும் சத்தம் கேட்டு இந்தப் பக்கம் வந்தார்களாம்.

இவர் கொழும்பில் இருந்து வந்த மாத்தையா, அவரைக் கூட்டிக் கொண்டு வந்தேன் என சாரதி சொன்னார். மூன்று பேரும் என்னைப் பார்த்து சிரித்தார்கள். உடனே நான் அடுத்த பக்கம் இரண்டு குகைகள் இருக்கின்றன, பார்த்தீர்களா என்று கேட்டேன். பார்க்க நேரம் இல்லை. சித்துள்பவ்வைக்கு போய்த் திரும்ப வேண்டும் என்று சொல்லி விட்டு அங்கிருந்து நகர்ந்தனர்.

அங்கிருந்து வெளியே வந்து தட்டையான பாறைப் பகுதிக்கு வந்தோம். பறையின் நடுப்பகுதியில் ஓர் மேடையில் அமர்ந்த நிலையில் சிறிய புத்தர் சிலை ஒன்று காணப்பட்டது. பாறையின் கீழ்ப்பக்கம் ஓர் நீர்ச்சுனை காணப்பட்டது. அதனருகில் இன்னொமோர் குகை.

அக்குகையின் முன்பக்கம் களிமண் சுவரும், ஓரத்தில் கதவும் காணப்பட்டது. மலைப்பாறையோடு இணைத்து கூரையும் போடப்பட்டிருந்தது. அது பிக்குகள் தங்கும் குகை. இங்கும் கல்வெட்டு பொறிக்கப்பட்டிருந்தது.

அக்குகையின் பின்பக்கம் இன்னுமோர் கற்குகை காணப்பட்டது. அதிலும் முன்பக்கம் களிமண் சுவர் கட்டப்பட்டிருந்தது. நடுவில் சிறிய கதவும், இரண்டு பக்கமும் ஜன்னல்களும் காணப் பட்டன. இன்னும் சில குகைகள் பெரிய மலையின் பின்பக்கம் உள்ள காட்டில் உள்ளதாக சாரதி சொன்னார். பார்க்கக் கூடிய கற்குகைகள் எல்லாவற்றையும் பார்த்து விட்டேன். மொத்தமாக 7 கற்குகைகள், 5 கல்வெட்டுக்களைப் பார்த்த திருப்தி மனதை நிறைத்தது. ஆனாலும் சிவ பூமியின் சுவடுகள் எதையும் காணவில்லையே என்ற வேதனையும் இருந்தது.

மலையேறி, காடுகளுக்குள்ளும், பற்றைகளுக்குள்ளும் அலைந்து திரிந்த களைப்பில் போத்தலில் இருந்த நீரைக் குடித்தேன். சாரதிக்கும் கொடுத்தேன். வேண்டாம் உங்களுக்குத் தேவைப்படும், ஆட்டோவில் தண்ணீர் போத்தல் உள்ளது, நான் குடித்து விட்டு வருகிறேன், நீங்கள் தூபியைப் பாருங்கள் என்று சொல்லி விட்டு சாரதி சென்று விட்டார்.

தூபி இருக்கும் பகுதிக்குச் சென்றேன். சாதாரணமாக தூபியின் அருகில் தான் பண்டைய சிதைவுகளின் எச்சங்கள் காணப்படும். 5 அடி உயரமான, சதுரமான மேடை மீதி தூபி அமைக்கப்பட்டிருந்தது. அதன் முன்பக்கம் பழமை வாய்ந்த செங்கல் கைப்பிடி வரிசை, கல் படிகள் ஆகியவை காணப்பட்டன. மேடையின் வலது பக்கம் நேரான, நேர்த்தியான ஓர் கற்தூண் நாட்டப்பட்டிருந்தது. அது சற்று வித்தியாசமாகத் தென்பட்டது. அருகில் சென்று பார்க்கலாம் என நினைத்துக் கொண்டு மேடையில் ஏறி இடது பக்கமாகச் சுற்றி வந்தேன். சில பழமை வாய்ந்த ஆசனக் கற்கள் காணப்பட்டன. வலது பக்கம் வந்தேன். அந்த நேரான, நேர்த்தியான தூண் தெரிந்தது. தூணின் அருகில் நெருங்கியவுடன் பேரானந்தம் அடைந்தேன். நான் வந்த நோக்கம் நிறைவேறி விட்ட மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆம், அது சாதாரண தூண் அல்ல. எட்டுப்பட்டைகள் செதுக்கப்பட்ட தாரா லிங்கம். 5 அடி உயரத்தில், மிகவும் சிதைந்த நிலையில், கரடு முரடாகக் காணப்பட்டது.




பல்லவர் காலத்தில் தான் தாரா லிங்கங்கள் செதுக்கப்பட்டு கோயில்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டன. காஞ்சிபுரத்தில் உள்ள கோயில்களில் தாரா லிங்கங்கள் உள்ளன. மாமல்லபுரத்தில் புலிக்குகையின் அருகில் ஓர் தாரா லிங்கத்தைப் பார்த்துள்ளேன். அது போன்ற ஓர் தாராலிங்கத்தை தென்னிலங்கைக் காட்டில் பார்ப்பேன் என்று கொஞ்சம் கூட நினைக்கவில்லை.

தாராலிங்கத்தை பல கோணங்களிலும் புகைப்படம் எடுத்துக் கொண்டேன். அங்கிருந்து பார்க்கும் போது கீழே குளம் அழகாகத் தெரிந்தது. அதையும் படம் பிடித்துக் கொண்டேன். சாரதி ஓடி வந்தார். 2 மணியாகி விட்டது. யானைகள் வரும் நேரம். விரைவாகப் போய் விடுவோம் என்று கூறினார். ஓடிப்போய் ஆட்டோவில் ஏறினேன். அங்கிருந்து மின்னல் வேகத்தில் விரைந்தது முச்சக்கர வண்டி.

மகுல் மகா விகாரையில் உள்ள மலைக்குகைகளில் 11 பிராமிக் கல்வெட்டுகள் காணப்படுகின்றன. இவை பற்றி பேராசிரியர் பரணவிதான தனது நூலில் குறிப்பிட்டுள்ளார். இவற்றில் 5 கல்வெட்டுக்களில் சிவன், நாகம், சுவாமி மற்றும் தமிழ் சொற்கள் ஆகியவை பொறிக்கப்பட்டுள்ளன. இவற்றில் சிவன், மகேசன் எனும் பெயர்கள் பொறிக்கப்பட்ட இரண்டு கல்வெட்டுகளும், நாகம் எனப் பொறிக்கப்பட்ட ஒரு கல் வெட்டும், சுவாமி எனும் பதம் பொறிக்கப்பட்ட 2 கல்வெட்டுக்களும், பெருமகன் எனும் தமிழ்த் தலைவன் பற்றிய இரண்டு கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. இக்கல்வெட்டுகள் கூறும் செய்திகள் மூலம் இங்கு சிவன் மற்றும் நாக வழிபாடு நிலவியமையும், முனிவர்கள் மற்றும் தமிழ் பிரதானிகள் வாழ்ந்து ள்ளமையும் உறுதியாகத் தெரிகின்றது.

அந்த ஐந்து கல்வேட்டுக்களிலும் பின்வருமாறு பொறிக்கப்பட்டுள்ளது.

1)கபதி கனகச வெமருக்கனசிவச லேன சகச

**பொருள் -** வே ம ருக் கா சின் கணக்காளர், குடும்பத்தலைவன்




இன்று நடந்த சம்பவங்களை அசை போட்ட வண்ணம் ஆட்டோவில் திரும்பிக் கொண்டிருந்தேன். முக்கால் மணி நேரத்தில் யோத வெவ சந்திக்கு வந்து விட்டோம். அங்கிருந்து பத்து நிமிடத்தில் திஸ்ஸ மகாராமையில் என்னைக் கொண்டு வந்து விட்டார் சாரதி. இன்று எனது ஆய்வுக்கு முழு ஒத்துழைப்பைத் தந்த அந்த இளவயது ஆட்டோ சாரதிக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து விட்டு, காலையில் அவர் கேட்ட தொகையை விட மேலதிகமாக சிறு தொகையை சேர்த்துக் கொடுத்தேன். மகிழ்ச்சியோடு என் முகத்தைப் பார்த்து நன்றி தெரிவித்து விட்டு அங்கிருந்து சென்றார் சாரதி. கல்வெட்டுக்களைப் பார்த்த சந்தோஷமும், அதைப் பார்க்கச் சென்ற இடத்தில் சிவபூமியின் ஓர் அறிய பொக்கிஷத்தைக் கண்ட மகிழ்ச்சியும் இன்றைய நாளை ஓர் சிறப்பான நாளாக்கி விட்டது..

சிவனின் குகை சங்கத்திற்கு..

2) பருமகதிசஹ புத்தபருமக நாக சபுத்தநாகச

**பொருள்-**பெருமகன் தீசனின் புத்திரன், பெருமகன் நாகனின் புத்திரன், நாகன்..

3) பத்தவசஹ கபத்தபுசஹ க உபசிக சோனய க லேன-

உபசிக சோனைய லேன

**பொருள்-**சுவாமி வெஸ்ஸவினதும்,சுவாமி புஸ்ஸவினதும், பெண் பக்தை சோணாவினதும் குகை.பெண் பக்தை சோணாவின் குகை.

4)பத்தசுமனஹ... அப்புமஹச... நம...சகச..

**பொருள்-**சுவாமி சுமணவின் ....மகேசன்....பெயர்...சங்கத்திற்கு...

5)பருமகஅயிமர புத்தபருமக சுடி திச புத்தபருமகசுடி திச லேன அகட்ட அனகட்ட ...

**பொருள்-**பெருமகன் அயிமரனின் புத்திரன், பெருமகன் சூள தீசனின் புத்திரன், பெருமகன் சூளதீசனின் குகை, அவன் இருக்கின்ற போதும், இல்லாத போதும் நான்கு காலாண்டிற்கு...

மகுள் மகா விகாரைப் பகுதியில் பரவலாக மலைப்பாறைகள் அமைந்துள்ளன. பாதையின் இடது பக்கத்திலும், வலது பக்கத்திலும் சுமார் ஒரு கி.மீற்றர் தூரம் வரை மலைப்பாறைகள் காணப் படுகின்றன. இப்பகுதி முழுவதும் கற்புருவங்கள் வெட்டப்பட்ட ஏராளமான கற்குகைகள் காணப்படுகின்றன.

மகுள் மகா விகாரைப் பகுதியைச் சுற்றி பல தொன்மை வாய்ந்த இடங்கள் அமைந்துள்ளன. அவை கல்கடுவ, கல்கே, பம்பேவ, ஜம்புரகல, குருளுகேம ஆகிய இடங்களாகும். பண்டைய காலத்தில் சைவ சாம்ராஜ்யமாக விளங்கிய இவ்விடங்கள் யாவும் தற்போது யாள வன விலங்குகள் சரணாலய காட்டின் உள்ளே மறைந்து கிடக்கின்றன.

இன்றைய பயணத்தில் நான் வந்த நோக்கம் முழுமையாக நிறைவேறிய பேரானந்தத்தில்





# அம்பலத்தானும் ஆடற்கலையும்

தமிழருக்குரிய சாஸ்திர நடனமாகிய பரதநாட்டியம் நீண்ட வரலாறு கொண்டது. அதன் அமைப்பும் பெயர்களும் காலந்தோறும் மாற்றமடைந்து வந்துள்ளன. சங்க காலத்தில் இது கூத்து, ஆடல் போன்ற சொற்களாலும் ஆடுமிடம் 'ஆடுகளம்' எனவும் அழைக்கப்பட்டன. பின்னர் இது நடனம் எனவும் ஆடுமிடம் அரங்கம் எனவும் அழைக்கப்பட்டன.



சிலப்பதிகாரத்தின் நடனசிகாமணியான மாதவி ஆடிய ஆடல்கள் சமயத் தொடர்புடையவை. அவை யாவன முருகன் ஆடிய குடைக் கூத்து துடி, சிவபிரான் ஆடிய கொடுகொட்டி, பாண்டுரங்கம் கண்ணன் ஆடிய அல்லியம் ,மல், குடக்கூத்து, கொற்றவை ஆடிய மரக்கால், இந்திராணி ஆடிய கடையம், மன்மதன் ஆடிய பேடு, திருமகள் ஆடிய பாவை எபனவாம். எனவே நடனம் சமயச்சார்புள்ளதாகவும் நிலவி வந்துள்ளமை கவனித்தற்பாலது.

பொதுவாக நோக்கும் போது பரதசாஸ்திரத்தைப் பின்பற்றி உருவாக்கப்பட்ட நடனக்கலையே பரதநாட்டியமாகும் , இன்றியமையாத அம்சங்களான பாவம், ராகம், தாளம் ஆகியனவற்றையே பரத எனும் பதத்திலுள்ள ப, ர, த என்ற மூன்று எழுத்துக்களும் குறிக்கின்றன என ஒருசாரார் கருதுகின்றனர். இந்தியாவின் இன்னொரு பெயரான பாரத அல்லது பரத எனும் பெயராலும் இது வழக்கிலேற்பட்டிருக்கலாம் என பிறிதொருசாரும் கருதுகின்றனர்.



பரதசூடாமணி
**கௌசலா ஆனந்தராஜா**
பிரான்ஸ்

இந்நடனம் சமீபகாலந் தொட்டுத்தான் பரதநாட்டியம் என அழைக்கப்பட்டு வருவதாக கருதப்படுகிறது.

சென்ற நூற்றாண்டின் முற்பகுதியில் இதன் மறுமலர்ச்சிக்கு அயராது செயலாற்றிய, இ.கிருஷ்ணஐயர் சதிர் என அக்காலகட்டத்தில் அழைக்கப்பட்டு வந்த இந்த நடனத்தினை பரதநாட்டியம் என அழைத்து, இப்பெயர் பரவலாக வழங்க வழிகோலினார் எனக் கூறப்படுகிறது. இம் முயற்சிக்கு ஸ்ரீமதி. ருக்மணிதேவி அருண்டேல் போன்றோர் பேராதரவும் ஊக்கமும் அளித்தனர். பரதம், பரதநாட்டியம் எனும் பதங்கள் தமிழிலக்கியம், கல்வெட்டு போன்றவற்றில் இதற்கு முன்பே வழக்கிலிருந்து வந்துள்ளன. உதாரணமாக குமரகுருபரரி சகலகலாவல்லி மாலையில் பண்ணும் பரதமும் எனும் பதங்கள் குறிப்பிடத்தக்கவை. 15ம், 16 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த கர்நாடக இசையின் பிதாமகரான புரந்தரதாசரின் கீர்த்தனை ஒன்றிலே பரதநாட்டிய என்ற பதமே வந்துள்ளது. சங்ககாலம் தொட்டு இந்நடனம் பல காலகட்டங்களிலே வெவ்வேறு பெயர்களால் அழைக்கப்பட்டு வந்துள்ளது.

சங்ககாலத்திலும் அதனை அடுத்த காலப்பகுதியிலும் கூத்து ஆடல் எனவும் பின்னர் நடனம், நாட்டியம் தேவரடியார் ஆடல், சதிர் எனப்பலவாறு அழைக்கப்பட்டு வந்தது. 20ம் நூற்றாண்டிலேற்பட்ட மறுமலர்ச்சிக்கு முன் இது கீழ்நிலை அடைந்திருந்தமையால் இதன் சிறப்புகளைப் பலர் அறிந்திலர். இதனை எள்ளி நகையாடினர். ஆனால் மறுமலர்ச்சிக்குப் பின்னர் நிலைமை நன்கு மாறிவிட்டது. இந்நடனத்தின் பிரதான அம்சங்களை நோக்கும் போது நிருத்த, நிருத்தியம் எனும் இருபெரும் பிரிவுகளை கொண்டதாகும். நிருத்தம் என்பது கருத்துக்களைப் புலப்படுத்தாத





அபிநயமற்ற அங்க அசைவுகளைக் கொண்ட ஆடல் ஆகும். நிருத்தியம், கருத்துக்களைப் புலப்படுத்தும் ரசங்கள் நிறைந்த ஆடல் ஆகும். நடனக்கலை நிகழ்ச்சி நிரலிலே மேற்குறிப்பிட்ட இரண்டும் இடம்பெறும் .இது ஆடல், நடிப்பு, பல அங்க அசைவுகள், வாய்ப்பாட்டிசை, வாத்திய இசை முதலியன ஒன்றிணைந்த கூட்டுக் கலையாகும். பண்ணிசையும் கர்நாடக இசையும் இதற்குரிய இசைவடிவங்களாகும். ஆண்களுக்குரிய உத்வேகமுள்ள தாண்டவம், பெண்களுக்குரிய மென்மையான நளினமான லாஸ்யம் என இருவகையாக இது ஆடப்பட்டாலும், காலந்தோறும் ஆண்கள் தாண்டவம் மட்டுமன்றி லாஸ்யத்தையும், பெண்கள் லாஸ்யத்தை மட்டுமின்றி தாண்டவத்தையும் ஆடிவந்துள்ளனர். இதுஒரு சாஸ்திரக் கலையாகக் குறிப்பிட்ட வரையறையிலான விதிகள்,வரம்புகள் ஆகியவற்றிற்கு ஏற்பவே ஆடப்படும்.

தொடரும்....



# கொறோனாவுடன் பேசினேன்

நுண்ணறிவு கொண்ட, நுண் உயிரே
மன்னுயிரை மதி என்றேன்.

மானிடத்தின் மாண்பு மறந்து
மண்ணுலகின் மகிமை புரியா
மானிடனே!
உனக்கேன் இந்தாசை.
நுண்ணுயிரின் பரிகாசம் இது.

மண்ணுலகின் வாழ்வு மலர,
வளம் பெருக, வற்றாத செல்வம்
செழிக்க,
பரமார்த்தம் கொண்டு
பாங்குடனே பணிசெய்யும் -எம்மை
படையறுதல்சரிதானா - என்றேன்.
பதிலுரைத்த என்பதிலை ,
பரிகாசம் செய்தது,

படைத்தலின்பாங்கறியாபறவாதி-உந்தன்
பாழ்படுத்தல் தாங்காது
பாரிடம் வந்தேன் நான்.

எப்போது நீ போவாய் என்றெனக்குப்
பகிர்வாயோ?

இயற்கை படைத்த,
இவ்வுலகஉயிர்கள் எல்லாம்
இணைந்து வாழ,
அர்ப்பணம் கொண்டரசர்
அரசளிக்கும்காலமதில்,
இயற்கையின் மயக்கத்தைப்
போற்றிசைத்துப்போகபூமிஆக்குகையில்
பாழ்வெளிக்குப்பறந்திடுவேன்,
பாங்குடனேவாழ்வீர்அந்நாள்.

வேள்பாரி போன்ற
வேந்தர்ஆள்வதெப்போ?
ஆணவச்செருக்கற்ற ஆட்சியாளர்,
அதிகாரக் குறிக்கோளற்ற,அரசதுறை,
ஒன்றே குலம் ஒருவனே தேவன் - என
உலகம் உணர்வதெப்போ?

மானிடனே!! கேள்!!!
ஆக்கலும், அருளலும் என் செயல்
-அதைக்
காப்பதும்வளர்ப்பதும் உங்கள் பணி.
இதை உள்ளுதல் உங்கள் கையில்
என் பணி எதுவும் இல்லை
இது புரியாமானிடர்க்கு
வாழ்வெதற்கு!உலகெதற்கு?

உணர்ந்து கொண்டேன்.
மானிடத்தை எண்ணி மனம் நொந்தேன்.
வேதனையில் தலை குனிந்தேன்
நிமிர்வதெப்போ?

சு.இராசரத்தினம்
கனடா.





சைவப்புலவர்
சித்தாந்தரத்தினம்
கந்தையா பத்மானந்தன்

# பழந்தமிழர் வாழ்வில் மனித உரிமைகள்

**அறிமுகம் :**

மனிதர்கள், மனிதர்களாகப் பிறந்த காரணத்தினால் அவர்களுக்குக் கிடைத்த அடிப்படையான, விட்டுக் கொடுக்க இயலாத, மறுக்க முடியாத சில உரிமைகள் மனித உரிமைகள் என வரைவிலக்கணப்படுத்தலாம் .மனித உரிமை தொடர்பான சிந்தனை வளர்ச்சியில் முதலாவது எழுதப்பட்ட ஆவணமாக கி.மு 539 ல் பாரசீகப் பேரரசன் சைரஸ் இனால் கையெழுத்திடப்பட்ட நோக்கப் பிரகடனம்(The Cyrus Cylinder)மனித உரிமை ஆய்வாளர்களினால் கொள்ளப்படுகின்றது .இப்பிரகடனத்தில் பாபிலோனியாவில் உள்ள அடிமைகளை விடுவிக்க ஆணையிட்ட மன்னன் அவர்களுக்கு எல்லாச் சுதந்திரங்களும் இருப்பதாக பிரகடனம் செய்தான் .இதன்பின் மாமன்னன் அசோகனின் ஆணை(கிமு 272-231)முக்கியமான மனித உரிமை ஆவணமாக கருதப்படுகின்றது .இதற்கு அடுத்தபடியாக கிபி 622ல் முகமது நபியால் எழுதப்பட்ட மதீனாவின் அரசியல் சட்டம் கருதப்படுகின்றது .

தொடர்ந்து 1215ல்பிரித்திதானியாவில் உருவாக்கப்பட்ட ‘சுதந்திரத்துக்கான பெரும் பட்டயம் ( Magna Carta),1525ல் ஜேர்மனியில் உருவாக்கப்பட்ட விவசாயிகளின் கோரிக்கைகளை உள்ளடக்கிய ‘கருப்புக் காட்டின் பன்னிரண்டு அம்சங்கள்’ (Twelve Articles of the Black Forest),1689 ல் வெளிவந்த பிரித்தானிய உரிமைகள் சட்டமூலம்அதாவது ‘குடிமக்களின் உரிமைகள், சுதந்திரங்கள், அரசுக்கான வாரிசு உரிமை தீர்மானித்தல் ஆகியவற்றுக்கான சட்டம்×, 1776ல் வெளிவந்த ஐக்கிய அமெரிக்க விடுதலைக்கான அறிக்கை ,1789 ல் உருவாக்கப்பட்ட பிரான்சு தேசிய சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனிதர்களுக்கும் குடிமக்களுக்குமான உரிமைகள் அறிக்கை,1791ல் உருவாக்கப்பட்ட அமெரிக்காவின் அரசியல் சாசனம் , 1864 ல் வெளியான முதலாவது ஜெனீவா சமவாயம் , 1919 ல் செய்யப்பட்ட நாடுகள் சங்கம் உருவாவதற்கு காரணமான வெர்சாயில் ஒப்பந்ததம் ,1948ல் வெளிவந்த சர்வேதேச மனித உரிமை பிரகடனம் என்பன மனித உரிமை சிந்தனை வளர்ச்சியின் முக்கிய படிக்கற்களாகும் .

**இயற்கை உரிமைகள்,மனித உரிமை வகைகள்**

**அடிப்படை மனித உரிமைகள்:**

மனிதர்கள் மனிதர்களாகப் பிறந்தால் அவர்களுக்கு இயல்பாக, இயற்கையாக இருக்கும் உரிமைகள் இயற்கை உரிமைகள் எனக் கொள்ளப்படுகின்றன .பொதுவாக மனித உரிமைகள் குடியியல்உரிமைகள்,அரசியல் உரிமைகள்,பொருளாதார உரிமைகள், சமூக உரிமைகள் மற்றும் கலாச்சார உரிமைகள் என வகைப்படுத்தப்படுகின்றன . ஒரு நாட்டின் அரசியல் அமைப்பில் உறுதிப்படுத்தப்படுகின்ற மனிதஉரிமைகள் அடிப்படை மனித உரிமைகள் என கொள்ளப்படும் .மனித உரிமைகளை நிலை நாட்டுவதற்கான பொறிமுறைகள்தேசிய ரீதியில் ,பிராந்திய ரீதியில், சர்வதேச ரீதியில் காணப்படுகின்றன .

**பழந் தமிழர்:**

பொய் அகல, நாளும் புகழ்
விளைத்தல் என் வியப்பாம்?
வையகம் போர்த்த, வயங்கு ஒலி நீர் –
கையகலக்
கல் தோன்றி மண் தோன்றாக்
காலத்தே, வாளோடு
முன் தோன்றி மூத்த குடி!
(புறப்பொருள் வெண்பா மாலை)

*கல் தோன்றி அதாவது மலைப் பிரதேசங்களை அண்டியதாக முல்லை,குறிஞ்சி எனும் நிலவகைமையும் ,மண் தோன்றா அதாவது வயல் சார்ந்த மருதம் எனும் நிலவகைமையும் தோன்றுவதற்கு முன்பே கையில் வேல்-வில்-வாளோடு இருந்த ஆதி குடிகள் தமிழர் என்பது இப்பாடலின் பொருள் .இன்னும் சொல்லப்போனால் ஐவகை நிலங்களின் பகுப்பு தோன்று முன்னே தமிழர்கள் தோன்றி விட்டார்கள் .இக்காரணத்தினால் தமிழர்களை பழந்தமிழர்கள் எனலாம்.இத்தகைய பழந்தமிழர் வாழ்வில் மனித உரிமைகள் எவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டன ,அவற்றிற்கான ஆதாரங்கள் ஏதாவது உள்ளனவா என ஆராய்வது அவசியமாகிறது .*

**இயற்கை உரிமைகள் (Natural Rights):**

வெட்சி நிரை கவர்தல்; மீட்டல் கரந்தையாம்
வட்கார் மேல் செல்வது வஞ்சி ; உட்காது
எதிர்ஊன்றல் காஞ்சி ; எயில்காத்தல் நொச்சி
அது வளைத்தல் ஆகும் உழிஞை – அதிரப்
பொருவது தும்பையாம் ;
போர்க்களத்து மிக்கோர்
செரு வென்றது வாகையாம்(புறம் -09)



*என்றுவெட்சித் திணை, வஞ்சித் திணை, உழிஞைத் திணை, தும்பைத் திணை, வாகைத் திணை, காஞ்சித் திணை, பாடாண் திணை என எழுவகை புறப்பொருள் திணைகளை வகுத்த போதும்*

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே
( தொ .பொருள். 05)

*என்று தொல்காப்பியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என அகத்திணைக்குரிய நால்வகை நிலங்களை வகுத்த போதும் பின்*

முல்லையும், குறிஞ்சியும்,
முறைமையின் திரிந்து
நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்துப்
பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்.1
(காடுகாண் காதை 11. 64.66)

*என்று சிலப்பதிகாரம் முல்லையும், குறிஞ்சியும் காலப்போக்கில் முறைமுறை திரிந்து, நல்லியல்பு இழந்து, வெம்மையால் வளமை குன்றிப் போய் ஐந்தாவது நிலமாகிய பாலை தோன்றியது என்றும் கூறி அங்கு வாழும் மக்களின் கடமைகளை ,தொழில்களை ,பண்பாட்டு ,வாழ்வியல் முறைகளை வகுத்து சொன்னபோதும் அந்தந்த மக்களுக்கு இயல்பாகவே அமைந்த இயற்கை உரிமைகளை அதாவது வாழிடத்தை கொண்டிருக்கும் உரிமை ,தொழில் செய்யும்உரிமை , குறித்த பண்பாட்டு ஒழுங்குமுறைகளை பின்பற்றும் உரிமை, திருமணம் செய்வதற்கான உரிமை போன்ற பல்வேறு உரிமைகளை சொல்லாமல் சொல்லி நிற்கின்றன .*

**உயிர் வாழும் உரிமை (Right to life):**

ஒன்ற றிவதுவே உற்ற றிவதுவே,
இரண்டறிவதுவே அதனொடு நாவே
மூன்றறிவதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே
ஐந்தறிவதுவே அவற்றோடு செவியே
ஆறறிவதுவே அவற்றொடு மனனே!
நேரிதின் உயர்ந்தோர் நெறிப்படுத்தினரே
(தொல்: மரபியல்.571)

*என அறுவகை உயிர்ப்பாகுபாடு பற்றி உயிரின் பல்வகைத் தன்மை பற்றி தொல்காப்பியம் பேசுகிறபோது உயிர் என்பது வாழுவது, வாழக்கூடியது ,வாழ வேண்டியது என்ற கருத்தை வலியுறுத்துகிறது .இந்த உயிர் வாழும் உரிமையை சிலப்பதிகாரம் ஊன் ஊண் துறமின்; உயிர்கொலை நீங்குமின்(சிலம்பு.வரந்தரு*

கலை பாடல் உயிர் வாழும் உரிமையை உறுதி செய்கிறது.

பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் குருசேத்திரத்தில் நடந்த போரில் ஆயிரக்கணக்கானோர் காயம் பட்டு உயிர்பிழைக்க துடித்தபோது சேரமான் பெருஞ்சோற்று உதியன் காயம் பட்ட அனைவரையும் அழைத்து வந்து அவர்களுக்கு உணவு கொடுத்து அவர்களின் உயிர் வாழும் உரிமையை உறுதி செய்தான் என்ற செய்தியை முரஞ்சியூர் முடிநாகராயர் கீழ் வருமாறு பதிவு செய்கிறார் .

**அலங்குளைப் புரவி ஐவரோடு**
**சினைவி நிலந்தலைக் கொண்ட**
**பொலம் பூந்தும்பை ஈரைம்**
**பதின்மரும் பொழுது களத்து**
**ஒழியப் பெருஞ்சோற்று**
**மிகுபதம் வரையாது கொடுத்தோய்**
**(புறம். 02)**



காதை .189) என்று மிக அழகாக சொல்கிறது .அதாவது ஒரு உயிரை கொல்லாது விடுவதன் மூலம் அதன் வாழும் உரிமையை உறுதி செய்யுங்கள் என்று கூறுகிறது .மேலும் சிலப்பதிகாரம் பிழை உயிர் ஓம்புமின் (சிலம்பு .வரந்தருகாதை .195)என்று பிழை செய்த உயிர்களை மன்னிக்கும்படி வேண்டுகின்றது .மேலும் பஞ்சமா பாதகங்கள் இன்னொரு உயிரின் வாழும் உரிமையை பாதிக்கும் என்பதால் சிலப்பதிகாரம் கள்ளும், களவும், காமமும், பொய்யும்,வெள்ளைக் கோட்டியும், விரகினில், ஒழிமின் என்று அறிவுறுத்துகிறது .

ஒரு மனிதனின் உயிர்வாழும் உரிமை நிலை நிறுத்தப்படவேண்டுமாயின் அவனது அடிப்படைத்தேவைகளான உணவு ,உடை ,உறையுள் சரியான முறையில் உறுதி செய்யப்படவேண்டும் .குறிப்பாக பசித்தோர்க்கு உணவு அளிப்பதன் மூலம் அவர்களின் உயிர் வாழும் உரிமையை உறுதி செய்யமுடியும் .

**மொய்த்த மூ அறு பாடை மாக்களில்**
**காணார் கேளார் கால் முடம் ஆனோர்**
**பேணா மாக்கள் பேசார் பிணித்தோர்**
**படிவ நோன்பியர் பசி நோய் உற்றோர்**
**மடி நல்கூர்ந்த மாக்கள் யாவரும்**
**பல் நூறாயிரம் விலங்கின் தொகுதியும்**
**மன் உயிர் அடங்கலும் வந்து ஒருங்கு ஈண்டி**
**(மணிமேகலை 4096/4102)**

என்று எல்லா வகையான பசித்தோரையும் உணவு அருந்த வருக என்று கூறுவதன் மூலம் இம் மணிமே

**தொடரும்....**



பண்டைய
திருக்கேதீஸ்வர
லிங்கம்.
கேது,
இராவணன்
மனைவி
மண்டோதரி,
மகன் இந்திரஜித்
வழிபட்டதாகக்
கருதப்படுவது



பொலநறுவையில்
1000 வருடங்கள்
பழமையான
கருவறை
லிங்கம்